சின்னஞ் சிறு கிளியே...

ஜாதி மல்லிப் பூக்களை இதழ் இதழாய் பிரித்து மலையாய் குவித்து வைத்தாற் போல் வெண்மைநிற அரிசிப்பொரிகள் குவிந்திருக்க, சூடான வெல்லப்பாகை ஊற்றி கைபொறுக்கும் சூட்டோடு மளமளவென உருட்டிப்போட்டுக் கொண்டிருந்தாள் பத்மினி.

பொரி உருண்டைகள் ஒருபுறமாய் சேர்ந்து கொண்டிருக்க, உள்ளங்கை சூடுதாளாமல் கன்றிச் சிவந்தது. அதை அலட்சியம் செய்துவிட்டு தன்வேலையில் முனைப்பாய் ஈடுபட்டிருந்த பத்மினி இதமான மஞ்சள் நிற அழகுப்பதுமை. மை தீட்டப்படாத கண்கள் நீண்டு மீனை நினைவுபடுத்திக்கொண்டிருந்தது. மெலிதாய் வளைந்த வானவில் புருவங்கள்.

பட்டுப்போன்ற வலக்கன்னத்தில் கடுகைவிட சற்று பெரிதாய் மிளகை விட சிறியதாய் ஒரு மச்சம். அது அவளது அழகிற்காக பிரமனே வைத்துவிட்ட திருஷ்டிபொருட்டு என்பாள் பாட்டி. கழுத்தில் சின்னதாய் கருகுமணி, கைகளில் வெள்ளையும் கருப்பும் கலந்த கண்ணாடி வளையல்கள்.

காதில் மட்டும் சின்னதாய் தங்க வளையம். காதோரம் சுருண்டு கிடந்த கூந்தலுக்கிடையில் புகுந்து கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருந்தது. வெகு சுமாரரான ஆடைகள். ஆனால் கிழிசல் இல்லாமல் இருந்தது.

''பொரி உருண்டை, கடலை உருண்டை செய்யத்தானே போற? அழுக்கு, எண்ணெய் பிசுக்கு எல்லாம் ஒட்டும். புதுத்துணி போட்டு ஏன் பாழாக்கணும். இந்த மாதிரி துணிபோட்டாத்தான் அழுக்கும் படாது. கண்டவர் கண்ணும் படாது. வெளியே போகும் போது அடுத்தவர் கவனம் நம்மபக்கம் திரும்பக்கூடாது.

புது துணிகளை அப்படியே சேர்த்து வைச்சா கல்யாணத்தப்ப துணிமணி எடுக்கிற செலவு மிச்சமாகுமே''-என பலகாரணங்களை சொல்லி அனுப்புவாள் பாகீரதி.

அக்கா சொல்வதைத் தட்டாமல் கேட்பது பத்மினியின் வழக்கம். தன் பத்தாம் வயதில் மூளைக்காய்ச்சலில் படுத்த அம்மா நிரந்தரமாய் கண்மூடிவிட அக்காதான் எல்லாமுமாப்போனாள். அதனால் அன்றிலிருந்து இன்றுவரை அக்காதான் அம்மா. அவள் வார்த்தைகள் தான்

-சொ.கலைவாணி சொக்கலிங்கம்

வேதவாக்கு.

பாகீரதியும் தங்கையை வெகுகவனமாய் பார்த்துக் கொள்வாள். கண்டிப்புடன் கூடிய அன்பு. தன் மீதுள்ள அக்கறை என்பதால் அந்தக் கண்டிப்பை ஒரு போதும் வெறுக்கமாட்டாள் பத்மினி.

அக்காவின் சொல்படி சற்று நைந்த துணிமணிகளை உடுத்திக் கொண்டு, எண்ணெய் தேய்த்து ஒட்டிப்பின்னிக்கொண்டு கழுத்தில் வெறும் பாசிமணியோடு வேலைக்கு வந்தும் கணேசனின் கவனம் அவள் மீது திரும்பியது தெரிந்ததும் காட்டுக்கத்தல் கத்திவிட்டாள் பாகீரதி.

அவளது கணவன் தயாளன் எத்தனையோ எடுத்துக்கூறியும் அவள் ஆத்திரம் அடங்கியபாடில்லை. பொம்பளைப்புள்ள சமாச்சாரம் இது. விளையாட்டு இல்ல. இவளை நல்லபடியா ஒருத்தன் கையில பிடிச்சுக் கொடுக்கிறவரை எனக்கு வயத்திலநெருப்பைக் கட்டிகிட்ட மாதிரி இருக்கு. இனிமே நீ வேலைக்கு போகவேண்டாம்.

''அக்கா! நான் எந்தத்தப்பும் பண்ணல. அந்த ஆள்கிட்ட பேசக்கூடமாட்டேன்''

''அவன்தானேடி அந்த மிட்டாய்க் கம்பெனி ஓனர்? பிறகெப்படி பேசாம இருப்பே?''

''அக்கா! அந்த ஆள் வாரத்தில ஒரு நாள் சம்பளம் கொடுக்க மட்டும் தான் வருவான். நான் இதுவரைக்கும் பேசினதே இல்ல. என்னை நம்புக்கா''

''நான் நம்புறேன்டி, ஆனா ஊர்உலகம் நம்பணுமே. நம்மைபத்தி ஒரு வார்த்தை பேசிட்டா அசிங்கமாகிடுமே''-ஒரு தாயாய் அவள் பதைபதைத்ததை எண்ணி மனம் பூரித்துப் போனது. தயாளன் மச்சினிக்கு உதவிக்கு வந்தான்.

''பாகீ! நீ நினைக்கிற மாதிரி எதுவும் நடந்துடலை. அந்த பையனுக்கு நம்ம பத்மினியை ரொம்பப் பிடிச்சிருக்காம். என்னை உங்க வீட்டு மாப்பிள்ளையா ஏத்துப்பீங்களான்னு எங்கிட்ட வந்து கேட்டான். நானும் சரின்னுட்டேன்''

''என்னது? சரின்னீங்களா? நீங்க எப்படி என்னைக்கேட்காம சம்மதிக்கலாம்?''

''ஸாரி பாகீ! உன்கிட்ட கேட்டிருக்கணும். ஆனா பொறுமையா சொல்லிக்கலாம்னு விட்டுட்டேன்.''

''எனக்கு இதுல சம்மதம் இல்ல. முடியாதுன்னு சொல்லிடுங்க.''

''ஏன் பாகீ? அவனுக்கு என்னகுறை? ஆளும் கண்ணுக்கு லட்சணமா இருக்கான். வருஷக்கணக்கா பார்த்து பழகியபையன். எந்த கெட்டபழக்கமும் கிடையாது. சொந்த தொழில் பண்றான். இதைவிட வேறென்ன வேணும்?''

''என்ன பெரிய சொந்தத் தொழில்? 'தேன்மிட்டாய், கடலை

உருண்டை, பொரி உருண்டை போட்டு விக்கிறான். இதுல என்ன
பெரிய வருமானம் வந்திடும்?''

''வருமானம் வராமலா எட்டுபேரை வெச்சு வேலைவாங்குறான்?
பத்து வருஷமா எவ்வளவு முன்னேறியிருக்கான். சொந்தமா வீடு வாங்
கியிருக்கான். இது எல்லாத்தையும் விட நம்ம பெண்ணை விரும்பி
கேட்கிறான். நிச்சயமா பத்மினி சந்தோஷமா இருப்பா''-தயாளனின்
உறுதியால், பாகீரதி மறுத்துப்பேச இயலாமல் போக, இன்னும் பத்து
நாளில் நிச்சயதாம்பூலம் என்ற அளவில் வந்தாயிற்று.

''பத்மினி இனிமே வேலைக்கு வந்து கஷ்டப்படவேண்
டாம்''-என்ற கணேசனின் வார்த்தைக்கு அனைவரும் ஒப்புக்கொண்
டனர். பத்மினியோ, ''இந்த வாரம் சம்பளம் வாங்கியபிறகு நின்றுவி
டுகிறேன்''-என்ற வேண்டுதலோடு பணிக்கு வந்திருந்தாள்.

இன்று சனிக்கிழமை. மாலை ஆறுமணிக்கு பணி முடிந்து போகும்
போது சம்பளம் கிடைத்து விடும். வழக்கமாய் சம்பளம் கொடுக்கும்
நாளன்று காலையிலேயே வந்துவிடும் கணேசன் இன்று இன்னும்
வரவில்லை. அதுகூட ஒருவகையில் நல்லது தான்.

வந்தால் சும்மாஇருக்கமாட்டான். அடுப்படியில் நிற்காதே. சூடாய்
எதையும் தொடாதே. கைசிவந்து விடும். முகம் கன்றிவிடும் என்
பான். மற்றவர்களின் கேலிபேச்சிற்கு ஆளாகி கூச்சப்படவேண்டும்.
அவன் இல்லையென்றால் வேலை சுலபமாய் தொய்வின்றி நடக்கி
றது.

வாங்கும் சம்பளத்திற்கு உழைக்க வேண்டாமா? தன் முன் இருந்த
பொரி குவியலை உருண்டையாய் பிடித்து முடித்த போது அடுப்பில்
நிலக்கடலை வறுபடும் மணம் நாசியை வருடியது. அடுத்தது கடலை
உருண்டையா?

'ஹோ'-வென்ற அலுப்புடன் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தை
பார்த்தாள். மணி மாலை ஐந்து. இன்னும் ஒரு மணி நேரம் இருக்
கிறதே. முதுகு வலித்தது. சற்று நேரம் எழுந்து நடக்கலாம் என எழ
முயற்சித்த போது பெரிய தாம்பாளத்தட்டில் வறுகடலை வந்தது.

''இந்தாம்மா! சூடு ஆறும்முன்னே உருண்டை பிடிச்சிடு''-என
கொண்டு வந்தாள் கனகம்.

''சரிம்மா! பாகு ரெடியாயிடுச்சா?''

''இதோ! இப்ப வந்திடும்''-என அவள் விலகு முன் வந்து நின்
றான் கணேசன். முகத்தில் அசாத்திய களைப்பு இருந்த போதும் அழ
காய்த்தான் இருந்தான்.

''கனகம்மா! கடலை உருண்டையை மணிகிட்ட செய்யச்சொல்
லுங்க. பத்மினி! நீ ஒரு நிமிஷம் வந்திட்டுபோ''-என்றவாறு தன்
அறையை நோக்கி நடந்தான் கணேசன்.

அவனது முகத்தில் வழக்கமான புன்னகை காணாமல் போயிருந்

தது. குரலில் கூட ஒருவித சலிப்போ வெறுப்போ குடியிருந்தது.
பத்மினி தயக்கமாய் எழுந்தாள்.

''அதான் கூப்பிடுறாரில்ல. போங்க. இனி வேலை நடந்த மாதிரி
தான்''-சலிப்பாய் முனகியவாறே கனகம் வறுகடலையை எடுத்துக்
கொண்டு மணியை நோக்கிச் செல்ல,லேசான அவஸ்தையோடு
கணேசனின் அறையை நோக்கி நடந்தாள்.

பழமையான ஓட்டுவீடுதான் அவர்களது மிட்டாய்க் கம்பெனியாக
மாறியிருந்தது. சிறிய சிறிய அறைகளைக் கொண்ட நீளமான வீடு.
அனைத்து அறைகளிலும் வேலை சுறுசுறுப்பாய் நடந்து கொண்டிருந்
தது. இதுதான் இந்தக் கம்பெனியின் முன்னேற்றத்திற்கான ரகசியம்.

உரிமையாளன் இருக்கிறானோ இல்லையோ யாரும் வேலையை
விட்டுவிட்டு அரட்டை அடிப்பதில்லை. அவரவர் வேலையில் கண்
ணாய் இருப்பார்கள். கணேசன் மீதுள்ள மரியாதையோ பணியாளர்
கள் மீது அவன் வைத்திருக்கும் பிரியமோ ஏதோ ஒன்று அவர்களை
அயராமல் உழைக்கவைத்தது.

சூடாய் செய்யப்பட்ட பொரி உருண்டைகளை கவரில் போட்டு
ஒட்டிக்கொண்டு இருந்த மகேஷ் நிமிர்ந்தான்.

''என்ன? பத்மினிக்கா! அண்ணன் வந்ததும் வராததுமா பார்க்க
வந்திட்டீங்க போல?''-குரலில் கேலி தொனித்தது.

''நானா ஒன்னும் வரல. அவர்தான் வரச் சொன்னாரு''

''ரெண்டும் ஒன்னுதானே.''

''டேய்! ஒழுங்கா வேலையக் கவனி''-என்றாள் சற்றே மிரட்ட
லாய்.

''சரிங்க மேடம். இனிமே முதலாளியம்மா நீங்கதானே. நீங்க செ
ால்றபடி தான் நாங்க நடக்கணும்''-என பவ்யமாய் கைகளை கட்டிக்
கொண்டான்.

''அங்கே என்ன பேச்சு? மகேஷ்! வேலையைக் கவனி'' அறைக்
குள் இருந்து கணேசனின் குரல் சற்று கோபமாய் வர, வாயை மூடிக்
கொண்டு மகேஷ் தன் பணியில் ஈடுபட, உதறும் உடலோடு அறைக்
குள் நுழைந்தாள் பத்மினி.

கையிலிருந்த மளிகைகடை பில்களை சரிபார்த்துக் கொண்டே,
நிமிர்ந்தும் பாராமல் அவளை அமரச்சொன்னான்.

''பரவாயில்ல ஸார்''

''என்ன?''-என்றவாறு நிமிர்ந்தான். கைகள் எதிரே இருந்த நாற்கா
லியைக் காட்ட, தயக்கமாய் அமர்ந்து கொண்டாள்.

''இப்ப என்ன சொன்னே?''

''வந்து.. பரவாயில்ல ஸார்ன்னு...''

''வந்து.. பரவாயில்ல ஸார்ன்னு...''-ல் அடுத்து: ''ம். ஸார்! ஸார்தானே நான்? அப்போ இன்னும் நான் உன் கண்
''ம். ஸார்! ஸார்தானே நான்? அப்போ இன்னும் நான் உன் கண்
ணுக்கு முதலாளியாத்தான் தெரியுறேன்?'' -அவனது குரலில் தெரிந்த

கடுமையில் குழப்பமாய் மிரண்டு போனாள்.

''ஸ..ஸார்?''

''லுக் பத்மினி!இப்போ நான் கேட்கிற கேள்விக்கு தயவு செய்து உண்மையான பதிலைச் சொல்லு''

''எ..என்ன கேட்கப் போறீங்க?''

''இந்தக் கல்யாணத்தில் உனக்கு சம்மதமா? இல்லையா?''

''என்ன ஸார்... திடீர்னு... இப்படி...''

''கேட்டதற்கு பதில் சொல்லு''-பட்டென சொன்னதும் திடுக்கிட்டாள்.

''ச..சம்மதம் தான்''

''உன் அக்காவுக்காகவோ மாமாவுக்காகவே பயந்திட்டு சொல்ல வேண்டாம். உம்மனசுல என்ன இருக்கோ அதை மட்டும் சொன்னாப் போதும்''

''ஸார்! கல்யாணம்றது வீட்டு பெரியவங்க பார்த்து முடிவு பண்றது. அவங்க விருப்பம்தான் என்விருப்பம்னு நான் எப்பவோ சொல்லிட்டேனே. எனக்கு எது நல்லதுன்னு அவங்களுக்கு தெரியாதா?''

''ஆனா வாழப்போறது நாமதானே?''

''அதுக்கு?''

''இதோ பார் பத்மினி! நான்.. நான் உங்கிட்ட கொஞ்சம் பேசணும்''

''சொல்லுங்க''

''வந்து... நான் கேட்கிறேன்னு தப்பா எடுத்துக்காதே. நீ நம்ம கம்பனியில வேலைக்கு சேர்ந்து ரெண்டுவருஷமாகப் போகுது. இதுக்கு முன்னால நீ எங்க இருந்தே?''

''கிராமத்தில.. எங்க பாட்டி வீட்டுல''

''அ..அங்கே இருந்து ஏன் இந்த ஊருக்கு வந்தே?'' -அவனது கேள்வியில் தயக்கமும் எதையோ தெரிந்துகொள்ளும் ஆர்வமும் தொனிக்க, பத்மினியின் புருவம் நெளிந்தது.

''என்ன விஷயம் ஸார்? எதுவா இருந்தாலும் சொல்லுங்க.''

''வந்து... பத்மினி... உனக்கு... முத்து... முத்துப்பாண்டியன்னு யாரையாவது தெரியுமா?''

''முத்துப்பாண்டியனா? யாரது?''

''நல்லா யோசிச்சுப்பாரு. இந்தப் பேரை எங்கேயாவது கேள்விப்பட்டிருக்கியா?''

''இ.இந்தப்பேரு... ம்ஹூம். கேள்விப்பட்டதில்ல''

''எந்த முத்துப்பாண்டியனையும் எனக்குத் தெரியாது''.

''உனக்குத் தெரியும். அவங்க உங்க ஊர்க்காரன்தான்''

''என்ன? எங்க ஊர்க்காரங்களா? யாரு?''-வியப்பாய்க் கேட்டாள்.

''அதான் கல்லுவீட்டு பாண்டியன்னு கூட சொல்வீங்களாமே''-அவன் நிதானமாய்க் கேட்டவாறே அவளைக் கூர்மையாய், பார்க்க,

களங்கமின்றிச் சிரித்தாள் பத்மினி.

''அட! அந்தப்பாண்டியா? ஓ! தெரியுமே.''

''தெரியுமா? இவ்வளவு நேரமா தெரியாதுன்னு சொன்னே?''

''ஸார்! எங்க தெருவில பெரிய கல்லு வீடு அவங்க வீடுதான். அவங்க அப்பாவைக் கூட கல்லுவீட்டுக்காரர்ன்னு கூப்பிடுவாங்க. அதே பேரு அவனுக்கு ஒட்டிகிச்சு. அவனோட முழுபேரு இதே இப்ப நீங்க சொன்னபிறகு தான் தெரியுது''-என்றாள் அதே சிரிப்போடு.

''அவன் ஆள் எப்படி இருப்பான்?''-இறுகிய குரலில் கேட்டவனை வியப்பாய் பார்த்தாள்.

''ஏன் ஸார்? பொண்ணு எதுவும் கொடுக்கப்போறீங்களா?''

''ம்.ம்''

''தாராளமா கொடுக்கலாம் ஸார். ரொம்ப நல்லவன். கடுமையான உழைப்பாளி. எப்பவும் உழைச்சிட்டே இருப்பான். பார்க்கக்கூட அழகாய்த்தான் இருப்பான்.''

''பிறகேன் அவனை விட்டுட்டு வந்தே?''-அதே குரலில் அவன் கேட்க, சில கணங்களுக்குப் பிறகே அந்தக் கேள்வியின் பொருள்புரிய, பத்மினி முகம் சட்டென மாறியது. அதுவரை இருந்த வெகுளித்தனம் மறைந்து போய், கடுமையாய் அவனை ஏறிட்டாள்.

''என்ன? இப்போ என்ன கேட்டீங்க?''

''இவ்வளவு அருமையான குணங்கள் உள்ளவனை ஏன் விட்டுட்டு வந்தே? அவன் படிக்காதவன்ற உண்மை அவன் கூட சுத்தும்போது தெரியலையா உனக்கு?''-கணேசன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, உஷ்ணமானாள் பத்மினி.

அமர்ந்திருந்த நாற்காலியை பின்னுக்கு தள்ளியவாறே ஆத்திரமாய் எழுந்தாள்.

''என்ன உளர்றீங்க?''

''நான் உளறுறேனா? எல்லாம் எனக்குத் தெரியும்? சும்மா நடிக்காதே''

''மிஸ்டர்! வார்த்தைய அளந்து பேசுங்க. என்ன தெரியும் உங்களுக்கு?''

''உன் கிராமத்து லீலைகள் எல்லாம்தான். ஒரு படிக்காத அப்பாவியை போலியா விரும்பி ஊர்முழுக்க சுத்திட்டு உங்க பிரச்சனை ஊர் முழுக்க தெரிஞ்சதும் நீ நல்லபிள்ளையா கிளம்பி இங்க வந்திட்டே. அந்த முட்டாப்பய உன் கால்ல வந்த விழுந்தானாமே? அதுக்கு நீ என்ன சொல்லி அவனை விரட்டின? படிக்காத உன்னை கட்டிக்க நான் என்ன முட்டாளான்னு கேட்டியாமே? இப்போ என்னை மட்டும் எப்படி ஒத்துக்கிட்ட? நானும் தான் நிறையபடிக்கல்ல. ஆனா நிறைய பணம் இருக்கு. ஒரு வேளை எம்பணத்தைப் பார்த்துதான் சம்மதிச்சியா?

நாளைக்கே என்னை விட படிச்சவனா இதைவிட பணக்காரனா எவனாவது கிடைச்சா என்னைக் கழட்டிவிட்டுடுவியா?''-அலட்சியமாய்க் கேட்டவனின் சட்டையைக் கொத்தாய்ப் பற்றினாள் பத்மினி.

''என்ன சொன்னே? என்னைப் பார்த்து என்ன வார்த்தை சொன்னே?''

''உண்மையைத் தான் சொல்றேன்.''

''என்ன உண்மை? நீ பார்த்தியா? அந்த பாண்டியனை பார்த்திருக்கியா?''

''இந்தக் கண்றாவிய நான் வேற பார்க்கணுமாக்கும். எல்லா செய்தியும் தானா காதுக்கு வந்திடுச்சி''-என்றவாறு அவளது கையை விலக்கினான்.

''கண்ணால் பார்ப்பதும் பொய்யுன்னு சொல்றது உனக்குத்தெரியாதா? நம்ம கண்ணால பார்க்கிறதே சிலசமயம் தவறாகிடும். ஆனா நீ யாரோ ஒருத்தர் சொன்னதை வெச்சு என்னையே சந்தேகப்பட்டியா?''

''சொன்னது ஒன்னும் யாரோ ஒருத்தர் இல்ல. பாதிக்கப்பட்டவனோட தங்கை. அவதான் எனக்கு போன் பண்ணி உம்புராணத்தைச் சொன்னா.''

''முட்டாள்! முட்டாள். நீ இவ்வளவு முட்டாளா? டேய்! எங்க ஊர் கும்பகோணம் பக்கத்தில் ஒரு சின்ன கிராமம். அங்கே இருக்கிறவளுக்கு நீ யாரு உன் போன் நம்பர் என்னன்னு எப்படித்தெரியும்? இதெல்லாம் யோசிக்கமாட்டியா?''

பத்மினி ஆத்திரமாய்க் கேட்க, விழித்தான் கணேசன்.

''நீ சொல்ற பாண்டியனுக்கு அக்கா தங்கை யாரும் கிடையாது. அவனே வாய் திறந்து பேசமுடியாத ஊமை. அவன் வந்து என்கிட்ட கெஞ்சினானா? நீ ஏமாளி என்று தெரிந்து யாரோ உன் தலையில் நன்றாய் மிளகாய் அரைத்திருக்கிறார்கள்.''

''ப..பத்மினி... நீ.. என்ன.. சொல்றே?''

''கூப்பிடாதே. இனி என் பெயரை உன் வாயால் சொல்லாதே. உன் முகத்தைக் கூட சரியா பார்க்காம என் மாமா சொன்ன ஒரே காரணத்திற்காக உன்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சேன்.

ஆனா நீ கொஞ்சம் யோசிக்காம என்ன வெல்லாம் பேசிட்டே. இதோ பார். இப்பச் சொல்றேன் கேட்டுக்க. இனி எந்த சூழ்நிலையிலும் என்முன்னால வந்திடாதே. உன்னைப் பார்ப்பதையே பாவம்னு நினைக்றேன்.'' -விடுவிடு வென அறையை விட்டு வெளியேறினாள்.

பதறிப்போய் அவள் பின்னே ஓடிவந்தான் கணேசன். ''பத்மினி! ப்ளீஸ். என்னை மன்னிச்சிடு. நான் தெரியாம பேசிட்டேன். இனி

இப்படி நடக்காது.''

''இனி நமக்குள்ள எதுவுமே நடக்காது. கல்யாணமாகுறதுக்கு முன்னால இப்படிப் பேசுற நீ நாளைக்கு கல்யாணமானபிறகு சும்மா இருப்பியா? நான் தும்மினாக் கூட உனக்கு சந்தேகம் வரும். என்னால உன்கூட நரகவாழ்க்கை வாழ முடியாது.

உன்னைப் பார்க்கவோ பேசவோ எனக்கு பிடிக்கல. தயவு செய்து என் பின்னால வராதே. இனி எங்க வீட்டுப்பக்கம் வந்தே என் அக்கா கிட்ட சொல்லி துடைப்பக் கட்டையால சாத்தச் சொல்லிடுவேன். ஜாக்கிரதை''-சத்தமாய் கூறி எச்சரித்துவிட்டு தனது டிபன் பாக்ஸை எடுத்துக் கொண்டு பத்மினி புயலாய் வெளியேறி விட, தலையில் கைவைத்தவாறு வாசலோடு நின்றுவிட்டான் கணேசன்.

வெல்லப்பாகை கையிலிருந்து மட்டையால் கிளறிக்கொண்டிருந்த கனகத்தின் முகம் மர்மமாய் புன்னகைத்தது.

2

தன் மடியில் முகம் புதைத்து தேம்பிக்கொண்டிருந்த தங்கையின் முதுகை வருடினாள் பாகீரதி. முகத்தில் இதமான புன்னகை.

''பத்மினி! இப்ப ஏன் இப்படி அழுதிட்டே இருக்கே? நடந்த தெல்லாம் நல்லதுக்குன்னு நினைச்சுக்கடா. எழுந்திரு, முகம்கழுவிக்கோ, நான்காபிதர்றேன்.''

''அக்கா! அந்த ஆளால எப்படிக்கா என்னை சந்தேகப்பட முடிஞ்சது? நான் என்ன அப்படிப்பட்ட பொண்ணா?''-கேட்டவாறே குலுங்கி அழுதாள்.

''பத்து! நீ எப்படிப்பட்டவன்னு எனக்கு தெரியும்மா. அவன் கிடக்கிறான் விடு. எனக்கு ஆரம்பத்துலயே அவன் மேல விருப்பமில்லை. உம்மாமாதான் ஒரே நிலையாய் நின்று முடித்துவிட்டார்.''

''அக்கா!''

''இதோ பார் பத்து. உன் நல்ல நேரம் இப்பவே அவன் குணம் தெரிஞ்சது. இனி அவன் இந்த பக்கமே வரமாட்டான். வந்தால் நான்பார்த்துக் கொள்கிறேன். எல்லாத்தையும் மறந்திட்டு வேறவே லையை தேடிக்கோ. இனி அவன் முகத்திலயே விழிக்காதே''

''சம்பளபாக்கியக் கூட வாங்கலக்கா''

''என்ன பெரிய சம்பளம்? போனால் போகட்டும். இல்லன்னா கனகத்திடம் சொல்லிவிட்டு வாங்கிடலாம். சரி. நீ வீட்டைப் பார்த்துக்க. நான் போய் பால் வாங்கிட்டு வர்றேன்''- என எழுந்தவள் கணவனின் ஸ்கூட்டர் சத்தத்தில் பதறினாள்.

''ஐயோ! உம் மாமா வந்திட்டாரு. சீக்கிரம் போய் முகத்தைக் கழுவு. இப்ப மாமாகிட்ட எதையும் சொல்லவேண்டாம்''-ரகசிய

மாய் சொல்லும்போது, மிதமிஞ்சிய கோபத்தோடு உள்ளே நுழைந்தான் தயாளன்.

''எங்கே அவ? பத்மினி. என்ன இதெல்லாம்? அந்தப்பய உன்கிட்டஎன்ன கேட்டான்? உங்களுக்குள்ள என்ன பிரச்சனை?''-கணவனின் கோபத்தில் மிரண்டாள் பாகீரதி'' எதுவும் சொல்லாதே''-என தங்கையிடம் கண்ணைக் காட்டினாள்.

''சும்மா இருக்கா. மாமாகிட்ட ஏன் மறைக்கணும்? மாமாதானே அந்த ஆளுக்காக பரிந்து பேசினார். அவரது குணம் மாமாவுக்கும் தெரியட்டும்''-என தொடங்கி மளமளவென ஒப்பித்தாள் பத்மினி.

முழுக்க கேட்டதும் கொதித்துப் போனான் தயாளன். ''என்ன? இவ்வளவு பேசிட்டு எங்கிட்ட வந்து பத்மினி கோவிச்சிட்டு போயிட்டா. எப்படியாவது சமாதானப்படுத்தி சேர்த்துவையுங்கன்னு போன் பண்றான்.''

''மாமா! வேண்டாம் மாமா! இப்பவே இவ்வளவு சந்தேகப்படுறவர் கல்யாணத்துக்கு பிறகு என்னவெல்லாம் பேசுவாரு. என் வாழ்க்கையே நரகமாயிடாதா? எனக்கு... இந்தக் கல்யாணமே வேண்டாம் மாமா''- கண்ணீரோடு கெஞ்சியவளை வேதனையாய் பார்த்தான் தயாளன்.

''பத்மினி! நீ நினைக்கிற மாதிரி இது கணேசனுடைய சந்தேகம் மட்டுமில்லம்மா. யாரோ நமக்கே தெரியாம பண்ற சதி இது?'' என்றான் தீவிரமாய்.

''மாமா?''-பத்மினி திகைப்பாய்ப் பார்க்க, பாகீரதி நெஞ்சில் கைவைத்து அதிர்ந்தாள்.

''என்னங்க சொல்றீங்க? சதியா?''

''ஆமா! நமக்கே தெரியாம நாமபேசுற மாப்பிள்ளைகிட்ட இப்படி ஏதாவது கோள் மூட்டி விட்டுட்டு இருக்காங்க. யாருன்னு தான் தெரியமாட்டேங்குது. அது மட்டும் தெரிஞ்சுது கோழியோட தலையை திருகுறமாதிரி திருகிடுவேன்''-பற்களைக் கடித்தவாறே. அவன் சொல்ல, பாகீரதியின் உடல் நடுங்கிற்று.

''ஏங்க! இனி பத்மினிக்கு வரன் தேடறதை எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''எது செய்தாலும் ஒரு முறைக்கு நாலுமுறையா யோசிச்சுச் செய். அவசரம் வேண்டாம்.இது நம்ம பொண்ணோட வாழ்க்கை. நினைப்பிருக்கட்டும்.''

''ஹூம்! என் தங்கைக்கு என்னைவிட உங்களுக்குத்தான் அதிகப்பிரியம் போல. இவளுக்கேத்த ராஜகுமாரனை நான் கண்டுபிடிச்சிக் கூட்டிட்டுவர்றேன். நீங்க ரெண்டுபேரும் ஒரு வார்த்தை பேசாம சம்மதிச்சா போதும்''-என உத்தரவாய்ச் சொல்ல, அவர்களின் அன்பைக் கண்டு கண்கள் கசிய நின்றாள் பத்மினி.

3

திருச்சிராப்பள்ளி ரயில் நிலையத்தில் வந்து நின்ற ஹவுரா எக்ஸ்பிரஸ்ஸில் இருந்து இறங்கினான் வசந்தன். கையில் சிறிய பெட்டி. இரவு நேர பயணத்தில் கசங்கிய ஆடையோடு தூக்கமற்ற கண்களோடு வந்தபோதும் பளிச்சென கண்களைக் கவரும் அழகு. அடர்ந்த கேசத்தை கைகளால் கோதிவிட்டவாறே கண்களை சுழற்றி தேடினான்.

மற்றவர்களைக் காட்டிலும் சற்று உயரமானவன் என்பதால் அவனை சுலபமாக கண்டுகொண்ட டிரைவர் வடிவேலன் தன் கையிலிருந்து கா்பிகப்பை அவசரமாய் ஓரமாய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பென்குயின் வயிற்றில் போட்டுவிட்டு அவனை நெருங்கினார்.

இருபது நிமிட பயணத்திற்குப் பின் கார் அந்த தென்னை மரங்களால் சூழப்பட்டிருந்த பிரமாண்டமான பங்களாவின் முன் வந்து நின்றது. விஸ்தாரமாய் இருந்த போர்டிகோவில் ஏற்கனவே இரண்டு கார்களும் ஒரு பைக்கும் நின்று கொண்டிருக்க, காரை விட்டு இறங்கினான் வசந்தன்.

வீட்டிற்குள் இருந்து கார்ச்சாவியோடு வெளியே வந்து கொண்டிருந்த ஆனந்தன் தம்பியைப் பார்த்ததும் புன்னகைத்தான்.

''ஹாய்டா. போன வேலை நல்லபடியா முடிஞ்சதா?''

''முடிஞ்சதுண்ணா. நீ என்ன இன்னிக்கு இவ்வளவு சீக்கிரமா கிளம்பிட்ட?''

''ஆபீஸ் போகலடா. உன் அண்ணியக் கூட்டிட்டு வரப்போறேன்''

''அண்ணே! நீ அங்கேயும் இங்கேயுமா வாரத்தில நாலு நாள் அலையுறதுக்கு பேசாம மாமனார் வீட்டோட இருந்துடேன். இந்த அலைச்சல் மிச்சமாகுமில்ல?''

''உதைபடுவே!''

''பின்னே?கல்யாணமாகி ஆறுவருஷமாச்சி. இன்னும் ரெண்டுநாளுக்கு ஒரு முறை அம்மா வீட்டுக்கு போகாம அண்ணியால இருக்க முடியல. இதுல நீதான் கொண்டு போய் விடணும். கூட்டிட்டு வரணும்ன்னு அண்ணியோட ஆர்டர் வேற.''

''டேய்! ஒரே பொண்ணு இருக்கிற வீட்ல பொண்ணு எடுத்ததால வந்த பிரச்சனை இது. பேசாம நீ ஒன்னு பண்ணு.ஒரு நாலஞ்சு பொண்ணுங்க இருக்கிற வீட்ல அட்லீஸ்ட் ரெண்டு பொண்ணுங்க இருக்கிற வீட்லயாவது பெண் எடுடா.''

''அண்ணே''

''சரி.சரி. டயமாச்சு.நீ போய் டிபன் சாப்பிடு. நான் போயிட்டு வந்திடுறேன்''-என தன் காரை நோக்கிச் செல்ல, மெலிதான புன்னகை அமராவதி யாருடனோ போனில் யோடு வீட்டிற்குள் நுழைந்தான்.

பேசிக் கொண்டிருக்க, மௌனமாய் அவள் பின்னே சென்று நின்றான்.

''இதோ பாருங்க. நீங்க வீட்டுக் கெல்லாம் வரவேண்டாம். எதுவா இருந்தாலும் போன் மட்டும் பண்ணுங்க. எம்புள்ளைக்கு எதுவும் தெரியக்கூடாது. ம்.வசதி இருக்கணும்னு அவசியமில்ல. பொண்ணு கண்ணுக்கு லட்சணமா இருந்தா போதும்...''

''அம்ம்மா''-மகனின் கண்டிப்பான குரலில் அவசரமாய் போனைத் தவறவிட்டாள் அமராவதி. திடுக்கிட்டு திரும்பி மகனைப்பார்த்து சற்று அவஸ்தையாய் புன்னகைத்தாள்.

குரோம் பேட்டையில இருந்து சாரதா பேசினா. அவங்க வீட்டுல ஒரு தரகர் வாடகைக்கு இருக்காராம். அவர் கூடத்தான் பேசினேன்.''

''என்ன?''

''நல்லதா பொண்ணு இருந்தா பேசிமுடிச்சிடலாம்னு சொன்னேன். இன்னும் ரெண்டே மாசத்தில் உனக்கு முப்பத்தஞ்சு வயசு முடியப்போகுதுடா. அதுக்குள்ள கல்யாணத்தை முடிச்சிடணும்னு உன் ஜாதகம் சொல்லுது.''

''அப்போ நீங்களே முடிவு பண்ணி திரும்பவும் என்னை அசிங்கப் படுத்தப்போறீங்க? என்னைப் பத்தி உங்களுக்கு எந்த கவலையும் இல்ல?''

''என்னப்பா இப்படிக் கேட்கிற? உன் கவலை தானப்பா எங்களைக் கொஞ்சம் கொஞ்சமா கொல்லுது. அதுக்காகத் தானே இதெல்லாம் செய்யுறேன்''

''எதுக்கு? என்ன ஒரேயடியாக் கொல்லறதுக்கா?''-சீறினான்.

''என்னப்பா இப்படி பேசுற? ஒருத்தி போனான்றதுக்காக கல்யாணமே வேண்டாம்னா எப்படி? உன்னை இப்படியே தனியா நிறுத்திட்டு போயிடுவேனோன்னு பயம்மா இருக்குப்பா.''-கண்ணோரம் கசிய, அமராவதியின் பேச்சு நின்று விசும்பல் கேட்டது.

''எதுக்கெடுத்தாலும் அழுதிடுங்க. இப்படியே கண்ணீரைக் காட்டித்தான் முதல்ல ஒருத்தியக் காட்டி என்னை அழவெச்சீங்க. அதுபோதான்னு இப்போ இன்னொருத்தியா? ம். நல்லாஇருக்கு''

''பெத்தவளுக்கு தெரியாதா புள்ளையோட வலி? அந்த வலிக்கு மருந்தைத் தாம்ப்பா தேடிட்டு இருக்கேன்''

''நீங்க தேடுற மருந்தால என் காயம் ஆறாதும்மா. இன்னும் அதிகரிக்கும்.''

''இல்லப்பா.அதிகரிக்க விடமாட்டேன். உம்மனசு போல உனக்கேத்த பொண்ணா பார்க்கச் சொல்லியிருக்கேன். எனக்காக கொஞ்சம் மனம் இறங்குய்யா. இந்த முறை எந்தத் தவறும் நடந்துடாம ரொம்ப கவனமா இருக்கேம்ப்பா. சம்மதம்னு சொல்லுய்யா''-இருகரங்களையும் நீட்டி தாய் யாசிக்க, கலங்கியகண்களோடு பேச்சின்றி தாயின் கரத்தை பற்றிக் கெண்டான்.

''மாப்பிள்ளை பேர் வசந்தன். ஊரு திருச்சி. அண்ணன் தம்பி ரெண்டு பேர். ஒரு தங்கை. எல்லாருக்கும் கல்யாணமாகிடுச்சி. மாப்பிள்ளைக்கு வயசு தான் கொஞ்சம் கூடுதல். ஆனா பையன் தங்கமான பையன்''-என்ற தரகரை ஆர்வமாய் பார்த்தாள் பாகீரதி.

''கூடுதல்ன்னா எவ்வளவு? ஒரு நாற்பது இருக்குமா?''

''சேச்சே! முப்பத்தஞ்சு வயசும்மா. குடும்பம் நல்ல குடும்பம்.''

''ஆனாலும் அதுல ஒரு குறை...'' தரகர் தயக்கமாய் இழுக்க புருவம் சுருங்கினாள் பாகீரதி.

''அட! ஏன் இப்படி தயங்குறீங்க? சும்மாசொல்லுங்க''

''இதோ பாருங்கம்மா. நான் தரகர்தான். ஆனா உண்மைய மறைச்சி ஏமாத்துற ஆளு இல்ல. அதான் சொல்றேன். அந்த மாப்பிள்ளைக்கு ஏற்கனவே கல்யாணமாகி அந்தப் பொண்ணு யார்கூடவோ ஓடிப் போயிடுச்சாம். ரெண்டாம் தாரமா கல்யாணம் பண்ணிக்க உங்க தங்கச்சி சம்மதிக்குமா?''

என்னபதில் சொல்லப்போகிறாள் என்ற ஆர்வத்தில் அவளது முகம் பார்த்தவரால் எதையும் கணிக்க முடியவில்லை. பலவிதமான குழப்பங்களுடன், தீவிரமான சிந்தனையுடன் ஒருநிமிடம் அமர்ந்திருந்த பாகீரதியின் முகம் லேசாய் புன்னகைத்தது.

''தரகரே! நாளைக்கே பெண் பார்க்க வரச்சொல்லுங்க''-என்ற வார்த்தையில் குரோதம் தொனித்தது.

4

''என்னங்க! இன்னிக்கு வேலைக்கு லீவு சொல்லிடுங்க''-மிக்ஸியில் சட்னிக்கு அரைத்துக் கொண்டே பாகீரதிசொல்ல, சட்டையை போட்டுக்கொண்டிருந்த தயாளன் மனைவியை ஏறிட்டான்.

''என்ன? லீவா? எதுக்கு?''

''எல்லாம் காரணமாத்தான். பத்மினி! இந்தா இதை தாளிச்சிடு. அப்படியே இட்லி வெந்திடுச்சா பாரு.''-வீட்டைபெருக்கிக் கொண்டு நின்ற தங்கையின் கையில் மிக்ஸி ஜாரைக் கொடுத்து உள்ளே அனுப்பிவிட்டு கணவனை நெருங்கினாள்.

''இன்னிக்கு நம்ம பத்துவ பொண்ணு பார்க்க வர்றாங்க.திருச்சியிலருந்து''

''என்ன? என்னடி! திடீர்னு என்ன வெல்லாம்மோ சொல்ற?''

''என்னடி! திடீர்னு ... மாப்பிள்ளை பார்க்க ஆரம்''

''ஏன்? உங்ககிட்ட கேட்டுத்தானே மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சேன்?''

''அது சரி. ஆனா ரெண்டே நாள்ல எப்படி பார்த்தே? அதுவும் திருச்சின்ற மாப்பிள்ளை யாரு? என்ன பண்றாரு? குடும்பம் எப்படி எல்லாம் விசாரிக்க வேண்டாமா?''

''எல்லாம் விசாரிச்சிட்டேன். ரொம்ப அருமையான குடும்பம். மாப்பிள்ளை பெரிய நம்ம சாரதாவோட சொந்தக்காரங்களாம்.

'பிஸ்னெஸ்மேனாம். நல்ல வசதியான குடும்பமாம். அதான் உடனே பெண்பார்க்க வரச்சொல்லிட்டேன்''

''பாகி! ஏன் அவசரப்பட்ட?''

''ஏன்.. என்னாச்சு?''-பாகீரதி யின் குரல் தடுமாறியது.

''வசதியான இடம்னுசொல்றே. அவங்க ரேஞ்சுக்கு எதிர்பார்ப்பாங்களே. நம்ம கிட்ட ஒரு பத்துசவரன் தானே இருக்கும்.''

''அதை அவகிட்ட கொடுத்திட்டு நான் வெறுங்கழுத்தோட நிக்கணுமா?''

''ஏய்! அது அவளுக்காக உங்க பாட்டிம்மா செய்து போட்டது.''

''தெரியும். அவதான் எனக்கு போட்டுக்க தந்தா. அவளுக்கு வேணாமாம்'' ''பாகீ! இது தப்பு. இதுவரைக்கும் மிட்டாய்க் கம்பெனியில வேலைக்கு போனா. சரின்னு விட்டுட்டோம். அதுக்காக கல்யாணம் பண்ணி போகும் போது இதே பாசிமணியோட அனுப்புவியா?''-குரலை உயர்த்தினான் தயாளன்.

''இப்ப ஏன் கத்துறீங்க. மாப்பிள்ளை வீட்ல போடுறத போட்டு அனுப்புங்க. நாங்க எதுவும் எதிர்பார்க்கலன்னு சொல்லிட்டாங்க. அதனால அந்த ஒத்தைசெயின் இருக்கில்ல. அதை மட்டும் போட்டு அனுப்புவோம்.''

''ஏய்! வசதியான இடம்ன்ற. போட்டதை போடுங்கன்னு சொல்றதா சொல்ற. ஒழுங்கா விசாரிச்சியா? மாப்பிள்ளை எப்படிப்பட்டவனாம்? நாம நாலு இடத்தில விசாரிக்கணுமே''

''ஏன்? எதுக்கு? என் வார்த்தை மேல நம்பிக்கை இல்லையா? என் தங்கைக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பார்க்கணும்னு எனக்குத் தெரியாதா?''-சிடுசிப்பாய் கேட்டவளை குழப்பமாய்ப் பார்த்தான் தயாளன்.

''இப்ப ஏன் நீ பதறுறே?''

''பின்னே? நீங்க கூடத்தான் பொண்ணு நல்லாயிருந்தாப் போதும்னு சொல்லி வெறும் மூணு சவரன் நகையோட என்னைக் கட்டிகிட்டீங்க. அதுக்காக நாங்க உங்கமேல சந்தேகப்பட்டோமா?''

''பாகீ! நீங்க எனக்கு தாய்வழிச்சொந்தம். அதோட பெத்தவங்க இல்லாம பாட்டியோட வளர்ப்புல கஷ்டப்பட்டுட்டு இருந்ததால நானும் அம்மாவும் எதையும் எதிர்பார்க்காம கட்டிக்க சம்மதிச்சோம். ஆனா..''

''இதுவும் அதே மாதிரிதான். சாரதா கூட நமக்கு தூரத்து உறவு தானே. அவ சொந்தக்காரங்க நமக்கும் சொந்தக்காரங்க தானே''-மனைவியின் படபடப்பான பேச்சும் பதட்டமும் அவனை யோசிக்க வைத்தது. பதில் பேசாமல் அமைதியாய் கட்டிலில் அமர்ந்தான்.

''என்ன? இப்படி ஒன்னுமே பேசாம இருந்தாஎப்படி?''

''யோசிச்சிட்டு இருக்கேன்''-பாகீரதியின் முகம் மாறுவதைத் துல்

லியமாய்க் கண்டான். 'மனைவியிடம் ஏதோ தவறு இருக்கிறது. எதையோ மறைக்கிறாள்''

''எ.என்ன.. யோசிக்கிறீங்க?''

''இல்ல.. பத்மினியோட கல்யாணத்திற்கு ஏன் இவ்வளவு அவசரப்படுற நீ?''

''அவரப்படாம என்ன பண்றது? அதுக்கு நீங்க தான் காரணம்''-என்றாள் பட்டென்று.

''நானா? நான் என்ன செய்தேன்?''

''எனக்கு உங்கமேல நம்பிக்கை இல்ல.''-எங்கோ பார்த்துக் கொண்டு அவள் சொல்ல,சட்டென முகம்மாற கோபமாய் எழுந்தான்.

''என்னடி சொல்றே?''-வார்த்தையில் கடுமை தொனித்தது.

''ஆமா! எனக்கு உங்கமேல நம்பிக்கை இல்லதான். வயசுப் பொண்ணை எத்தனைநாள் உங்ககிட்ட இருந்து பாதுகாக்கமுடியும்?''-கோபமாய் அவள் கேட்க. ஆத்திரமாய் அவளது தோளைப் பற்றித் திருப்பினான்.

''ஏய்! என் சொன்னே? யாரை பார்த்து இப்படி...''

''சும்மா நிறுத்துங்க. என்ன இருந்தாலும் நான் கறுப்பி. அழகில்லாதவ. அவ அப்படியா? சும்மா வெண்ணெய்க்கட்டி மாதிரி இருக்காளே. இளவயசு. எனக்கோ இப்பவே நரைமுடி வர ஆரம்பிச்சிடுச்சு. உங்க கவனம் இனி அவபக்கம் தானே திரும்பும்?''

''ச்சீ! வாயைமூடு! இந்தப் பேச்செல்லாம் அந்தப் பொண்ணு காதில விழுந்திடப்போகுது.பாவம்! உசுரையே விட்டுடுவா. என்
னவோ உன்னைத்தான் தன்னோட அம்மா, குல தெய்வம்னு நம்பிட்டு
இருக்கா.அந்த நம்பிக்கை கெடுத்திடாதே.''

''அப்படி எதுவும் நடந்திடக்கூடாது. எங்களுக்குள்ள சக்களத்தி ச
ண்டை வந்திடக்கூடாதுன்னு தான் இவ்வளவு அவசரமா கல்யாண
ஏற்பாடு பண்றேன்.''

''பண்ணுடி. நீஎதுவேணா பண்ணிக்கோ. உன் மனசுல இந்த எண்
ணத்தோட அவ இந்த வீட்ல இருக்கிறத விட எங்கேயோ போய்
சந்தோஷமா வாழட்டும்.''

''இனி என்னவெல்லாம் செய்யப்போறியோ? கடவுள் தான் அவ
ளைக் காப்பாத்தணும்.''-பெருமூச்சுவிட்டவாறே அறையை விட்டு
வெளியேறினான் தயாளன்.

அலட்சியமாய் புன்னகைத்தாள் பாகீரதி. அவளது முகத்தோற்றம் அவத
முழுவதுமாய் மாறியிருந்தது.வன்மம் குடியேறியிருந்தது.
லையெழுத்து என்கையில இருக்கு. என்னை மீறி அவ அமோகமா
வாழ்ந்திடுவாளா? விட்டுடுவேனா நான்?''-பாகீரதியின் முகம் விஷ
பாம்பாய் மாறியது.

Optimized using trial version www.balesio.com

5

தன் அறையில் அமர்ந்திருந்து ஜன்னல்வழியே வெளியே வெறித்துக் கொண்டிருந்தான் வசந்தன். மனம் வெறுமையாய் இருந்தது. வீட்டில் அனைவரும் உற்சாகமாய் புறப்பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. அவர்களது உற்சாகம் மனதில் பயத்தை உண்டாக்கியது.

''இந்த பெண் பார்க்கும் படலம் தேவைதானா? எத்தனை முறை தான் மாப்பிள்ளை கோலத்தில் மேடையேறுவது? ஐந்து வருடங்களுக்கு முன் இதே போன்ற தருணம் தன் வாழ்வில் வந்த போது எத்தனை குதூகலமாய் இருந்தது. உறவினர்களின் வருகை. நண்பர்களின் கேலி கிண்டல், பெற்றவர்களின் சந்தோஷப் புன்னகை என்று எல்லாமே நன்றாய்த்தான் இருந்தது. அவள் வந்து தன்னிடம் பேசும்வரை..

அதுவும் திருமணக் கோலத்தில் மணவறையில் அமர்ந்திருந்த போது ஏற்பட்ட உணர்விற்கு, இனம் புரியாத மகிழ்ச்சிக்கு என்ன பெயர்? எத்தனை எதிர்பார்ப்பு, எத்தனை கனவுகள் கற்பனைகள்? அவை அனைத்தையும் புரோகிதர் வளர்த்த அக்னிக் குண்டத்தில் போட்டு பொசுக்கிவிட்டு போய்விட்டாளே அந்தப் பெண்!

அவளது முகம் கூட சரியாக நினைவில் இல்லை. ஆனால் அவள் ஏற்படுத்திவிட்டுப்போன ரணங்களும் அவமானங்களும் இன்னும் நெஞ்சை விட்டு மறையவில்லை. மறக்கவும் இல்லை. மீண்டும் அதே விஷப்பரீட்சை தேவையா?

கதவைப் திறந்து உள்ளே நுழைந்த அமராவதி தன்மகன் அமர்ந்திருந்த கோலத்தையும் அவனுக்காக எடுத்துவைக்கப்பட்ட புத்தாடைகள் மடிப்பு கலையாமல் கட்டிலில் இருப்பதையும் கண்டாள்.

''வசந்த்! என்னப்பா நீ? இன்னும் ட்ரெஸ்கூட மாத்தாம இருக்கே? நாங்கள்லாம் ரெடியாகிட்டோம். மாப்பிள்ளை நீ? இன்னும் ரெடியாகாம உட்கார்ந்திருக்க. எழுந்திருப்பா''-என்றவாறே தன்னை நெருங்கிய அன்னையை இயலாமையாய் நிமிர்ந்து பார்த்தான்.

''அம்மா! என்னம்மா இதெல்லாம்?''

''ஏன்டா கண்ணா! இப்படிக் கேட்கிற?''

''இதையெல்லாம் ஏற்கனவே முடிவு பண்ணிட்டுத்தான் எங்கிட்ட ஒப்புக்காக சம்மதம் கேட்டீங்களா?''

''சேச்சே! அப்படியெல்லாம் இல்லப்பா. நீ சம்மதிச்சநேரம் தரகர் சொன்ன முத வரனே அமைஞ்சிடுச்சு. இதுவே நல்ல சகுணம் தானப்பா. அதான் நாளைக்கடத்தாம இன்னிக்கே பார்த்திடலாம்னு முடிவு பண்ணிட்டோம். உனக்கு பெண்ணைப் பிடிச்சிருந்தா இன்னிக்கே நிச்சயம் பண்ணிட்டு வந்திடலாம்.''

''அம்மா! நான் பொண்ணு பார்க்கவே வேண்டாம்னு சொல்றேன். நீங்க நிச்சயம் வரை போயிட்டீங்களா?''

அமராவதியின் முகம் மாறியது. ''வசந்த்! என்னப்பா சொல்ற?''

''எனக்கு... இதெல்லாம் பிடிக்கலம்மா.விருப்பமும் இல்ல''

''என்னடா இது? உன்கிட்ட கேட்டுட்டுத் தானே எல்லா ஏற்பாடும் பண்ணினேன். நாம வர்றதா பொண்ணு வீட்டுக்கும் சொல்லியாச்சி. இந்த நேரம் வந்து இப்படிச் சொல்றியே''

''அம்மா! உங்க கண்ணீரை பார்க்க முடியாம தலையாட்டிட்டேன். ஆனா.. இப்போ.. எனக்கு.. கூசுதும்மா. திரும்பவும் மாப்பிள்ளை வேஷம் போட்டுட்டு இன்னொரு பெண்கூட உட்கார உடம்பெல்லாம் கூசுதும்மா''

''இல்லய்யா! உனக்கு நேர்ந்த அவமானம் பெரிய துன்பம் தான். ஆனா அதையே நினைச்சிகிட்டு உன் வாழ்க்கையே ஏம்ப்பா வீணாக்கணும்? எத்தனையோ பேர் பிள்ளைகளை பெத்திட்டு கூட விட்டுட்டு ஓடுறாளுங்க. அப்படிப்பார்த்தா உன் இழப்பு ஒண்ணும் பெரிசில்லையே.''

''அவமானம் அவமானம் தானேம்மா''

''நான் மறுக்கல. ஆனா அவளோ அதைப்பத்தி எந்த உறுத்தலும் இல்லாம போயி அவளுக்கொரு வாழ்க்கைய அமைச்சுக்கும் போது நீ ஏம்ப்பா இப்படி மருகணும்? நீ ஒண்ணும் அவ கழுத்தில தாலியக்கட்டி குடும்பம் நடத்திடலையே. ஏதோ நம்ம நல்ல நேரம் தாலி கட்டும் முன்னால ஓடிப்போயிட்டா. இல்லன்னா இதைவிட அசிங்கமா போயிருக்கும். வசந்த்! அந்தப்பொண்ணு உன்னைப் பிடிக்காமலோ போகலப்பா. அவ மனசுக்குப் பிடிச்சவன் வேணும்னு தானே போனாள்? இதுல நாம அசிங்கப்பட ஒண்ணுமே இல்லப்பா.''

நீ இப்படியே இருந்தா அந்தப்பொண்ணை மறக்க முடியாமத்தான் இவன் இன்னொரு கல்யாணம் பண்ணாம இருக்கான்னு சொல்றாங்கப்பா. ஒரு வேளை உன் மனசில இன்னும் அந்தப்பொண்ணோட நினைப்பு இருக்கா?''- அமராவதி தயக்கமாக இழுக்க, அவசரமாய் மறுத்தான் வசந்தன்.

''சேச்சே! அந்தப்பொண்ணோட முகம் கூட நினைவில்லை.''

''பிறகென்னப்பா? நடந்ததை எல்லாம் துடைச்சிப் போட்டுட்டு ஜம்முன்னு கிளம்பு. பொண்ணு ரொம்ப அற்புதமான பொண்ணாம். இந்த இடம் நல்லபடியா அமையணும். கிளம்புப்பா''

''சரி இன்னொரு விஷயம். இதுக்கு நீங்க சம்மதிச்சா நான் வர்றேன்''

''என்னப்பா?''

''நான் பொண்ணுகிட்ட தனியா பேச நீங்கதான் பர்மிஷன் வாங்கித்தரணும''

''என்ன? தனியா பேசணுமா?''

''ஆமா! இவ மனசுலயும் எவனாவது இருந்தால்? அதான்

"முதல்லயே கேட்டு தெரிஞ்சப்புறம். அந்தப்பொண்ணுக்கு என்னை பிடிச்சிருக்கான்னு நானே கேட்டு தெரிஞ்சுகிட்ட பிறகு என்னோட சம்மதத்தை சொல்வேன். அதுக்காகத்தான்.''

''சரிப்பா! நான் ஏற்பாடு பண்றேன். சீக்கிரம் ரெடியாயிருப்பா. நல்ல நேரம் முடியுறதுக்குள்ள கிளம்பணும். தூரமான இடமாச்சே. இப்பக் கிளம்பினாத்தானே சரியாயிருக்கும்''

''எந்த ஊரும்மா?''

''சென்னையில குரோம்பேட்டைப்பா. நம்ம சாரதாவுக்கு பழக்கமான குடும்பம்தான்!''

''ஓ.கே..ஓ.கே...நீங்க போங்க.. நான் பைவ மினிட்ஸ்ல ரெடியா கிட்டு வந்துடுறேன்.''

தலைவாரி பூச்சூடி தங்கையின் கண்ணுக்கு மையிட்ட போது அந்தக்கண்கள் கலங்கியிருப்பதைக் கண்டாள் பாகீரதி.

''ஏய்! என்னடி கண்கலங்கியிருக்கு?''

''அக்கா! மாமாவுக்கு.. இந்தக் கல்யாணத்தில விருப்பம் இல்லையா?

''ஏன்? ஏன் கேட்கிற?'' - பாகீரதியின் குரல் தடுமாறியது.

''மாமாவோட முகமே சரியில்லையே. இல்லன்னா எவ்வளவு கலகலப்பா இருப்பாங்க? நான் அந்த கணேசனை வேணாம்னு சொன்னது மாமாவுக்கு வருத்தமோ?''

''அவர் கிடக்கிறார் விடுடி. அவனெல்லாம் ஒரு மாப்பிள்ளையா? நான் பார்த்து வைச்சிருக்கேன் பார் மாப்பிள்ளைய. இது மாப்பிள்ளை, சும்மா பொரி உருண்டையும் கடலை உருண்டையும் போடுறவனைக் கட்டிகிட்டா காலம்பூரா அடுப்படியில கிடந்து நீயும் பொரி உருண்டையைத்தான் உருட்டிட்டு இருக்கணும்.

உன் உள்ளங்கை அப்படியே தாமரைப்பூ மாதிரி இருக்கும் பத்து. அது சிவந்து கொப்புளிக்கும் போது நான் எப்படித்துடிப்பேன் தெரியுமா? அதான் அந்த மாப்பிள்ளை வேணாம்னு பிடிவாதமா நின்னேன். பூ மாதிரி உன்னை வளர்த்து நெருப்புல போட மனம் வருமா எனக்கு?''

பத்மினியின் கண்களில் நீர் சுரந்து பொட்டென்னு கையில் விழுந்து சிதறியது.

''அக்கா! நீ.. நீ எனக்கு அம்மா. நம்ம அம்மா இன்னும் சாகல்ல''

''அசடே! இப்படி மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரும் நேரம் அழுதிட்டு நின்னா நல்லாவா இருக்கும். கண்ணைத் துடை. மை கரைஞ்சிடப்போகுது. நல்லாத்துடைச்சிட்டு பவுடர் போட்டு விடுறேன்.''

''கொடுக்கா! நானே போட்டுக்கிறேன்.''

''நீ பேசாம உட்காரு. இன்னிக்கு என் குழந்தைய நான்தான் அலங்காரம் பண்ணுவேன். மாப்பிள்ளை வந்து உன்னைப் பார்த்ததும் அப்

படியே அசந்துடணும் என்றதும் இளையவளின் முகம் வெட்கப்புன்னகை பூத்தது.

ஆனால் மாப்பிள்ளை வந்து இறங்கியதும் பாகீரதி ஓடிவந்து பார்த்தவள் வாயடைத்துப் போனாள்.

6

முப்பத்து ஐந்து வயதுக்காரன். இரண்டாம் மணம் புரியவன். அதனால் எப்படியும் வயதின் மூப்பு தெரியும். தலைமுடி கூட கொட்டத்துவங்கியிருக்கலாம் அல்லது தரை விழ ஆரம்பித்திருக்கும் என்று நப்பாசையில் தான் பாகீரதி இந்த வரனை கண்ணை மூடிக்கொண்டு தலையாட்டினாள்.

ஆனால் கல்லூரி மாணவன் போல் கட்டான உடம்போடும், கருகருவென அடர்ந்த கேசமும் பளபளவென மின்னிய முகமும் கம்பீரமான உயரமும் வசீகரமும் அவளை வாயடைத்துப் போகச்செய்தது.

இவனா மாப்பிள்ளை? ஐயோ! இவன் அந்த கணேசனைவிட பத்து மடங்கு அழகாய் தெரிகிறானே? இத்தனை இளமையாய் இருக்கிறானே. இந்தத்தரகர் அரைகுறையாய் கேட்டு வந்து நம்மை ஏமாற்றிவிட்டானே. இப்போது என்ன செய்வது?

வந்து இறங்கிய பெண்மணிகளை அவசரமாய் அளவெடுத்தாள். இயல்பான் புன்னகையோடு விலை உயர்ந்த பட்டிலும் அளவான நகைகளோடு ஜொலித்தனர். வந்து நின்ற கார்களே அவர்களது வசதியைச் சொல்ல பாகீரதிக்கு மூச்சு முட்டியது.

மூத்த மருமகளின் கையில் பெரிதாய் வெள்ளித் தாம்பூலத்தட்டு. அதில் புத்தம்புதியதாய் குங்கும நிற பட்டுப்புடவை. அதற்கு மேலாய் நகைப்பெட்டி மூடிய நிலையில் இருந்தது. பாகீரதிக்கு தலையே சுற்றியது.

வெறும் பெண் பார்க்கும் படலத்திற்கே இத்தனை சீரா? பெரும் சீமானாய் இருக்குமோ! அவசரப்பட்டு விட்டேனே! வந்த வத்தல் தொத்தலையெல்லாம் விரட்டிவிட்டு இப்படி ஒரு குபேர குடும்பத் தில் கொண்டு போய் நானே அவளை சேர்த்து விடுவேன் போலிருக் கிறதே.

கூடாது.இந்த சம்மந்தம் நடக்கக்கூடாது. இதை தடுத்தாக
வேண்டும் எப்படி? எப்படி? அவசரமாய் மூளையைத்தட்டி யோசி
த்தாள். கார்வந்து நின்ற பிறகும் மனைவியிடம் சத்தம் கேளாமல்
போகவே, வெளியே வந்த தயாளன் காரை விட்டு இறக்கி நின்றவர்
களைப் பார்த்ததும் திருப்தியாய் புன்னகைத்து ஆவலாய் அருகே செ
ன்று வரவேற்றான்.
''வாங்க! வாங்க! உள்ளே வாங்க'' - ஆண்களின் கையைப்பற்
றிக் குலுக்கியவாறே வரவேற்றான். பெண்களிடம் இரு கரம் கூப்பி
வணங்கினான்.

''வாங்க! ஏய்! வாசல்ல நின்னு என்ன பண்றே?'' - கணவன்
கேட்ட பிறகே, சுய உணர்விற்குத் திரும்பினாள் பாகீரதி.

''வாங்க வாங்க! சும்மா ரெண்டு பேர் வருவீங்கன்னு பார்த்தேன்.
இப்படி மொத்தமா தட்டோடு வந்ததும் சந்தோஷத்தில் அப்படியே
நின்னுட்டேன். வாங்க உட்காருங்க'' - வரிசையாய் போடப்பட்டி
ருந்த பிளாஸ்டிக் சேர்களைக் காட்டினாள்.

தரையில் விரிக்கப்பட்டிருந்த பாயில் வரிசைத் தட்டுக்களை வைத்
துவிட்டு சேரில் அனைவரும் அமர்ந்து கொள்ள, அமராவதி புன்ன
கைத்தாள்.

''முதல்ல, நானும் என் கணவரும் வர்றதாத்தான் இருந்தோம்.அப்
புறமா சாரதாகிட்ட போன் பண்ணும் போது அவ பொண்ணைப்பத்தி
ரொம்ப உயர்வாச் சொன்னா? எங்க வசந்துக்கு பொருத்தமா இருப்
பாள்னு சொன்னா. அதான் இவ்வளவு தூரம் போறோமே. பிடிச்சி
ருந்தா அப்படியே நிச்சயமும் பண்ணிடலாம்னு ஏற்பாட்டோடு வந்
திட்டோம்''

தயாளன் லேசாய் வருத்தப்பட்டான். ''அடடா! முதல்லயே சொல்
லியிருந்தா நானும் எங்க உறவுக்காரங்களையெல்லாம் கூப்பிட்டிருப்
பேனே''

''பரவாயில்ல தம்பி. இப்ப சிம்பிளா பண்ணிடுவோம். முகூர்த்
தத்திற்கு முந்தைய நாள் கிராண்டா பண்ணிடலாம். முதல்ல பொண்
ணுக்கு பையனையம் பையனுக்கு பொண்ணையும் பிடிக்கட்டும்.
என்ன சொல்றீங்க? '' - என்றார் ராஜசேகர்.

''அதுவும் சரிதான்''- புன்னகைத்த தயாளன் தன்னை அறிமுகம்
செய்து கொண்டான்.

''என் பேர் தயாளன். இது என் மனைவி பாகீரதி. இவ தங்கை
தான் கல்யாணப் பொண்ணு. பேர் பத்மினி''

''ஹைய்! பத்மினியாம் சித்தப்பா, ஸ்வீட் நேரம் இல்ல'' - என
வசந்தின் காதோரமாய் சொன்னாள் ஆனந்தனின் நான்கு வயது மகள்
ஸ்வேதா.

''ஷ் ஷ்' சும்மா இரு'' - லேசாய் அதட்டினான் வசந்தன். ராஜசேகர்
சிரித்தார்.

''தம்பி! இது என் மனைவி அமராவதி. இது என் மூத்த மகன்
ஆனந்தன். அது மருமகள் அமுதா. இது எம் பேத்தி ஸ்வேதா, இவன்
தான் என் இளைய மகன் வசந்தன். உங்கள் மாப்பிள்ளை''- அவர்
உற்சாகமாய் அறிமுகம் செய்து வைக்க, உள் அறையில் அமர்ந்திருந்த
பத்மினியில் முகம் புன்னகைத்தது.

''வசந்தன்''- என அந்தப் பெயரை ஒருமுறை உச்சரித்துப் பார்த்
தாள். உடலும் உள்ளமும் சிலிர்த்தது,

''மாப்பிள்ளை என்ன பண்றார்?''

''தம்பி! நானும் என் மூத்த பிள்ளையும் பில்டிங் ப்ரமோட்டார்ஸ்.

நிலங்களை வாங்கி அதை பிளாட் போட்டு அல்லது பில்டிங்கா கட்
டியும் விற்போம். சின்னவனுக்கு இதில இன்ட்ரஸ்ட் கிடையாது.
அதனால அவனுக்கு தனியா லெதர் பாக்டரி வெச்சுக் கொடுத்திருக்
கேன்.''

''ஷூ, சப்பல்ஸ், ஹேண்ட் பேக் பர்ஸ்ன்னு நிறைய தயாரிச்சு
எக்ஸ்போர்ட்டும் பண்றான். அதோட நகருக்கு வெளிய எங்களுக்கு
ஒரு தென்னந்தோப்பும், பார்ம்ஹவுஸும் இருக்கு. திருச்சியில இப்ப
நாங்க இருக்கிற வீடு போக எக்ஸ்ட்ரா மூணு பங்களாவும் இருக்கு.
பட்! நாங்க எல்லாருமா ஒரே வீட்லதான் இருக்கோம்.''

''ரொம்ப சந்தோஷமா இருக்குங்க நீங்க இவ்வளவு வெளிப்ப
டையா பேசும் போது நானும் பேசிடணும். ஸார்! உங்க அளவுக்கு
நாங்க பெரிய இடம் கிடையாது''

''என்ன தம்பி பெரிய இடம் சின்ன இடம்னு. எல்லாமே நம்ம
மனசைப் பொறுத்துதான் தம்பி''

''அது உண்மைதாங்க. ஆனா எங்களைப் பத்தி நாங்களும் சொல்
லணுமே. பொண்ணு பனிரெண்டு வரைக்கும் படிச்சிருக்கா. எங்க
மாமா மாமி இப்போ உயிரோடு இல்ல. அவங்க பாட்டி இப்போ
கிராமத்தில இருக்காங்க. இவ கூட அவங்க கிட்டதான் வளர்ந்தா.
அப்புறம்...''

''எல்லாத்தையும் நானே சொல்லிட்டேம்ப்பா''- என்றவாறு சாரதா
உள்ளே நுழைந்தாள்.

''வாம்மா சாரதா! நாங்க அவ்வளவு தூரத்தில இருந்து வந்திட்
டோம். நீ அடுத்த தெருவில இருந்துட்டு லேட்டா வர்ற?''

'இல்லண்ணே! கிளம்பி வர்ற நேரம் வீட்டுக்கு ரெண்டு ஆட்கள்
வந்திட்டாங்க. மக்கள் தொகை கணக்கெடுப்பாம். அதுக்கு விபரம்
சொல்லிட்டு வர நேரமாகிப்போச்சி. அப்பவே வந்திட்டீங்களா?''

''இப்பத்தான் அஞ்சு நிமிஷமாச்சு''

''என்ன பாகீ? திகைச்சுப் போய் நிற்கிற? போ. போய் பத்மினி
கையில காபி பலகாரம் கொடுத்தனுப்பு. அவளை பார்க்கட்டும் எல்
லாரும்''

'ம்? இ.. இதோ கூப்பிட்டு வர்றேன்'' - இருள் படிந்த முகத்தோடு
தங்கையை நெருங்கினாள். குனிந்த தலையோடு நாணப்புன்னகை
யோடு அமர்ந்திருந்தவளைப் பார்க்கையில் வயிறு பற்றியெறிந்தது.
இவள் என்ன பிறக்கும் போதே யோகத்தோடு பிறந்தாளா? இவ
ளுக்கு மட்டும் ஏன் எல்லாம் நல்லதாய் உயர்வானதாய் அமைகிறது?
இவள் பிறந்த அதே வயிற்றில்தானே நானும் பிறந்தேன். எனக்கேன்
இப்படி எதுவும் கிடைக்கவில்லை. ஒரு அன்றாட காய்ச்சியோடு நான்
தினமும் வாய்க்கும் வயிற்றுக்கும் போராடிக்கொண்டிருக்கிறேன்.
இவளுக்கு ராஜபோக வாழ்வா அதுவும் எப்படிப்பட்ட மாப்

பிள்ளையோடு? என்னவொரு அழகு? ஆண்களில் கூட இத்தனை அழகாய் ஒருவன் இருக்க முடியுமா? ச்சே! யானை தன் தலையில் மண்ணை வாரிக்கொட்டியது போல நானே மண்ணள்ளி போட்டுக் கொண்டேனே.

தன் கணவனின் முகமே அவனுக்கு இந்த சம்மந்தம் பிடித்திருப்பதைக் காட்டிவிட்டது, இனி அவனிடம் எந்த மறுப்பையும் எதிர்பார்க்க முடியாது. இவளிடம் தான் எதையாவது சொல்லி, இதை தடுத்து நிறுத்த வேண்டும் என அவசரமாய் சிந்தித்துக்கொண்டிருந்த போது, யாரோ தன் தோளைத் தொட திடுக்கிட்டு திரும்பினாள்.

''சாரதா புன்னகை முகமாய் நின்றிருந்தாள், ''என்ன பாகீ? உன் தங்கைய புதுசா பார்க்கிற மாதிரி பார்த்துட்டு இருக்கே. நீ மட்டும் பார்த்தா போதுமா? அவங்கள்லாம் பார்க்க வேணாமா? போ. காபி பலகாரம் எடுத்திட்டு வா''- என விரட்டினாள்.

பொங்கி எழுந்த கடுப்பை மறைத்தபடி பாகீரதி அடுக்களைக்குள் நுழைய பத்மினியின் தோள் பற்றி எழுப்பினாள் சாரதா.

''அடி ராஜாத்தி! என்ன அழகுடி நீ? எங்க வசந்தனுக்கே பொறந்திருக்கிற. இப்படிவா. அதோ நீலநிற சட்டை போட்டிருக்கானே. அவன்தான் மாப்பிள்ளை. நல்லா பார்த்துக்கோ.''- என கதவை லேசாய்த் திறந்து கதவிடுக்கின் வழியே காட்டினாள். தயக்கமும் வெட்கமுமாய் நிமிர்ந்து பார்த்தாள் பத்மினி.

மடியில் அமர்ந்திருந்த சின்னப்பெண்ணிடம் ஏதோ பேசி விளையாடிக் கொண்டிருந்தான் அவன். அந்த பெண் குழந்தை அவனது வலது உள்ளங்கையை பிரித்து பருப்பு கடைந்து ஊட்டுவதாய் பாவனை செய்து நண்டு ஊருது நரிஊருது என சிறு விரல்களால் கிச்சுகிச்சு மூட்ட சிரித்தவனது சிரித்த முகம் 'பச்சக்கென' இதயத்தில் ஒட்டிக்கொண்டது.

நாற்காலியில் அவன் நிமிர்ந்து அமர்ந்திருந்த கம்பீரமும் இயல்பான பேச்சும் சிரிப்பும் அவளை மயக்கியது.சாரதா காதோரமாய் கிசுகிசுத்தாள்.

''எப்படி இருக்கான்? பிடிச்சிருக்கா?''

''ம்''- வெட்கமாய் தலையாட்டினாள்.

''ஏய்! என்ன பண்ணிட்டு இருக்கே''- அதட்டியவாறே கையில் காபி ட்ரேயோடு வந்தாள் பாகீரதி. முகம் கடுகடுவென இருந்தது.

''ஏன் பாகீ கோவிச்சுக்கிற? நான் தான் மாப்பிள்ளையைக் காட்டினேன்.''

''காபி கொடுக்கும் போது பார்த்தா போதும்.'''

''அத்தனைபேர் முன்னால எப்படி நல்லா பார்க்க முடியும்? இப்போ நல்லா தெளிவா பார்த்திட்டா இல்ல.''

''சரி சரி.இந்தா! இதைக் கொண்டுட்டு போ'' - என தங்கையின் கையில் ட்ரேயை கொடுத்தாள்.

''இரு இரு.ஏய் பாகீ! என்ன புள்ளய ஒத்தைச் செயினோட அனுப்புற! நெக்லஸ் போட்டு விடு.''

''அ..அது.. அடகு கடையில இருக்கு'' - பாகீரதி சொல்ல, வியப்பாய் அவளை ஏறிட்டாள் பத்மினி. ''அக்கா! என்ன சொல்ற? நேத்து காலையிலகூட மீனாட்சி வீட்டு சீமந்தத்துக்கு போட்டுட்டு போனியே''

''அது.ஆமாம் போனேன். இன்னிக்கு இந்த சாமானெல்லாம் வாங்க பணத்துக்கு எங்கே போறது? உன் மாமா என்ன எப்பவும் பை நிறைய பணத்தை வெச்சுகிட்டா அலையுறாரு.நகைய அடமானம் வெச்சுத்தான் செலவு பண்ணியிருக்கு''

''ஸாரிக்கா. நிறைய செலவா?''

''ம்.இதுக்கே இவ்வளவுசெலவாகுது. இன்னும் கல்யாணம் மறுவீடு, விருந்துன்னு எவ்வளவோ இருக்கு. எப்படித்தான் சமாளிக்கப் போறேனோ, கையில ஒத்தப்பைசா கிடையாது'' - பாகீரதி பெருமூச்சுவிட பத்மினியின் முகம் வாடியது.

''அக்கா! ரொம்பக் கஷ்டமா இருந்தா.. இது..இதெல்லாம் வேண்டாங்கா''- பத்மினி சொல்லி முடிக்கும் முன் அவளது வாயில் ஒன்று போட்டாள் சாரதா.

''அசட்டுக்கழுதே! நல்லா காரியம் நடக்கும் போது இப்படியெல்லாம் பேசக்கூடாது. எல்லாம் நல்லபடியா நடக்கும். உன் மாமன் தங்கமான மனுஷன். அவன் பார்த்துக்குவான். நீ முதல்ல வா என்கூட. முகத்தை சிரிச்ச மாதிரி வெச்சுக்க''- என்றவாறு அவளை அழைத்துச் செல்ல, பாகீரதி கடுப்பாய் சுவரோரமாய் நின்று கொண்டாள்.

''சித்தப்பா! பொண்ணு வருது'' - ஸ்வேதா சொல்ல, லேசாய் நிமிர்ந்தான் வசந்தன். கண்கள் விரிந்தது. எந்தவித ஒப்பனையும் இல்லாமல் வெகு ஸிம்பிளாய் வந்த நின்ற போதும் தேவதையாய் தெரிந்தாள். ஆகாய வண்ண மைசூர் சில்க். அதே நிற கண்ணாடி வளையல்கள்.

நீளமான பின்னலில் கொஞ்சம் மல்லிகைச்சரம். நெற்றியில் சின்னதாய் ஸ்டிக்கர் பொட்டு. அதன் கீழே சிறுதீற்றலாய் குங்குமம். காதில் சின்னதாய் கல் வைத்த தோடு. நீளமான மெல்லிய விரல்களில் நகப் பூச்சி இல்லாமலே ரோஜா நிற நகங்கள் வெகு சுத்தமாய மின்னியது.
பாதம் பார்த்தே நடந்தவளை விழியெடுகக்காமல் பார்க்க, அருகே அமர்ந்திருந்த ஆனந்தன் தோளால் உரசினான்.

''பொண்ணு ஓ.கே.வாடா''

''நான் பேசணும். அதற்கு பிறகு தான் முடிவைச் சொல்லுவேன்''

''ஏன்டா! உன் பிடிவாதத்திற்கு அளவே இல்லையா? பொண்ணு அருமையா இருக்குடா? உனக்கு ரொம்ப பொருத்தமா இருக்கும். பேசாம ஓ.கே.சொல்லிடு''

''எதுவா இருந்தாலும் நான் பேசணும்''

''மாப்பிள்ளை என்ன சொல்றார்?''- தயாளன் கேட்க, அவஸ்தை யாய் புன்னகைத்தான் ஆனந்தன்.

''ஸாரி! நீங்க தப்பா எடுத்துக்கூடாது.''

''பரவாயில்ல. சும்மா சொல்லுங்க.''

''என் தம்பி பொண்ணுகிட்ட கொஞ்சம் தனியாபேசணும்னு...''

''என்ன?''

''பயப்படாதீங்க. அவனைப் பிடிச்சிருக்கான்னு அவனே பொண் ணுகிட்ட கேட்கணுமாம்''

பத்மினி முகம் சிவக்க, இன்னும் குனிந்து கொள்ள, தயாளன் ஒரு கணம் தயங்கி விட்டு உடனே சம்மதித்தான்.

''சரி பேசட்டும். முதல்ல காபி சாப்பிடுங்க'' - என்றதும் வசந்தன் எழுந்து கொண்டான்.

''நீங்கள்லாம் காபி சாப்பிடுங்க. நான் பேசிட்டு சாப்பிடுறேன்'' - என்றதும் உடல் முழுக்க வெடவெடக்க, காபிதட்டை வைத்துவிட்டு உள்ளே நுழைந்தாள் பத்மினி. பாகீரதியின் முகம் பளிச்சென மலர்ந் தது. வேகமாய் தங்கையை நெருங்கினாள்.

அக்காவைக் கண்டதும் பதட்டமாய் அவளது கைகளைப் பற்றிக் கொண்டாள்.''

''அக்கா! அவ அவர்... எங்கிட்ட பேசணுமாம். எனக்கு பயமா இருக்கு''

'ஏம்மா பயப்படுற., இது நல்ல சந்தர்ப்பம். யாருக்கும் கிடைக் காது''

''அக்கா''

''இதோ பாரு பத்து! அவர் வந்ததும் முதல்ல நீ பேசிடு''

''நானா? நாம் என்ன பேசுறது?''

''அதாண்டி. அந்த கணேசன் மேட்டர். அவன் கூட கல்யாணப் பேச்சு நடந்தது. பிறகு நின்னு போனது எல்லாத்தையும் சொல் லிடு.''

''எனக்கா சொல்ற?'' - பத்மினியின் முகம் பதறியது.

''பத்து! எப்பவுமே நான் உண்மைய பேசிடணும். பிறகு கல் யாணம் முடிஞ்ச பிறகு யார் மூலமா இந்த தகவல் தெரிஞ்சா அது உன் வாழ்க்கையையே அழிச்சிடும். நீ அவனை விரும்பாட்டாலும் அவன் உன்னை விரும்பித்தானே பெண் கேட்டான். இதை மாப்பிள் ளைகிட்ட தெளிவா சொல்லிடு'' - என்றாள் அழுத்தமாய்.

பத்மினி குழப்பமாய் பயமாய் தலையாட்டிக் கொண்டிருக்கும் போதே வாசலருகே வந்துவிட்ட வசந்தன் ஒற்றை விரலால் கதவை கொட்டினான். சட்டெனத் திரும்பிய பாகீரதி. ''வாங்க'' - என்றவாறு தங்கையின் கைகளை அழுத்தினாள்.

''சொல்லிரு. மறந்திடாதே'' - என முனகிவிட்டு அவள் வெளி யேற. அவளுக்கு வழிவிட்டு, உள்ளே நுழைந்தான் வசந்தன். உடல்

முழுக்க நடுங்க நின்றவளைப்பார்க்கையில் மனம் கனிந்தது.புன்ன கையோடு பார்த்தான்.

''இதோ பாருங்க! முதல்ல உட்காருங்க. ஏன் இப்படி நடுங்குறீங்க. பிளீஸ் உட்காருங்க.''- அவன் இதமாய்ச் சொன்னம் நடுக்கத்தோடு அமர்ந்து கொண்டாள். அவளுக்கு எதிரே நாற்காலியை எடுத்துப் போட்டுக்கொண்டு அவனும் அமர, லேசாய் குறையத்துவங்கிய நடுக்கம் மீண்டும் அதிகரித்தது.

''மிஸ் பத்மினி! இந்த பயம் நடுக்கம் பதட்டம் எல்லாத்தையும் விட்டுட்டு நான் சொல்றதைகக் கொஞ்சம் கேளுங்க. கேட்டுட்டு உங்க முடிவைச் சொன்னாபோதும்'' - அவன் தெளிவாய் நிதான மாய்ச் சொல்ல, சற்று பதட்டம் குறைந்து அவனை நிமிர்ந்து பார்த் தாள்.

''நான்.நான் உங்ககிட்ட ஒண்ணு சொல்லணுமே'' - தயக்கமாய் அவள் கேட்க வியந்தான்.

''ம். சொல்லுங்க.''

''வந்து.. கொஞ்ச நாளா நான் ஒரு மிட்டாய்க் கம்பெனியில வேலை பார்த்தேன்''

''ம்''

''அந்த கம்பெனியோட ஓனர் பேர் கணேசன். அவரு... எங்க மாமாகிட்ட வந்து என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படு றேன்னு சொல்லி பெண் கேட்டார்.'' - வசந்தனின் முகம் மாறியது. அவளை பார்த்ததும் சிறகடித்த மனம் என்ற குருவி தன் சிறகை பதுக் கிக் கொண்டது. லேசான ஏமாற்றம் படிந்த முகத்தோடு கேட்டான்.

''ஓ! உங்க மாமா ஒத்துக்கலையா?''

''மாமா சரின்னு சொன்னாங்க. அதனால நானும் கல்யாணத்திற்கு சம்மதிச்சேன்.''

''என்ன? அப்படின்னா. நீங்க அவரை.. விரும்பலையா?''

''தப்பு தப்பு.வீட்ல பார்க்கிற .மாப்பிள்ளைய கட்டிகிட்டாத்தான் சந்தோஷமா வாழ முடியும்னு எங்க பாட்டி சொல்வாங்க''

''ஓஹோ!'' - புன்னகைத்தான். அந்தப் புன்னகையில் நழுவிய தன் மனதை இழுத்துப்பிடித்துக்கொண்டு பேசினாள்.

''கல்யாணத்துக்கு சம்மதிச்ச பிறகு கூட நான் அவர்கிட்ட ஒரு நாள் கூட பேசினதில்ல. திடீர்னு ஒருநாள் வந்து பேசணும்னு சொன்னார். என்னன்னு கேட்டா யாரோ என்னைப்பத்தி தப்பு தப்பா சொன்னாங் களாம். அதை நம்பி இவர் எம்மேல சந்தேகப்பட்டு என்னவெல் லாமோ பேசிட்டார். ''யார் போன் பண்ணினாங்களாம்?''

''யாரோ தெரியாது.ஆனா இவர் எப்படி அதை நம்பலாம்? என்னை எப்படி சந்தேகிக்கலாம். அதனால எம் மாமாகிட்ட வந்து எனக்கு அந் தக்கல்யாணமே வேணாம்னு சொல்லிட்டேன்.. அதுக்குப்பிறகு நான் வேலைக்கும் போகல. அந்த ஆளைப் பார்க்கவும் இல்ல.''

''நீங்க பொறுமையா பேசிப்பார்த்திருக்கலாமே''

''இல்ல. என்னை விரும்புறேன்னு சொன்னார். விரும்புற பொண்ணை யாராவது சந்தேகப்படலாமா? அதோட ஒரு சந்தேகப் பிராணியை நம்பி எப்படிங்க கழுத்தை நீட்ட முடியும்?''

''ம்.. அதுவும் சரிதான்.''

''அதான் வேணாம்னு சொல்லிட்டேன். இப்போ இதை ஏன் உங்ககிட்ட சொல்றேன்னா நாளைக்கு யார் மூலமாவது கேள்விபட்டு நீங்க வருத்தப்படக்கூடாதில்ல? அதான்..''

''இதுல வருத்தப்பட என்ன இருக்கு? பொண்ணுன்னு இருந்தா நாலுமாப்பிள்ளை வீட்டுக்காரங்க பெண் கேட்டு வரத்தான் செய்வாங்க. உங்களுக்கு விருப்பம் இல்லைன்னா விட்டுட வேண்டியது தானே. இது ஒரு பிரச்சனையே இல்ல''

''நிஜமாவா? நானும் உங்களை மாதிரிதான் நினைச்சேன். ஆனா அக்கா தான் மாப்பிள்ளைகிட்ட எதையும் மறைக்க வேண்டாம்னு சொன்னா.''

''பத்மினி! உங்களுக்கு என்னைப்பிடிச்சிருக்கா? '' - நேராய்ப்பார்த்துக் கேட்டதும் உள்ளம் படபடக்க ஆரம்பித்தது.

''அது..வந்து...''

''சும்மா சொல்லுங்க..உங்க விருப்பம் தான் முக்கியம்''

''உங்களுக்கு என்னைப்பிடிச்சிருந்தா உங்களை கட்டிக்க எனக்கு முழு சம்மதம்'' - என்றாள் வெட்கப்புன்னகையோடு. வசந்தனின் மனக்கூட்டிற்குள் மீண்டும் குருவி சிறகடித்தது.

''பத்மினி! நானும் உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும்''

''செ.. சொல்லுங்க..''

''உங்களை மாதிரியே எனக்கும்..''- எனத்தொடங்கிய நேரம் ஸ்வேதா ஓடி வந்து அவனது காலைக் கட்டிக்கொண்டாள்.

''சித்தப்பா! எவ்வளவு நேரம்தான் சித்தி கூட பேசுவே. வா சித்தப்பா விளையாடலாம். எனக்கு போரடிக்குது.'' - என சிணுங்க ஆரம்பிக்க, பத்மினி வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தாள்.

குழந்தையை தூக்கி தோளில் போட்டுக்கொண்டே, ''பத்மினி! நான் சொல்ல வந்ததை சொல்லிடுறேன். எனக்கு..''

''சித்தப்பா! போதும் வா சித்தப்பா., இல்லன்னா சித்தியயும் நம்ம கூடவே கூட்டிட்டுப் போயிடலாம்.'' - என்றதும் அவஸ்தையாய் சிரித்தான். அவனது அவஸ்தையை புரிந்து கொண்டவளாய் தலையசைத்தாள்.

''சரிங்க! நீங்க போங்க.பாவம்!' குழந்தை அழப்போகுது''

''பத்மினி, நான் உங்ககிட்ட நிறைய பேசணும்னு வந்தேன்.பட்!..ஓ.கே.நான் என்னோட செல்நம்பர் தர்றேன். நீங்க பிரியா இருக்கும் போது கால் பண்றீங்களா? கண்டிப்பா பேசணும்''

''ச... சரிங்க''

தனது பாக்கெட்டினுள் கையை விட்டு அலுவலக முகவரி அட்டையை எடுத்துநீட்டினான்.

''இதுல என்செல் நம்பர்,ஆபீஸ்நம்பர் எல்லாமே இருக்கு. எப்ப வேணா போன் பண்ணலாம்''

''மாமாகிட்ட கேட்டுட்டு பண்றேன்'' - எனறதும் சிரித்தான்.

''தேங்க்ஸ். எனக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்கு'' - என புன்னகையோடு சொல்ல, அவன் தோளிலிருந்து குழந்தை நழுவி, இறங்கி ஹாலுக்கு ஓடியது.

''மம்மி! டாடி! சித்தப்பாவுக்கு சித்திய ரொம்ப பிடிச்சிருக்குதாம்'' - என சத்தமாய் சொல்லிக்கொண்டே ஓட,முகம் முழுக்க புன்னகையோடு, அமராவதியும் ராஜசேகரும் தாம்பூலத்தட்டை எடுத்து, தயாளனிடம் நீட்டினார்.

''நல்லநேரம் இன்னும் ரெண்டு நிமிஷம் தான் இருக்கு.தட்டை மாத்திடுவோம்'' - என்றதும் பேயறைந்தது போல் நின்றிருந்த மனைவியை அழைத்தான் தயாளன்.

''சீக்கிரம் வா பாகீ! தட்டை மாத்திக்கலாம்'' -என்றதும் இருண்டு போன முகத்தோடு நெருங்கி கைகளை நீட்டினாள்.வெள்ளித்தட்டில் இருந்த பட்டுப்புடவையும் அதன் மேல் இருந்து அட்டிகையும் அழகிய கல் வைத்த வளையல்களும் அவளது பொறாமைத்தீயில் நெய்யை லிட்டர் லிட்டராய் ஊற்ற, பாகீரதி உடல் முழுக்க பற்றியெறிய துவங்கியது.

7

கார் சீரான வேகத்தில்ல போய்க்கொண்டிருக்க. முன் இருக்கையில் அமர்ந்திருந்த வசந்தன் லேசாய் கோபப் பட்டான்.

''ஏம்மா அவசரப்பட்டு தட்டை மாத்துனீங்க?''

''ஏண்டா! நல்ல நேரம் முடியுறதுக்குள்ள மாத்த வேண்டாமா? நீ ரெண்டு நிமிஷம் பேசுறேன்னுட்டு அரைமணி நேரமா அப்படி என்னதான் பேசின?'' - தாயார் திருப்பிக்கேட்டதும் அவஸ்தையாய் புன்னகைத்தான்.

''அரை மணி நேரம் ஆகிடுச்சா?''

''சரிதான். டயம் போறது கூட தெரியாம என் தம்பி இறங்கிப் போயிட்டான் போலிருக்கு.'' - காரையோட்டிக் கொண்டே ஆனந்தன்சொல்ல, அண்ணனை செல்லமாய் அறைந்தான்.

''போண்ணா! முக்கியமான விஷயத்தை பேசுறதுக்குள்ள இந்த வாலு வந்து எல்லாத்தையும் கெடுத்திடுச்சு''

''டேய்! இந்த வாலுதான் உங்க கல்ணெத்தையே நிச்சயம் பண்ணி வெச்சிருக்கு. இல்லன்னா நீ பேசி முடிச்சு வெளியே வர்றதுக்குள்ள ராகுகாலம் தொடங்கியிருக்கும். இவ்வளவு தூரம் வந்து பாதிவேலை முடிச்சிருக்காது''

Optimized using trial version www.balesio.com

''இருந்தாலும் எனக்கு முழுதிருப்தி இல்லையே''
''ஏண்டா! உனக்கு பொண்ணை பிடிக்கலையா?''
''சேச்சே! நான் அதைச் சொல்லல.''
''பின்னே? பொண்ணுக்கு உன்னை பிடிக்கலையா?''
''ஐயோ அண்ணா! என்னைப் பேசவிடேன். எனக்கு அவளையும் அவளுக்கு என்னையும் பிடிச்சிருக்கு. ரொம்பவே பிடிச்சிருக்கு.''
''பிறகென்ன?''
''எனக்கு ஏற்பட்ட சம்பவத்தை சொல்ல வேண்டாமா? அதற்குப் பிறகும் அந்தப் பொண்ணுக்கு என்னைப் பிடிச்சிருந்து தட்டை மாத்தினாத்தானே என்னால முழுசா திருப்தியடைய முடியும்?''
''போடா! என்ன பெரிய சம்பவம்? என்னவோ ஒரு பெண்ணை தாலிகட்டி அவகூட குடும்பம் நடத்திட்டு அவளை விரட்டின மாதிரி. பீல் பண்றே? ஏன்டா ஒரு மாப்பிள்ளைன்னு இருந்தா நாலு பெண்ணை பார்க்கிறது சகஜம்தானே. அதுல ஏதாவது ஒன்னுதானே அமையும்?''
''அதுக்கில்லண்ணா, கல்யாண மேடை வரை வந்து கடைசி நேரத்துல கல்யாணப்பொண்ணு காணாமப் போய் கல்யாணம் நின்னதும் மத்ததும் ஒண்ணா?''
இல்லதான்,. ஆனா எந்தத்தவறும் உம்மேல இல்லாதப்போ நீ ஏன் நடந்து முடிஞ்சதப்பத்தியே பேசற?''
''நல்லாச் சொல்லுப்பா.நானும் எவ்வளவோ சொல்லிட்டேன். இவன் கேட்கிறதா இல்ல''
''இல்லம்மா! இருந்தாலும்...''
''வசந்த்! உனக்கு இந்தப்பொண்ணை பிடிச்சிருக்கா இல்லையா?''
''பிடிச்சிருக்கு''
''பிறகென்ன? முதல்ல நல்லபடியா கல்யாணம் ஆகட்டும். அதுக்குப்பிறகு உன் மனசுக்கு தோணுற மாதிரி என்ன சொல்லணுமோ சொல்லிடு.''
''அது தப்பில்லையா அண்ணா?''
''எது?''
''கல்யாணத்துக்கு பிறகு சொல்றது?''
''ம்ஹும்.நீ சரிப்படமாட்டே அம்மா! பொண்ணோட மாமா போன் நம்பர் தந்தாரில்ல. போன் பண்ணி இவன் கிட்ட கொடுங்கம்மா. இப்பவே சொல்லட்டும் ''
''தேவையில்லை. என் செல்லுல அவளே பண்ணுவா''
''என்னது? இது எப்போ நடந்தது?''
''பேசும் போதே விசிட்டிங் கார்டு கொடுத்திட்டேன்.''
''அடப்பாவி! சொல்லவே இல்லை. அம்மா! பார்த்தீங்களா? கமுக்கமாக இருந்து எவ்வளவு வேலை பண்ணியிருக்கான்.இதுல

ஏன் அவசரப்பட்டீங்கன்னு நம்ம மேல கோபமும் வேற வருது''
''அண்ணா! நீ ரோட்டைப்பார்த்து காரை ஓட்டு,சீக்கிரமா வீட்டுக்கு போகணும்''
''ஏன்? வீட்டுக்கு போனதும் அம்மணி போன் பண்ணுவாங்களாக்கும்?''
''ஸ்ஸ்! உன்கூட வந்ததுக்கு பேசாம அப்பா கார்லயே ஏறியிருக்கலாம்.''- என பொய்யாய் சலித்துக்கொண்ட போது வசந்தனின் செல் போன் சிணுங்கியது.
''ஏய்! வந்திடுச்சி வந்திடுச்சு'' - ஆனந்தன் உற்சாகமாய் கத்த, ஆர்வமாய் போனை எடுத்தவனின் முகம் ஏமாற்றமாய் சுருங்கியது.
''என்ன வந்திடுச்சி? நம்ம மானேஜர் போன் பண்றார். நீ வேற...'' என்றவாறே போனை காதில் வைக்க. ஆனந்தன் காரை சீறிவிட்டான்.''
இரவு. தங்களது அறையில் அமர்ந்திருந்த தயாளன் மனைவியை மனம் நிறைந்து மெச்சிக்கொண்டிருந்தான்.
''பாகீ! நான் கூட உன்னை என்னவோன்னு நினைச்சிட்டேன். நீ எவ்வளவு அருமையான வரன் பார்த்திருக்கே. காலையில நீ பேசுனதை வெச்சு உன்னை ரொம்ப தப்பா நினைச்சேன். ஸாரி பாகீ''
''இப்பவும் என்னை நீங்க தப்பாத்தான் நினைச்சிட்டு இருக்கீங்க''
''இல்லம்மா, மாப்பிள்ளையையும் அவங்க குடும்பத்தாரையும் பார்த்ததுமே உம் மேல உள்ள கோபம் போயிடுச்சு. நீ என்னைத் தப்பா பேசினது கூட பரவாயில்ல. அந்தச் சின்னப்பொண்ணோட வாழ்க்கைய எப்படி அமைச்சுக் கொடுக்கப் போறியோன்னு பயந்திட்டேன்.
ஆனா... பத்மினி சொல்வாளே. நீ அக்கா இல்ல அம்மான்னு. இன்னிக்கு அதை நிரூபிச்சிட்டே பாகீ! உன்னை நினைக்கும் போது எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு. மாப்பிள்ளை நம்ம பத்மினிக்கு ரொம்பப் பொருத்தமா இருப்பான் இல்ல?''
''ம்.ம்'' - வெறுமனே தலையாட்டினாலும் அவளது நினைவு முழுக்க பத்மினியைச் சுற்றியே பறந்து கொண்டிருந்தது. அவளது கழுத்தில் அட்டிகையை போட்டுவிட்டு கைகளில் வளையலை மாட்டி அழகு பார்த்த அந்த அம்மாளின் மீது கோபம் கோபமாய் வந்தது.
பட்டுப்புடவையை கட்டிவரச்சொல்லி, தலைநிறைய பூ வைத்து புதுவிதமாய் அலங்காரம் செய்து விதவிதமாய் புகைப்படங்கள் எடுத்த போது மனம் குமைந்தது. என் கல்யாணத்திற்குக் கூட எனக்கு இத்தனை அலங்கரிப்பு இல்லை.
இவளுக்கு இப்போதே இப்படியென்றால் கல்யாணத்தின் போது என்னவெல்லாம் செய்வார்கள்? ச்சே! எல்லாம் என்னால் வந்தது.

நான் செய்ததெல்லாம் அவளுக்கு நன்மையாய் முடிந்து விடுகிறதே

''என்ன பாகீ! எதுவுமே பேசமாட்டேங்கிற? இன்னும் கோபமா?'' -கணவன் தொட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''ம்? என்ன கேட்டீங்க?''

''நீ என்ன? உட்கார்ந்திட்டே கனவு காண்றியா? கனவுல யாரு? உன் தங்கையும் அந்த ராஜகுமாரனும் மணக்கோலத்தில காட்சி தந்தாங்களா?''

''சும்மா பேசிட்டு இருக்காதீங்க. மணி என்னாகுது? நீங்க தூங்குங்க. காலையில வேலைக்கு போகணுமில்ல?''

''ஆமா. இன்னிக்கு உள்ள வேலையும் சேர்த்து செய்யணும். காலையில கொஞ்சம் சீக்கிரமா எழுப்பிவிடு பாகீ''

''ம். உங்க போனைக் கொஞ்சம் கொடுங்க.''

''இந்த நேரத்தில யார்கிட்ட பேசப்போற. மணி பதினொன்னாகுது.''

''கல்யாணம் முடிவான விஷயத்தை பாட்டிகிட்ட சொல்ல வேண்டாமா?''

''அதுக்காக இந்த நேரம் போன் பண்ணி பக்கத்து வீட்டுக்காரங்களை தொந்தரவு பண்ணலாமா? நாளைக்கு பண்ணலாம்''

''காலையில வேலைக்கு போயிடுவீங்களே. வர நைட் ஆயிடும். ரமணி வீட்ல தூங்க நைட் ஒருமணியாகும். இது முழிச்சிட்டுதான் இருப்பாங்க. இன்னிக்கே சொல்லிடலாம். இல்லன்னா பாட்டி கோவிச்சுப்பாங்க''

''கேட்கமாட்டியே. இந்தா பேசிட்டு சார்ஜர்ல போடு'' - என்றவாறு தலையணை அருகே இருந்த போனை எடுத்து நீட்டினான்.

''இனிமே எனக்கு ஒரு செல்வாங்கித் தந்திடுங்க''

''வாங்கிடுவோம். அக்காவும் தங்கையும் பேசிட்டே இருங்க''- என்றவாறு காலை நீட்டி படுத்துக்கொண்டான்.

''நீங்க தூங்குங்க. நான் பத்மினி ரூம்ல போய் பேசுறேன். அவளும் பாட்டிகிட்ட பேசணும்னு சொன்னா.''

''ம். பேசுங்க. மொத்த பேலன்சையும் காலி பண்ணிடாதீங்க. லைட்டை ஆப் பண்ணிட்டு போ.'' - என்றவாறு அவன் தூங்கத் தயாராக, விளக்கை அணைத்து விட்டு கதவை சாத்திவிட்டு தங்கையின் அறையை நோக்கி பூனை போல் பாதம் பதிச்சுச் சென்றாள். கதவு வெறுமனே சாத்தியிருக்க, மெதுவாய்த் திறந்து உள்ளே நுழைந்தாள்.

இரவு விடிவிளக்கின் ஒளியில் இரவு உடையில் உறங்கிய வளைக் காணும் போது உள்ளம் வெதும்பியது. பளிங்கு போன்ற முகம் கள்ளம் கபடமின்றி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது. கைகளில் கிடந்த கற்கள் பதித்த வளையல்கள் விடிவிளக்கின் ஒளிபட்டு ஜொலித்தது.

தங்கையின் முகத்தை உற்றுப்பார்த்தாள். களங்கமில்லா குழந்தை முகத்தில் இனிமையான புன்னகை நெளிந்தது. இனிமையான கனவு

போலும். காலையில் பார்த்தவன் கனவில் வந்திருப்பானோ?

''அக்கா! போன் நம்பர் தந்தாருக்கா. என்கிட்ட பேசணுமாம். போன் பண்ணச்சொன்னார்''- மாலையில் தயங்கியவாறே சொன்னாள்.
பத்மினியிடம் இருந்து அந்த அட்டையை வெடுக்கென பிடுங்கி

''அவனுங்களக்கென்ன சொல்லுவானுங்க. உடனே நீ போன் பண்ணிடாதே. அதையே காரணம் காட்டி பொண்ணோட கேரக்டர் சரியில்ல அது இதுன்னு சொல்லி கல்யாணத்தை நிறுத்திடுவாங்க''

''ஐயோ''

''கல்யாணம் நல்லபடியா முடியுறவரைக்கும் நான் சொல்றமாதிரி கேட்டு நட''

''சரிக்கா''

''அப்படியே எதுவும் பேசணும்னா மாப்பிள்ளை பண்ணட்டும். உன் மாமா போன் நம்பர் அவங்ககிட்ட இருக்கு''

''சரிக்கா. அப்போ இதை கிழிச்சுப் போட்டுடவா?''

''இ..இல்ல.. இது எங்கிட்ட இருக்கட்டும். நாளைக்கே நீ கல்யாணமாகிப்போயிட்டா நான் உன்கூட பேசணுமில்ல. அப்ப இது தேவைப்படும்.''

வெட்கமாய் புன்னகைத்தாள். '' சரிக்கா''

''அப்புறம். இந்த போன் நம்பர் தந்ததெல்லாம் உன் மாமாவுக்கு தெரியவேண்டாம் கோபப்படுவார்''

''சரிக்கா''

எப்போதுமே சொன்னதை அப்படியே கேட்டுக்கொள்வாள் பத்மினி.அதனால் பாகீரதி எந்த சிரமமும் இல்லாமல் அந்த விசிட்டிங் கார்டை கைப்பற்றிக்கொண்டாள். இப்போது அவளிடம் இருக்கும் ஒரே துருப்புச்சீட்டு அதுதான். இதை வைத்து தான் அவளது வேலையை முடித்துக்கொள்ள வேண்டும். அதையும் இன்றே முடித்துவிட வேண்டும். தொடங்கிய வேகத்தில் இந்தத் திருமணப்பேச்சு முடிவடைய வேண்டும்.

அவசரமாய் அலமாரியைத் திறந்து பேப்பருக்கடியில் வைத்திருந்த முகவரி அட்டையை எடுத்தாள். தங்கையை திரும்பிப்பார்க்க, பத்மினியிடம் துளியும் அசைவில்லை. வந்த சுவடில்லாமல் வெளியேறி, தன் அறையை அடைந்த கதவைத்திறந்து கட்டிலைப்பார்த்தாள்,.

கட்டிலில் சன்னமான குறட்டை ஒலியோடு தூங்கிக்கொண்டிருந்தான் தயாளன். கதவை சாத்தி சத்தமில்லாமல் வெளிப்பக்கமாய் தாளிட்டாள்.மெதுவாய் அடியெடுத்து பின் கட்டிற்கு சென்றாள். புழக்கடை வாசலில் அமர்ந்து கொண்டு வீட்டிற்குள் ஒருமுறை பார்த்துவிட்டு செல்போனில் வசந்தனின் செல் நம்பரை தட்டினாள்.

தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் வசந்தன்.

Optimized using trial version www.balesio.com

கண்களை மூடினால் பத்மினியின் குழந்தை முகம் தோன்றி சிரித்தது. நிச்சயதார்த்த புடவையில் தேவதையாய் ஜொலித்தவளது உருவம் மனக்கண்ணில் தோன்றி உறக்கத்தை சுத்தமாய் விரட்டியடித்தது.

போன் நம்பர் கொடுத்தேனே. ஒரு போனாவது பண்ணுகிறாளா? நான் வேறு பெரிய வீராப்பாய் அம்மாவிடம் உள்ள போன் நம்பரையும் வேண்டாம் என்றேன். ஒரு போன் பண்ணேன் பத்மினி' அவனது வேண்டுதலை ஏற்று உடனே மணியடித்தது.

ஆவலாய் போனை எடுத்தான். ஏதோ புதிய நம்பர். நிச்சயம் இது பத்மினியாகத்தான் இருக்கும் என்று உற்சாகமாய் போனை எடுத்து காதில் வைத்தான்.

''ஹலோ''

''ஹலோ! நான் பத்மினியோட''

''ஹாய் பத்மினி, நான்தான் பேசுறேன். உங்க போனிற்காகத்தான் இவ்வளவு நேரம் வெயிட்டிங்.''

''ஹலோ! பத்மினி, இல்ல பத்மினியோட அக்கா பேசுறேன்.'' - என்ற கடுப்பான குரலில் உற்சாகம் வடிந்துவிட, எழுந்து அமர்ந்தான்.

''நீ நீங்களா? ஸாரிங்க. நான் பத்மினின்னு நினைச்சு..''

''ஏன் ஸார் பொண்ணு பார்க்க வந்தா பேசாம பொண்ணை பார்த்திட்டு போக வேண்டியததுதானே. அதைவிட்டுட்டு இதென்ன பழக்கம்? போன் பண்ணுன்னு நம்பர் குடுத்தீங்களாமே''

''ஸாரி. நான் முக்கியமான விஷயம் பேசணும்னுதான்.''

''என்ன பெரிய புடலங்காய் விஷயம்? உங்களை தணியா பேசவிட்டதே தப்பு. இந்த அழகில போன் பண்ணிவேற பேசணுமா?''

''இதுக்குத்தான் போன் பண்ணீங்களா? அதுவும் இந்த நேரத்தில''-அவனது தொனி மாறியதும் சட்டென உஷாரானார் பாகீரதி.

''தப்பா எடுத்துக்காதீங்க மாப்பிள்ளை. எல்லாம் ஒருமுன்னெச்சரிகை தான். இதுவும் கைநழுவிப் போயிடக்கூடாதேன்ற ஆதங்கம் தான்.''-என்றாள் குழைவாய்.

''என்ன சொல்றீங்க?''

''ஆமா மாப்பிள்ளை. இதுக்கு முன்னால பார்த்த மாப்பிள்ளையும் இப்படித்தான். கல்யாணம் தான் பேசி முடிவு பண்ணியாச்சேன்னு வீட்டுக்கு வந்து போய் இருப்பான். போன்ல பேசுவான். வெளியே கூட பத்மினியை கூட்டிட்டு போயிருக்கான். கடைசியில அவங்களுக்குள்ள ஏதோ சின்ன பிரச்சனை போலிருக்கு. சட்டென்று பிரிஞ்சிட்டாங்க.

இப்ப கேள்வி கேட்கிறவங்ககிட்ட பதில் சொல்லிமாளல. வெளியே தலைகாட்டவே முடியாம போச்சு. இப்பத்தான் கொஞ்சமா பழசையெல்லாம் மறக்க ஆரம்பிச்சோம். ஏதோ எங்க நல்ல

நேரம் உங்க சம்பந்தம் கிடைச்சிருக்கு. இதுவாவது எந்த சிக்கலும்
இல்லாம நல்லபடியா நடக்கணும்னு பயந்திட்டு இருக்கோம்''-ச
ற்றும் தயங்காமல் பிசிறாமல் பாகீரதி சொல்ல. ஏ.சி ரூமிலும் வியர்த்
தது வசந்தனுக்கு.

''ஹலோ! நீங்க... எதைச் சொல்றீங்க?''

''அதான் இவ வேலை செய்தாளே அந்த மிட்டாய் கடைக்காரன் கணேசன்...''

கணேசன் என்ற பெயரில் நிமிர்ந்து அமர்ந்தான். ''அது..உங்க வீட்டுக்காரர் பார்த்த வரன் தானே?''

''சேச்சே! அவருக்கு ஏது நேரம்? அந்தப்பயதான் வந்து பெண் கேட்டான். நாங்க ரெண்டுபேரும் விரும்புறோம். எப்படியாவது சேர்த்து வையுங்கன்னு கெஞ்சினான். எம்புருஷனும் மனம் இரங்கி சம்மதிச்சார்.''

''அப்போ... அவங்க லவ் பண்ணாங்களா?''-கேட்கும் போதே மனம் பதறியது.

''அந்தக் கருமத்தையெல்லாம் எங்கே வெளியே சொல்ல முடியும்? எப்படியோ நடந்தது நடந்து போச்சுன்னு விட்டுட்டோம். ஆனா பிரச்சனை அதோட முடியாது போலிருக்கு.''

''எ...என்ன?''

''ஆமாம் மாப்பிள்ளை. நீங்க சும்மா பெண் பார்க்க வர்றீங்கன்னு நினைச்சோம்.

நீங்க என்னன்னா நிச்சயமே பண்ணீட்டிங்க. இது எப்படியோ அந்தப் பயலுக்கு தெரிஞ்சு போச்சு போலிருக்கு. குடிச்சிட்டு வந்து ஒரே ரகளை. தெருவே கூடி நின்னு வேடிக்கைப்பார்த்திச்சி. ரொம்ப அசிங்கமாப் போச்சு.''

வசந்தனிடம் சற்றும் அசைவில்லை. பாகீரதி புன்னகையோடு தொடர்ந்தாள். ''அந்தப்பயதான் இவளை மறக்காம சுத்திட்டு இருக்கான்னு நினைச்சா இவளும் ஒரே அழுகை. என்னன்னு கேட்டா அவனை மறக்கமுடியலன்னு சொல்லி கதறுறா. நான் என்ன பண்ணுவேன். இவபுத்தி ஏன் இப்படி போகணும்?

முதல்லயே எங்ககிட்ட தெளிவா சொல்லியிருந்தா உங்களை வர வேண்டாம்னு சொல்லியிருப்பேன். இப்ப பட்டும் கட்டினபிறகு இந்தப் பொண்ணு இப்படிச் சொல்றாளே. மாப்பிள்ளை! எனக்கு உங்களை நினைச்சாத்தான் வேதனையா இருக்கு''

''எதுக்கு?''

''இல்ல. ஏற்கனவே உங்களை கட்டினவ யார்கூடவோ ஓடிப்போயிட்டாளாமே. இப்ப இவளும் அப்படி எதுவும் பண்ணிட்டா உங்க நிலமை என்னாகும்? அவமானம் தாங்காம உசுரையே விட்டுடுவீங்களே''-பாகீரதியின் அதிகபட்சமான நடிப்பில் வசந்தனின் புருவம் சுருங்கியது.

''என்ன பெண் இவள்? இந்த அர்த்தராத்திரியில் போன் பண்ணி தன்னுடன் பிறந்த தங்கையைப் பற்றி அவளைக் கட்டிக் கொள்ளப் போகிறவனிடம் இவ்வளவு மட்டமாய் பேசுவாளா? அதுவும் இவளது கவலை என் மீது தானாம். தன் தங்கை மீது இல்லையாம் இது என்ன விந்தை?

இவள் சொல்வது எப்படி உண்மையாக இருக்க முடியும்? காலையில் பத்மினி பேசியது முழுக்க நினைவில் வந்தது. இவள் சொல்வது நிச்சயமாய் உண்மையாய் இருக்க முடியாது. பத்மினி சொன்னதில் எந்த பொய்யும் இருக்க வாய்ப்பில்லை. அது அனைத்தும் நிஜம்.

அவளது முகத்திலோ வார்த்தையிலோ எந்தக் கபடும் ஒளிவுமறைவும் இல்லையே. இவளிடம் ஏதோ தப்பு இருக்கிறது. ஏன் இப்படிச் சொல்கிறாள்?''-வசந்தனின் மூளை தீவிரமாய் சிந்திக்கத் துவங்கியது.

''என்ன மாப்பிள்ளை! எதுவுமே பேசாம இருக்கீங்க?''

''என்ன பேசுறது?''

''உங்க முடிவைச் சொல்லுங்க. எதுவா இருந்தாலும் நாங்க ஏத்துக்கிறோம்''

''முடிவா? என்ன முடிவு?''

''அதான்.. இவ்வளவு நேரமாச் சொன்னேனே''

''அப்போ உங்க தங்கை அவனை விரும்புகிறாளா?''

''ஆமா! அப்படித்தான் சொல்றா. உங்களைப் பிடிக்கலையாம்''

''ஓஹோ! சரி. இப்ப நான் என்ன பண்ணனும்?''

''என்னைக் கேட்டா.. நான் எப்படிச் சொல்றது?''

''பரவாயில்ல சொல்லுங்க. இவ்வளவுதூரம் எம்மேல அக்கறையோட போன் பண்ணியிருக்கீங்க. உங்ககிட்ட கேட்டா தப்பில்ல. செ
ால்லுங்க. நான் என்ன பண்ணனும்?''

''தம்பி! நீங்க ரொம்ப நல்லவரா தெரியுறீங்க. உங்க அழகுக்கும் மனசுக்கும் இவளைவிட நல்ல பொண்ணு கிடைப்பா.''

''அப்போ இந்த கல்யாண பேச்சை நிறுத்திடலாமா?''

''அது தான் தம்பி நம்ம எல்லாருக்குமே நல்லது. நாளைக்கே
ஒன்னு கிடக்க ஒன்னு ஆகிடுச்சின்னா நமக்குத் தானே அசிங்கம்?
அதுவும் ஏற்கனவே அனுபவப்பட்டவர் நீங்க''

''ஆமா! இதெல்லாம் உங்களுக்குத் தெரியுமா?''

''தெ..தெரியும். தரகர் சொன்னார்.''

''ஐ.ஸீ. இந்த விஷயம் பத்மினிக்குத் தெரியுமா?''

''ம். தெரியுமே. நான் அவகிட்ட எதையும் மறைச்சதில்ல.''

''சரி. அப்போ நீங்க சொல்ற மாதிரியே செஞ்சிடுறேன். உங்க அக்
கறைக்கு ரொம்ப நன்றி.''

''பரவாயில்ல தம்பி. எல்லாம் ஒரு மனிதாபிமானம் தான்''

''தேங்க்ஸ். எனக்கு ஒரு டவுட். கேட்கலாமா?''

''கேளுங்க தம்பி''
''இல்ல.. பத்மினி.. உங்க கூடப் பொறந்த தங்கையா?''
''ஆமா! ஏ..ஏன் கேட்கிறீங்க?''
''இல்ல.. வயசு வித்தியாசம் அதிகமாக தெரிஞ்சதே. அதான் கேட்டேன்''
''ஆமாதம்பி! என்னைவிட ஏழுவயது சின்னவ. அவளுக்கு நான் அம்மா மாதிரி..''
''ஓ! ரொம்ப சந்தோஷம் போனை வெச்சிடவா?''
''தம்பி! ஒருநிமிஷம்''
''என்ன? சொல்லுங்க''
''என்ன முடிவா இருந்தாலும் காலையில எட்டுமணிக்குள்ள சொல்லிடுங்க''
''ஏன்?''
''எங்க வீட்டுக்காரர் எட்டுமணிக்கெல்லாம் வேலைக்கு போயிடுவாங்க. அதான்''
''சரிங்க. ஆமா உங்க ஹஸ்பண்ட் என்ன வேலைபார்க்கிறாங்க?''
''இரும்புக் கம்பெனியல வெல்டிங் பண்ற வேலை.''
''இரும்புக் கம்பெனின்னா? எங்கே? சென்னையில தானா?''
''ஆமா! செங்கல்பட்டு ரோட்டோரமாவே இருக்கு. பெரிய கம்பெனிதான்.ஆனா சம்பளம் தான் சொல்லிக்கிற மாதிரி இல்ல''
''சரிங்க. நான் காலையில பேசுறேன். போனை வெச்சிடவா?''
''ம்''-என்றவாறு பாகீரதி போனை வைத்துவிட போனை வைக்கவும் தோன்றாமல் அப்படியே அமர்ந்திருந்தான் வசந்தன். மனதில் பலவித குழப்பங்கள் அதற்கான விடையைத் தேடி அலைந்தன. உறக்கம் முற்றிலும் விலகிவிட, யோசனையாய் எழுந்து அந்த அறைக்குள் நடமாட ஆரம்பித்தான்.

போனை வைத்த பாகீரதியின் முகம் பிரகாசமாய் மின்னியது. உடல் முழுக்க உற்சாக அலை பாய்ந்தது. நிம்மதி மூச்சோடு எழுந்து பின்வாசல் கதவை மூடிவிட்டு தங்கையின் அறையை அடைந்தாள்.

பத்மினி தனக்கு நிகழப்போகும் எவற்றையும் அறியாமல் நிம்மதியான உறக்கத்தில் ஆழ்ந்திருக்க, கண்களில் வெறி மின்ன அவளை வெறித்தாள் பாகீரதி.

''தூங்குறியா? தூங்கு. உன் தூக்கம் இன்னியோடமுடியப் போகுது டி. சின்ன வயசில இருந்தே என்னைவிட கீழே தான் இருக்கணும். என் தயவிலதான் வாழ்ந்தாணும்.

இனி நான் ஆட்டுறமாதிரி தான்டி நீ ஆடணும். என்னை விட உயரத்துக்கு போயிடலாம்னு நினைச்சியா? மாப்பிள்ளைய பார்த்ததும் முகமெல்லாம் பூரிச்சுபோயிருந்ததே. அந்த பூரிப்பெல்லாம் விடிஞ்சதும் தானா காணாமப்போயிடும். பழைய மாதிரி எண்ணெய் தேய்த்து படியவாரி கிட்டு பழைய துணிய கட்டிகிட்டு ஏதாவது ஒரு

வேலைக்கு போக வேண்டியது தான்.

பிச்சைக்காரிக்கு ராஜவாழ்க்கை கேட்குதோ? நீ என் கைக்குள்ள இருக்கிற வரைக்கும் உனக்கு ஒரு நல்லது நடக்க விடமாட்டேன்டி''
-நறநறவென பற்களைக் கடித்தாள் பாகீரதி.

8

''பட்பட்''-என சிதறிய மின்சார பொறிகள் தன் மீது படதாவாறு இரும்பு கவசத்தால் முகத்தை மூடிக்கொண்டு இரும்புக்கம்பிகளை வெல்டிங் செய்து கொண்டிருந்த தயாளனை சக ஊழியர் ஒருவர் அழைத்தார்.

''தயா! உன்னைத் தேடிட்டு ஒருத்தர் வந்திருக்காருப்பா''

தன் வேலையை நிறுத்திவிட்டு திரும்பினான். ''யாரு கிருஷ்ணா?''

''தெரியலப்பா. ஆனா ஆளு டிப்டாப்பா இருக்கான். வரந்தாவில தான் நிற்கினான்.'' -என்றதும் குழப்பமாய் மிஷினை அணைத்துவிட்டு எழுந்தான். பழைய துணியால் கைகளை துடைத்துவிட்டு சூப்பர்வைஸரை நெருங்கினான்.

''ஸார்!என்னைப் பார்க்க யாரோ வந்திருக்காங்களாம். போய் பார்த்திட்டு வரட்டுமா?''

''என்னப்பா இது? வேலை நேரமாச்சே. சரி. சட்டுன்னு பார்த்திட்டுவா. எம்.டி வர்ற நேரம்''-என எச்சரித்து அனுப்பினார். வேகமாய் வராந்தாவை நெருங்கியவன் ஆச்சர்யமாய் மலர்ந்தான்.

வெள்ளை, ஆரஞ்சு ரோஜா நிறமென வரிசையாய் நின்ற தான்பூ மரங்களின் நிழலில் காத்திருந்தான் வசந்தன். பசுமையான புல்தரையில் தானியங்கி பைப் நீரை பீய்ச்சிக்கொண்டிருக்க, அதனை ரசனையாய் பார்த்துக் கொண்டிருந்தவனை நாலே எட்டில் நெருங்கினான்.

''அடடே! வாங்க மாப்பிள்ளை!''-கைகுலுக்க கையை நீட்டியவன் சற்று தயங்க, அவனது அழுக்கு படிந்த கையைப் பற்றி அழுத்தமாய் கைகுலுக்கினான் வசந்தன்.

''கையெல்லாம் அழுக்கு மாப்பிள்ளை''
''இல்ல அண்ணே! இது உங்க உழைப்பின் அடையாளம்''
''ஓ! தேங்க்யூ மாப்பிள்ளை. வாங்க. கேன்டீன்ல போய் டீ சாப்பிடலாம்''
''இல்ல இருக்கட்டும். இங்கேயே நின்னு பேசலாம்.''
''என்ன மாப்பிள்ளை? என்ன விஷயம்? இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க.''
''உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்.''
''லீவு சொல்லிட்டு வரட்டுமா? வீட்ல போய் பேசுவோம்''
''நோ நோ. வேண்டாம். நான் உங்ககிட்ட தனியா பேசணும்னு வந்திருக்கேன். இன்பாக்ட். நான் இங்க வந்தது என் வீட்ல யாருக்கும்

''தெரியாது'' - என்றதும் தயாளனின் முகம் மாறியது. திருமண விஷயமாய் பேசப்போகிறானோ?

''என்ன மாப்பிள்ளை? எதுவும் பிரச்சனையா?''

''சொல்றேன். ஒரு நிமிஷம்..'' - என்றவாறு தனது செல்போனை உயிர்ப்பித்து நேற்று இரவு வந்த எண்ணிற்கு டயல் செய்தான். ஒரு சில விநாடிகளில் தயாளனின் சட்டைப் பையில்இருந்த செல்போன் குரல் எழுப்பியது. போனை எடுத்த தயாளனின் கையிலிருந்து வாங்கிப் பார்த்தான் வசந்தன்.

தனது எண் திரையில் ஒளிர, போனை அணைத்தான். குழப்பமான முகத்தோடு தயாளனிடம் நீட்டினான்.

''என்ன தம்பி! ஏன் போனைக் கட் பண்ணீங்க?''

''அண்ணே! இப்ப வந்த நம்பர் உங்க போன்ல டயல்டு நம்பர்கள் பட்டியல்ல இருக்கான்னு பாருங்க''

''இது யாரு நம்பர்?''

''என்னோட நம்பர் தான்''

''எனக்கு உங்க நம்பரே தெரியாதே. பிறகெப்படி இதுல இருக்கும்?''

''கொஞ்சம் பாருங்களேன். ப்ளீஸ்'' - குழப்பமாய் தனது போனில் தேடிப்பார்த்து விட்டு மறுப்பாய் தலையசைத்தான்.

''இல்லையே! என்ன தம்பி பிரச்சனை?''

''அண்ணே! உங்ககிட்ட நான் கொஞ்சம் பேசணும். அதுக்கு முன்னால சில கேள்விகள் கேட்கணும். தயவு செய்து தப்பா எடுத்துக்காம பதில் சொல்வீங்களா?''

''என்ன தம்பி கேட்கணும்?''

''அண்ணே! நேற்று நாங்க வந்திட்டு போன பிறகு உங்க வீட்ல எதுவம் பிரச்சனை ரகளை நடந்ததா?''

''என்ன?''

''ஐ மீன் உங்க வீட்ல உள்ளவங்களா இல்ல வெளில இருந்து யாரோ இந்தக் கல்யாணம் நடக்கக்கூடாதுன்னு வருத்தப்பட்டாங்களா? வந்து சண்டை போட்டாங்களா?''

''சேச்சே! எங்க வீட்ல எல்லோருக்குமே ரொம்ப சந்தோஷம்ப்பா. நைட் பத்துமணி வரைக்கும் உட்கார்ந்து பேசிட்டு இருந்தோம்''

''பத்மினி?''

''அவளும் தான். அவதான் ரொம்பசந்தோஷமா இருந்தா''

''ஷ்யூர்? நல்லாத்தெரியுமா?''-ஆர்வமாகக் கேட்டான்.

''எனக்குத் தெரியாதா? ரொம்ப சந்தோஷமா இருந்தாப்பா''

''இந்த கணேசன் யாரு?'' தயக்கமாய் வசந்தன் கேட்டதும் தயாளனின் முகம் மாறியது.சற்று தடுமாறினான். அவனது தடுமாற்றம் லேசாய் பயத்தை ஏற்படுத்தினாலும் முகம்மாறாமலே கேட்டான்.

''அண்ணே! எதுவா இருந்தாலும் சொல்லிடுங்க. ஏன்கிட்ட

எதையும் மறைக்க வேண்டாம்''

''தம்பி! மறைக்கணும்னு நினைக்கலை. தேவையில்லைன்னு தான் நினைச்சேன். பட் உங்களுக்கு தெரியுறதில தப்பில்ல. அவன் நம்ம தெருவுக்கு அடுத்த தெருவில மிட்டாய் கடலை உருண்டை எல்லாம் போடுற கடை நடத்துறான். ஒரு ரெண்டு வருஷமா நம்மபத்மினி அங்கேதான் வேலைக்குப் போனாள்''

''தெரியும். பத்மினியே சொல்லியிருக்கா. எனக்கு ஒரே ஒரு பதில்தான் தெரியணும். பத்மினியும் அந்த கணேசனும் லவ் பண்றாங்களா?''

அவசரமாய் பதறிமறுத்தான் தயாளன். ''ஐயோ! அப்படியெல்லாம் எதுவும் கிடையாது தம்பி. நம்ம பொண்ணு தங்கம். அதுமனசில எந்த தப்பும் கிடையாது. அந்தக்கணேசனும் ரொம்ப நல்ல பையன் தான். இவளை பிடிச்சிருக்குன்னு நேரே எங்கிட்ட தான் வந்து சொன்னான். அவகிட்ட கூட சொல்லல. நேர்மையான பொறுப்பான பையன். அதனால நான் தான் பத்மினிகிட்ட பேசி சம்மதிக்க வைச்சேன். இதுதான் உண்மை தம்பி. தயவு செய்து பத்மினியை சந்தேகப் பட்டுடாதீங்க. அது ரொம்ப நல்லபொண்ணு''

''நான் சந்தேகப்பட்டு கேட்கல்ல. காரணமாத்தான் கேட்கிறேன். நீங்க எல்லாருமே சம்மதிச்சபிறகும் ஏன் அந்தக்கல்யாணம் நின்னு போச்சு''

''தம்பி! அது ரொம்பக்கொடுமை. அந்தப்பயதான் விரும்பி வந்து பொண்ணு கேட்டான். பிறகு என்ன ஆச்சோ தெரியல. இப்ப நீங்க கேட்ட மாதிரி ஏதோ ஒரு பையனுக்கும் பத்மினிக்கும் தொடர்புன்னு அவனுக்கு தகவல் வந்ததாம். அதைப்பத்தி பத்மினி கிட்டயே கேட்டிருக்கான்.

அதுல பத்மினிக்கு ரொம்ப வருத்தம். இந்தமாதிரி ஒருத்தனைக் கட்டிகிட்டு காலம்பூரா என்னால கஷ்டப்பட முடியாது. எனக்கு கல்யாணமே வேணாம்னு அழுதிட்டா. அதுக்கப்புறம் அவளை சமாதானம் பண்ணித்தான் பாகீ உங்களை வரவழைச்சா''

''ஓ! கல்யாணம் நின்ன பிறகு அந்த கணேசன் உங்க வீட்டுக்கு வந்து பேசவே இல்லையா?''

''இல்லை. ஆனா இங்கே வந்தான். வந்து நான் தெரியாம பேசிட்டேன். யாரோ ஒரு பொண்ணு போன்ல சொன்னதை வெச்சு பத்மினிய சந்தேகப்பட்டுட்டேன். என்னை மன்னிச்சிடுங்கன்னு அழுதான். எப்படியாவது பத்மினிகிட்ட பேசி சமாதானம் பண்ணி எனக்கு கட்டி வையுங்கன்னு..''

''வெயிட்! அவன் என்ன சொன்னான்? போன் வந்ததா?''

''ஆமா தம்பி. ஏதோ ஒரு பெண் பேசினாளாம். பத்மினியைப் பத்தி..''

''பொண்ணா?'' வசந்தனின் புருவம் நெளிந்தது. தீவிரமாய் யோசி

த்தான். அந்தப்பெண்கூட ஒருவேளை இந்த பாகீரதியாய் இருக் கு்மோ? சொந்தத் தங்கையின் வாழ்க்கையை கெடுக்கும் அளவிற்கு அப்படியென்ன விரோதம் அவளுக்கு?

"என்ன தம்பி அமைதியாகிட்டீங்க?"

"அண்ணே! நேத்து நைட் அதே மாதிரி எனக்கும் ஒரு போன் வந்தது?" வசந்தன் நிதானமாய்ச்சொல்ல, துல்லியமாய் அதிர்ந்தான் தயாளன்.

"என்ன?"

"யெஸ். எங்கிட்ட பேசினதும் ஒரு பெண்"

"ஐயோ! என்னதான் நடக்குது? நாங்க யார் வம்புக்கும் போன தில்ல. யார்குடியையும் கெடுக்கல்ல. எங்களுக்கு யார் விரோதி இருக்க முடியும்? இதுக்கு முன்னால கூட இப்படி ஒருமுறை நடந்தி ருக்கு தம்பி. இது யாரோட வேலைன்னு புரியலையே"-பதறினான்.

"அண்ணே! மனசை திடப்படுத்திக்கங்க. எல்லாம் உங்களுக்கு தெரிஞ்ச ஆள் பண்ணின வேலைதான் இது"

இன்னும் பலமாய் அதிர்ந்தான் தயாளன். "என்ன? எனக்குத் தெரிஞ்ச ஆளா? யாரு? யாரு தம்பி?"

"உங்க வீட்ல உள்ள ஆள்தான்"

"என்ன? என் வீட்ல தம்பி! என்வீட்ல என் மனைவியும் பத்மினியும் பின்!"

"உங்க மனைவியோட வேலைதான் இது" - வசந்தன் அழுத்த மாய்ச் சொல்ல, அதிர்ந்து உறைந்துபோனான் தயாளன். உடலும் குரலும் நடுங்கிற்று.

"த.. தம்பி! நீ நீங்க என்ன சொல்றீங்க?"

"ஸாரிண்ணா. நான் சொல்றது எல்லாமே உண்மை. உங்க போன்ல இருந்துதான் இராத்திரி பதினொன்றரைக்கு எனக்கு போன் வந்தது. உங்க வொய்ப் தான் பேசினாங்க"

"போனைக்கொடுங்க. பாட்டிக்கு போன் பண்ணனும்' என்ற மனைவியின் குரல் காதில் ஒலித்தது. அவசரமாய் தனதுபோனை எடுத்து அதில் கும்பகோணத்திற்கு போன் செய்யப்பட்டுள்ளதா என ஆராய்ந்து விட்டு ஏமாற்றமாய் நிமிர்ந்தான் முகம் கோபத்தால் சிவந் தது.

"என்ன சொன்னாள்?"-இறுகிய குரலில் கேட்டவனின் தோனில் கை வைத்து ஆதரவாய் அழுத்திவிட்டு, பாகீரதி பேசியவற்றை ஒன்று விடாமல் சொல்லத்துவங்கினான் வசந்தன். கேட்கும்போதே தயாள னின் நரம்புகள் புடைத்தன. கண்களில் கணல்தெறிக்க. பற்களை நொறுங்கிவிடும் அளவிற்கு கடித்தான்.

"அப்படியா சொன்னாள்? அவளை இப்பவே போய்..." ஆத்திர மாய் கிளம்பியவனை கப்பென பற்றி நிறுத்தினான்.

"அண்ணே! அவசரப்படாதீங்க. நான் சொல்றதைக்கேளுங்க"

"விடுங்க தம்பி! ஒன்னுமறியாத அந்த பச்சைப்புள்ளயப்பத்தி என் னவெல்லாம் பேசியிருக்கா. அவளை சும்மா விடலாமா? விடுங்க என்னை"

"அண்ணே! இப்ப நீங்க கோபப்படுறதாலோ அவங்களை தண் டிக்கிறதாலயோ அவங்களோட வெறுப்பு அதிகமாகுமே தவிர குறை யாது"

"அப்போ அவளை அப்படியே விடச்சொல்றீங்களா?"

"இல்ல. பொறுமையா இருக்கச்சொல்றேன். இதோ பாருங்க! நீ ங்க சொல்றதை வெச்சுப்பார்த்தா பத்மினிக்கு வந்த நல்ல வரனெல் லாம் கெடுத்தது உங்க மனைவிதான்னு புரியுது. ஆனா அது ஏன்னு நாம கண்டுபிடிக்க வேண்டாமா?"

"அது ஒன்னும் பெரிய கஷ்டம் கிடையாது தம்பி. இயல்பாவே பத்மினி ரொம்ப நல்ல பொண்ணு. எதுக்கும் ஆசைப்படாதவ. கப டுசூது அறியாதவ. கோவில்ல இருக்கிற அம்மனாட்டம் அத்தனை அழகு. பத்மினியோட மென்மையான குணமும் பேசுற தன்மையும் எல்லாருக்கும் பிடிக்கும். என்வீட்டுக்காரி அப்படியே ஆப்போசிட். அதனால இந்த பொறாமை வர்றது இயல்புதானே. ஆனா பெத்த தாயா நினைக்கிற குழந்தையை தண்டிக்கிற அளவுக்கு கேவலப்படுத் துற அளவுக்கு மோசமானவன்னு எனக்குத்தெரியாமப்போச்சே"

"அண்ணே! பத்மினியோட அம்மா அப்பா எப்போ இறந் தாங்க?"

"அது எனக்கு சரியாத்தெரியல. ஆனா பத்மினி சின்னவளா இருக்கும் போதே இறந்துட்டதா பாகிசொல்வா. அப்போ இருந்தே ரெண்டு பேரையும் கும்பகோணம் பக்கத்தில உள்ள அவங்க அப்பா வழிபாட்டி தான் வளர்த்திருக்காங்க. அவங்க எனக்கும் தூரத்து செ ாந்தம்"

"இப்போ அந்த பாட்டி இருக்காங்களா?"

"ம். கும்பகோணத்தில தான் இருக்காங்க"

"அண்ணே! உங்க மனைவிக்கு பத்மினிமேல ஏதோ காழ்ப்பு ணர்ச்சி இருக்கு. இதை இப்படியே வளரவிட்டா அது பத்மினிக்கே ஆபத்தாகிடும். அதனால நான் ஒண்ணு சொன்னா கேட்டீங்களா?"

"எ.. என்ன தம்பி?"

"பத்மினி இனியும் உங்க வீட்ல இருக்க வேண்டாம்"

"தம்பி!"

"உங்களுக்கு பத்மினிக்கு எல்லாருக்கும் என்னை பிடிச்சிருக் கில்ல?"

"ஆமா"

"அப்போ இன்னிக்கே.. இல்ல.. நாளைக்கே எங்களுக்கு கல் யாணம் நடக்கணும்"

"எ.. என்ன? நாளைக்கேவா?"

Optimized using trial version www.balesio.com

''யெஸ். உங்க வொய்ப் தான் எப்படியும் இந்தக் கல்யாணத்தை நிறுத்திடுவேன்னு நினைச்சிருப்பாங்க. நான் எதுவும் செய்யலன்னு தெரிஞ்சா இதை நிறுத்த வேற ஏதாவது முயற்சி எடுப்பாங்க இல்லையா?''

''ஆ.. ஆமா''

''அவங்க திட்டம் எதுவுமே பலிக்கலன்னா ஒருவேளை பத்மினிகிட்ட கூட என்னைப்பத்தி எதையாவது சொல்லி கல்யாணத்தை நடக்கவிடாம பண்ணிடுவாங்க''

''செய்வாள். அவள் செய்வாள்''-கோபமாய் ஒப்புக் கொண்டான் தயாளன்.

''அதனால தான் சொல்றேன். பத்மினிதான் என்னோட வொய்ப்புன்னு நான் நேற்றே முடிவு பண்ணிட்டேன். பிறகேன் வெயிட்பண்ணனும்? நாளைக்கே ஏதாவது ஒரு கோவில்ல வெச்சு சிம்பிளா கல்யாணத்தை முடிச்சிடலாம். அதற்கு பிறகு பத்மினி எங்க வீட்டுக்கு வந்திடுவா. அவளை பூப்போல நான் பார்த்துப்பேன். யாராலயும் எதுவும் பண்ண முடியாது. என்ன சொல்றீங்க?''

''தம்பி! எங்க வீட்டுக்கு கொஞ்சம் தள்ளி குமரன் குன்றம் இருக்கு. மலைமேல முருகன் கோவில் இருக்கு. ரொம்ப அற்புதமான கோவில் அது. ரொம்ப கூட்டமா இருக்காது. அங்கே வெச்சுக்கலாமா?''

''ஓ.கே. நீங்க பத்மினிய கூட்டிட்டு வந்திடுங்க. நான் என் பேரண்ட்ஸ்ச எல்லாம் கூட்டிட்டு வந்திடுறேன். உங்க திருப்திக்காக திருச்சியில கிராண்டா ரிஸப்ஷன் வைச்சுடலாம்''

''ஒரு நிமிஷம் தம்பி!'' என்றவன் அறைக்குள் நுழைந்து கையில் காலண்டரோடு வந்தான். மறுநாள் தேதியைத் திருப்பிப்பார்த்துவிட்டு சந்தோஷமாய் நிமிர்ந்தான்.

''தம்பி! ஆண்டவன் செயலா நாளைக்கு நல்ல முகூர்த்தநாள். காலையில ஏழரை டூ ஒன்பது வரை முகூர்த்த நேரமாம். அப்பவே கல்யாணத்தை வெச்சிடலாமா?''

''வெரிகுட்! தாராளமா வெச்சிடலாம். நான் அப்பாவுக்கு போன் பண்ணி கல்யாணத்துக்கு தேவையான எல்லாப் பொருளையும் வாங்கிட்டு வரச்சொல்லிடுறேன். நீங்க பத்மினிய மட்டும் கூட்டிட்டு வந்தாபோதும்.

தயாளன் தயங்கினான். ''தம்பி! பத்மினிக்கு அவ அக்கான்னா உசுரு. அவ இல்லாம இவ கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்க மாட்டாளே''

''அண்ணே! அவ அக்கா செய்த வேலைகளை சொல்லிடலாமா?''

''ஐயோ! வேண்டாம் தம்பி. அந்தப்பொண்ணுதாங்காது. வார்த்தைக்கு வார்த்தை என் அக்கா என்னோட அம்மான்னு சொல்லுவா. இந்தச்சண்டாளி பண்ணியகாரியம் தெரிஞ்சதுன்னா மனசு நொறுங்

கிப்போயிடும்பா. அதே காயத்தோட உங்ககூட அதால எப்படியப்பா சந்தோஷமா வாழ முடியும்?''

வசந்தன் மௌனமானான். ''அதோட நான் சொல்லி அதை அவ பாகீரதிகிட்ட கேட்டுட்டா குட்டு வெளிப்பட்ட ஆத்திரத்தில ஏதாவது பண்ணிட்டான்னா? அதுவும் ஆபத்தாகி போயிடுமே.''

''அதுவும் சரிதான். அண்ணே! அப்போ ஒன்னுசெய்யலாம்''

''என்ன?''

''வேலை முடிஞ்சு எப்பவும் போல வீட்டுக்கு போங்க. சாதாரணமாவே பேசுங்க. உங்களுக்கு எதுவும் தெரிஞ்ச மாதிரி காட்டிக்காம சாதாரணமா பேசுங்க. அவங்கமனசுல என்ன இருக்குன்னு கண்டுபிடிங்க. சாதாரண கோபம் பொறாமைன்னா பேசியே சரி பண்ணிடலாம். இல்ல சரிபண்ண முடியாதுன்னு உங்களுக்கு தோணிச்சுன்னா வேற வழியில்லை.

அவங்களுக்குத் தெரியாமத்தான் கல்யாணம் பண்ணனும். ஒரு வேளை அவங்க மனசு மாறின மாதிரி. உங்களுக்குத் தோணினா அவங்களை கோவிலுக்கு கூட்டிட்டு வாங்க அண்ணே! இது மதில் மேல்பூனை சமாச்சாரம். நீங்கதான் பொறுமையா ஹேண்டில் பண்ணனும்.''

''ச.. சரிப்பா''

''எதுவா இருந்தாலும் எனக்கு போன் பண்ணுங்க. என் நம்பர் உங்க போன்ல பதிவாகியிருக்கும். அதை ஸேவ் பண்ணி வெச்சிடுங்க.

''சரிதம்பி''

''நாளைக்கு காலையில கல்யாணம் நடந்தே ஆகணும். மறந்திடாதீங்க''

''நடக்கும் தம்பி. எல்லாம் நல்ல படியா நடக்கும்''

''உங்களைத் தான் நம்பியிருக்கேன். அப்பநான் கிளம்பமட்டுமா?''

''சரிதம்பி! இப்ப எங்கே திருச்சிக்கா போறீங்க?''

''இல்லண்ணே! எப்படியும் காலையில கல்யாணம் இருக்கே. ஏன் வீணா அலையணும்!''

நான் தாம்பரத்தில லாட்ஜ்ல ரூம் எடுத்து தங்கிக்கிறேன். அவசரம்னா போன் பண்ணுங்க''

''சரி தம்பி! அப்புறம் ஒரு விஷயம்''

''சொல்லுங்க''

''தம்பி! நீங்க பெரிய இடத்துப்புள்ள. உங்க கல்யாணத்தை ஊரைக் கூட்டி செய்யணும்னு உங்க அம்மா அப்பா ஆசைப்பட்டுட்டு இருப்பாங்க. இப்படி திடுதிப்புன்னு கோவில்ல வெச்சு கல்யாணம்னா அவங்களுக்கு சந்தேகமோ கோபமோ வராதா?''

''வராது. அது எம்பொறுப்பு''

''எங்கமேல வருத்தப்பட்டாங்கன்னா''

"அண்ணே! அவங்களைப் பொறுத்தவரை நான் கல்யாணம் பண்ணிகிட்டா போதும். மத்தபடி எதுக்கும் வருத்தப்படமாட்டாங்க."

"உங்க உறவுக்காரங்களை நினைச்சு யோசிப்பாங்களே"

"அதுக்குத்தான் ரிஸப்ஷன் வெக்கப்போறோமே. வேண்டுதலுக்காக கோவில்ல கல்யாணம் பண்ணிவெச்சோம்ன்னு எல்லார்கிட்ட சொல்ல வேண்டியதுதான். மத்தவங்களுக்காகவே நாம வாழமுடியாதுண்ணே"

"ம். அதுவும் சரிதான். அப்போ உங்க வீட்ல உள்ளவங்களை நீங்க சமாளிச்சுடுவீங்கள்ல?"

"அது என் பொறுப்பு. நீங்க உங்க வீட்டை சமாளிக்க. முதல்ல உங்க மனைவி, எனக்கும் தெரிஞ்சாகணும் அண்ணே! திரும்பவும் சொல்றேன். அவங்ககிட்ட கோபப்பட்டுக்காரியத்தைக் கெடுத்துடாதீங்க. முதலுக்கே மோசமாகிடும்."

"நான் பார்த்துக்கிறேன்ப்பா. எனக்கு நிறைய பொறுமை உண்டு. சகிப்புத்தன்மையும் உண்டு"

"உங்களைப் பார்க்கும்போதே தெரிகிறது. யூ ஆர் நைஸ்மேன்' என்றவாறு மீண்டும் கைகுலுக்கினான். "அப்ப நான் கிளம்பட்டுமா?"

"சரி தம்பி! உங்க வீட்ல பேசிட்டு எனக்கு போன் பண்ணுங்க. அவங்க சம்மதிச்சாத்தான் என்க்கு முழுமனசோட வேலை ஓடும்"

"கண்டிப்பா பண்றேன். வரட்டுமா" என புறப்பட்டவன் அடுத்த அரைமணி நேரத்தில் போனில் தொடர்பு கொண்டான். குரலில் உற்சாகம் தொனித்தது. "அண்ணே! எங்க வீட்ல எல்லாருக்கும் டபுள் ஓ.கே. இன்னும் கொஞ்ச நேரத்தில புறப்பட்டு வர்றதா சொல்லிட்டாங்க. இனிமே உங்க வேலைதான் பாக்கி"

"அப்படியா! ரொம்ப சந்தோஷம்பா. நானும் பர்மிஷன் போட்டுட்டு வீட்டுக்கு கிளம்புறேன். நைட் போன் பண்றேன்."

"சரிண்ணே! டேக் கேர்" - என்றவாறு போனை வைத்தான் வசந்தன். தயாளனுக்கு வேலை ஓடவில்லை. ஒரு சின்னப்பய. ஒரே போன்ல குடும்பம் மொத்தத்தையும் சம்மதிக்க வைத்து விட்டான். என்னால் இவள் ஒருத்தியை சமாளிக்க முடியாதா? முடியும் முடியணும். மனதில் எழுந்த உறுதியேரடு சூப்பர் வைஸரைத்தேடிப் போனான்.

அவரும் மானேஜரும் எதிரே வர, அவர்களிடம் இதமாய் பதமாய் பேசி, மைத்துனியின் கல்யாணவேலை என இரண்டு நாட்கள் விடுப்பும் எடுத்துக் கொண்டு வீட்டிற்கு கிளம்பினான்.

முக்கால் மணி நேர பயணத்தின் போது வீட்டிற்கு போய் பாகீரதியிடம் எப்படியெல்லாம் பேச வேண்டும் என மனதிற்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டான். வழக்கம் போல் குரோம்பேட்டை ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கி வாசலை அடைந்தவன் வரிசையாய் இருந்த பூக்கார பெண்மணியிடம் சென்று மூன்று முழம் மல்லிகையை வாங்கிக் கொண்டான்.

ஸ்டாண்டில் நிறுத்தியிருந்த தனது இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி பயணித்தான். வீட்டை நெருங்கும் முன்பே பாகீரதி பேசிய பேச்சுக்கள் நினைவில் வந்து கோபத்தை லேசாய் கிளறிவிட்டது. பற்களைக்கடித்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

'இல்லை. இதுகோபப்பட வேண்டிய நேரமல்ல. நிதானமாய் பேசி காரியத்தை சாதிக்க வேண்டும். பத்மினியின் திருமணம் நல்லபடியாய் நடக்க வேண்டும். அதற்கு பொறுமை அவசியம். மனமே ரிலாக்ஸ் பிளீஸ். தன்னைத்தானே தேற்றிக் கொண்டு வீட்டை அடைய வாசலிலேயே தவிப்பாய் நின்றாள் பாகீரதி.

கணவனைக் கண்டதும் ஆவலாய் வெளிக்கதவை திறந்து விட்டாள்.

"என்னங்க! ஏழுமணிக்கே வேலைக்கு போயிட்டீங்களே. ஆபீஸ்ல இருக்கும் போது போன் எதுவும் வந்ததா?" - ஆர்வமும் பதட்டமுமாய் கேட்ட மனைவியைப் பார்க்கும் போது அவனது கட்டுப்பாட்டையும் மீறி கோபம் எழுந்தது.

9

காதுகேளாதது போல் வீட்டிற்குள் நுழைந்து ஆடையை மாற்றிவிட்டு கைகால் அலம்பி விட்டு வரும் போது மீண்டும் கேட்டாள் பாகீரதி.

"ஏங்க! உங்ககிட்ட தானே கேட்கிறேன். போன் எதுவும் வந்ததா?"

"பத்மினி எங்கே"

"ம்பிச்! அவ கோவிலுக்கு போயிருக்கா. நான் கேட்டது உங்க காதுல விழலையா?"

"கோவிலுக்கு எப்போப் போனா?"

"இப்பத்தான் போனா. பக்கத்துல உள்ள அம்மன் கோவில்ல இன்னிக்கு திருவிளக்கு பூஜை. அதுக்குத்தான் போயிருக்கா. வர ஒன்பது மணியாகிடும். போதுமா தகவல்?" - கடுப்பாய் கேட்டாள்.

"போதும். வாசக்கதவை சாத்திட்டு உள்ள வா"

"என்ன? வந்ததும் வராததுமா.. இதென்ன புதுப்பழக்கம்?"

"உங்கிட்ட கொஞ்சம் பேசணும் வா"

"இங்கே இருந்து பேசினா என்ன? காதுல விழாதா?"-சிடுசிடுத்தவாறே ஹாலில் அமர்ந்து கொண்டாள்.

"சரி. இன்னிக்கு காபி எதுவும் கிடையாதா?"

"ம். அதைமட்டும் கேட்கத்தெரியுது. இவ்வளவு நேரம் நான் கேட்டது காதுல விழல"

"என்னகேட்ட?"

"ம். கேட்டாங்க. சுரைக்காய்க்கு உப்பு இருக்கான்னு"

‘‘இல்லையே. இன்னிக்கு புடலங்காய் கூட்டுதானே பண்ணியி ருந்தே. அதில உப்புகூட கொஞ்சம் கூடுதலாத்தான் இருந்தது’’

‘‘ஹும்! இந்த பேச்சுக்கு ஒரு குறைச்சல் இல்லை’’-வெடுக்கென எழுந்து சென்றாள். அடுக்களையில் பாத்திரம் உருளும் ஓசையை வைத்தே அவள் மிகவும் கோபமாக இருக்கிறாள் என்று புரிந்தது. இரண்டே நிமிடத்தில் காபியோடு வந்தாள்.

‘‘இந்தாங்க காபி’’

‘‘தேங்க்யூ. உட்கார் பாகி! உன்கிட்ட பேசணும்’’

‘‘என்ன விசயம். சீக்கிரம் சொல்லுங்க! எனக்கு வேலை இருக்கு’’

‘‘என்ன வேலை?’’

‘‘ஆயிரம் வேலை இருக்கும். அதைப்பத்தி உங்களுக்கென்ன? சொல்ல வேண்டியதைச் சொல்லுங்க.’’ முகம் கடுகடுவென்றிருக்க, பொறுமையாய் அவளைப்பார்த்தான்.

‘‘ஏன் பாகி? நீயும் பத்மினியும் ஒரே வயித்திலதானே பொறந் தீங்க?’’ வெடுக்கென திரும்பினாள். ‘‘என்ன?’’

‘‘இல்ல. எப்படி இவ்ளோ நேர்மாறா இருக்கீங்க? பத்மினிக்கு கோபப்படவே தெரியாது. உனக்கு கோபப்படாம இருக்கவே முடியாதே. அதான் கேட்கிறேன்’’

‘‘இதோ பாருங்க! ஏற்கனவே நான் கடுப்பில இருக்கேன். என் கோபத்தைக் கிளறாதீங்க.’’

‘‘சரி. இப்ப நாம ரெண்டு பேர்தானே இருக்கோம். கோபப்படாம மெதுவாப் பேசு. சொல்லு. உனக்கு என்ன தெரியணும்?’’

‘‘இல்ல.. பாட்டி போன் பண்றேன்னு சொன்னாங்க. அதான் போன் வந்ததான்னு கேட்டேன்’’

‘‘இல்லையே.. போன் வரலையே’’ - சொல்லிவிட்டு காபியை அருந்தியவனை ஆர்வமாய் நெருங்கி அமர்ந்தாள். ‘‘ஏங்க! யாருமே போன் பண்ணலையா?’’

‘‘யாருமேன்னா?’’

‘‘பொண்ணு பார்த்திட்டு போனாங்களே. அந்த மாப்பிள்ளை வீட்ல இருந்து எதுவும் போன் வந்ததா?’’ கண்களில் ஆர்வம் மின் னக்கேட்டவளை உற்றுப்பார்த்தான்.

‘‘வரல்ல’’

‘‘வரலையா? வந்திருக்குமே’’-படபடப்பாய் நகம்கடித்தவளை வியப்பாய் ஏறிட்டான்.

‘‘எப்படி இவ்வளவு உறுதியாச் சொல்ற?’’

‘‘அது.. அது.. வந்து கல்யாண தேதி குறிச்சிட்டு போன் பண்றோம்னு நம்பர் வாங்கிட்டு போனாங்களே. அதை வெச்சுத்தான் கேட்டேன்.’’-தடுமாறியவாறே சமாளித்தாள்.

‘‘பாகி! எனக்கு என்னவோ இந்த சம்பந்தம் சரியாவரும்னு தோணல்ல’’ என்ற கணவனை உற்சாகமாய் பார்த்தாள்.

''என்னங்க சொல்றீங்க?''

''ஆமா பாகீ! அவங்க வசதிக்கு நம்மால எதுவும் செய்ய முடியாது. பாரேன்! பெண்ணை பார்க்கும் போதே பத்துசவரன் நகையோட வந்து நிற்கிறாங்க. எனக்கென்னவோ கொஞ்சம் நெருடலாவே இருக்கு. நீ என்ன நினைக்கிற?''

''ஆமாங்க. எனக்கும் இதுல துளியும் இஷ்டம் இல்லை. திருச்சியில இல்லாத பொண்ணா? இவ்வளவு தூரம் வந்து அதுவும் அவசர அவசரமா நிச்சயம் பண்ணிட்டு போறாங்கன்னா இதுல ஏதோ வில்லங்கம் இருக்குங்க. பேசாம கல்யாணத்தை நிறுத்திடலாமா?''-ஆர்வமாய் கேட்டதும் நிமிர்ந்து அமர்ந்தான்.

''என்ன பாகீ? இவ்வளவு சாதாரணமா கேட்கிற?''

''ஏங்க! நமக்கு பிடிக்கலன்னா நிறுத்திட வேண்டியதுதானே. நமக்கு நம்ம பொண்ணோட வாழ்க்கைதான் முக்கியம்''

''அதுக்குக்காகத்தான் நானும் யோசிக்கிறேன். நல்ல வசதியான வாழ்க்கை நாமதான் மாசக்கடைசியில திண்டாடிட்டு இருக்கோம்.அவளாவது வளமா வாழ்வான்னு நினைச்சேன்.''

''நமக்கு எதுக்குங்க பேராசை. நம்ம தகுதிக்கேத்த மாப்பிள்ளை கிடைச்சா போதும்.பேசாம உங்க கூட வேலை பார்க்கிற எவனையாவது பாருங்க. அதுதான் சரியா வரும்''

''ஏன்பாகீ?''

''என்ன ஏன்? ஏழைக்கேத்த எள்ளுருண்டைன்னு கேள்விப்பட்டதில்லையா. அதுதான் நமக்கு நிரந்தரம்''

''அப்போ இந்த இடம் வேணான்றியா?''

''வேண்டவே வேண்டாம். நமக்கெதுக்கு தகுதிக்கு மீறிய ஆசை''

''பத்மினிக்கு ரொம்ப இஷ்டம் போலிருக்கே. அவ மனசு சங்கடப் படாதா?''

''அவ எதுக்குத்தான் ஆசைப்படமாட்டா? இந்த வயசுல கண்ணுக்கு லட்சணமா எவன் வந்தாலும் பிடிக்கத்தான் செய்யும். நாம தான் தட்டி வெக்கணும்''

''என்ன பேசற நீ? இது அவளா பார்த்த மாப்பிள்ளை இல்லை. நீ தேடித்தேடிக் கொண்டு வந்த மாப்பிள்ளை. மறந்திட்டியா?''

''தப்பு தான். சரியா விசாரிக்காம வரச்சொல்லிட்டேன். இப்ப பிடிக்கல்ல. நீங்க போன் பண்ணிச்சொல்லிடுங்க''

''பத்மினி கேட்டா என்ன சொல்லுவ பாகீ?''

''ஏதாவது சொல்லி சமாளிக்க வேண்டியதுதான். ரெண்டு நாள் கஷ்டப்படுவா. பிறகு தானா சரியாகிடுவா? இதுக்கு முன்னல்லாம் நடந்தப்ப அவ என்ன முடங்கியா கிடந்தா?''

''அடிக்கு மேல அடியா விழுந்திட்டே இருந்தா சுத்தமா முடங்கிடுவா பாகீ''

என்றான் மனைவியை ஆழமாய் பார்த்துக்கொண்டே.

''அதெல்லாம் பார்த்தா முடியுமா? நீங்க முதல்ல மாப்பிள்ளை வீட்டுக்கு போன் பண்ணுங்க. இது நமக்கு ஒத்துவராது''

''இப்படி சட்டுன்னு முடிவெடுக்க முடியாது பாகி. ஏன்னா அவங்க தட்டுமாத்தி நிச்சயம் பண்ணிட்டாங்க. இப்பப்போயி வேண்டாம்னு எப்படிச் சொல்றது?''

''நாம என்ன ஊரைக் கூட்டியா நிச்சயம் பண்ணினோம்? சும்மா சொல்லுங்க. அவங்க கோபப்பட்டா எங்கிட்ட கொடுங்க. நான் நாலு வார்த்தை கேட்கிறேன்.''

''வேண்டாம். நானே பேசிக்கிறேன்'' என்றான் இறுக்கமாய்.

''இப்பவே பண்ணுங்க சீக்கிரம்'' - அவசரப்படுத்தியவளை வெறுப்பாய் நோக்கினான்.

''உன் தங்கையோட கல்யாணத்தை நிறுத்த உனக்கு இத்தனை அவசரமா?''

''எ..என்ன சொல்றீங்க?''

''ஆச்சர்யமா இருக்கு. அதெப்படி மனசு வருது பாகி உனக்கு? அவ கஷ்டப்பட்டு அழுதா உனக்கு மனசு வலிக்காதா?''

''வலிக்காது'' என்றாள் அழுத்தம் திருத்தமாய்.

''பாகீ?''

''இப்ப அவ அழுறதைப் பார்த்தா நாளைக்கு ஏதாவது ஒன்னுன்னா நம்மகிட்ட தானே வந்து நிற்பாள்? அதைச்சொன்னேன். நேத்தில இருந்தே எனக்கு மனசு சரியில்ல. இந்த சம்பந்தம் நமக்கு வேண்டாங்க''

''அப்போ மாப்பிள்ளை கிட்ட சொல்லிடவா?''

''சொல்லிடுங்க. ஆரம்பத்திலேயே தடுத்திட்டா பிரச்சனை இல்ல''

''சரி. நான் சொல்லிடுறேன். நீ அவசரப்பட்டு பத்மினிகிட்ட எதுவும் சொல்லவேண்டாம்.''

''ஏங்க?''

''எப்படியும் மனசு கஷ்டப்படுவா. தானா தெரியும் போது தெரியட்டும். நாம சொல்ல வேண்டாம்.

''சரிங்க! இந்த இடம் போனா போகுது. அவளுக்கேத்த இடமா நான் பார்க்கிறேன். நீங்க தைர்யமா இருங்க''

''சரி பாகீ. எனக்கு பசிக்குது. சாப்பாடு போடுறியா? நான் மாப்பிள்ளைகிட்ட பேசிட்டு வர்றேன்''

''சரிங்க'' உற்சாகமாய் எழுந்து வீட்டினுள் நுழைந்தவளை சில கண நேரம் வெறித்துவிட்டு தன் போனை எடுத்து வசந்தனை தொடர்பு கொண்டான்.

''சொல்லுங்கண்ணே! பேசிப்பார்த்தீங்களா?''

''ம். பேசினேன். பட் நோ யூஸ்.''

''அண்ணே!''

''தம்பி! காலையில ஒரு மணிக்கெல்லாம் நான் பத்மினியோட கோவிலுக்கு வந்திடுறேன். மத்ததெல்லாம் பிறகு பேசிக்கலாம்.''

''சரிண்ணே''

''உங்க வீட்ல எல்லாரும் வந்தாச்சு?''

''வந்திட்டே இருக்காங்க. இப்பத்தான் போன் பண்ணினேன்''

''அவங்க தங்குறதுக்கு''

''இந்த லாட்ஜ்லயே எக்ஸ்ட்ரா மூணுரூம் புக் பண்ணியிருக்கேன்.''

''சரிதம்பி. நான் வெச்சுடுறேன். காலையில, பார்க்கலாம்'' என்றவன் போனைக்கட் பண்ணிவிட்டு, உடனே கும்பகோணத்திற்கு போன் செய்தான். ரிங்போய்க் கொண்டிருக்க சமையலறையை எட்டிப்பார்த்தான்.

அப்பளம் பொரித்துக் கொண்டிருந்தாள் பாகீரதி. ஓசையில்லாமல் எழுந்து வராந்தாவிற்கு வந்து நின்று கொண்டான். எதிர்முனையில் யாரோ போனை எடுத்தார்கள். ''ஹலோ''

''ஹலோ! நான் சென்னையில் இருந்து பேசறேன். அங்கே பர்வதம் பாட்டி இருந்தா கொஞ்சம் கூப்பிடுறீங்களா? கொஞ்சம் அவசரம்''

''இருங்க கூப்பிடுறேன்'' ரீஸீவர் மௌனம் காக்க அவஸ்தையாய் இரண்டு நிமிடம் காத்திருந்தபின் பர்வதத்தின் குரல் கேட்டது.

''ஹலோ! யாரு பத்துவா?''

''பாட்டிம்மா! நான் தயாளன் பேசுறேன்''

''அடடே! பேராண்டி. என்னப்பா திடீர்னு போன் பண்ணியிருக்கு?''

''எல்லாம் நல்ல விஷயம் தான். உங்க உடம்பு எப்படியிருந்தது''

''நான் நல்லா இருக்கேன் ராசா. எனக்கு ஒரு குறையில்லை. எம் பேத்திங்க எப்படி இருக்காங்க? வீட்ல எதுவும் விசேஷமா? பாகீ உண்டாகியிருக்காளா?''

''பாட்டிம்மா! எல்லாம் நேர்ல பேசிக்கலாம். நீங்க உடனே கிளம்பி இங்கே வரமுடியுமா?''

''என்ன ராசா? யாருக்கு என்ன?'' பதறினார் பர்வதம்.

''பாட்டிம்மா. பயப்படாதீங்க. எல்லாம். நல்ல காரியம் தான். பத்மினிக்கு கல்யாணம் முடிவாகிடுச்சு.''

''ஆண்டவா! இப்பவாவது கண்ணைத் திறந்தியே. ரொம்ப சந்தோஷம்ப்பா. மாப்பிள்ளை எந்த ஊரு?''

''இப்ப பேச நேரமில்ல. நீங்க உடனே கிளம்பிவாங்க. தாம்பரத்தில வந்து இறங்கியதும் எனக்கு போன் பண்ணுங்க. நான் ஆட்டோ பிடிச்சிட்டு வர்றேன்''

''எய்யா! நான் எங்கே போயி போன் பண்ணுவேன்?''

''ஓ! ஸாரி பாட்டிம்மா. சரி. நீங்க கிளம்பிவாங்க. நான் எனக்கு தெரிஞ்ச ஆட்டோவுக்கு சொல்லிடுறேன். நீங்க இறங்கியதும்

அவனே கூட்டிட்டு வந்திடுவான்''

''ஆட்டோகாரனுக்கு என்னைத் தெரியுமா?''

''வழக்கமா நம்ம வீட்டுக்கு வர்ற பையன் தான் பாட்டி. உங்களைத் தெரியும். நீங்க உடனே கிளம்புறீங்களா?''

''சரிய்யா! ஆமா ஏன் இவ்வளவு அவசரமா கூப்பிடுற?'' எல்லாம் பேசி முடிச்சாச்சா? நாளைக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரங்க நிச்சயம் பண்ண வர்றாங்களா?''

''இல்லபாட்டி. நாளைக்கே கல்யாணம். உடனே கிளம்புங்க'' என்றவன் பாகீரதியின் வரவை உணர்ந்து சட்டென தொடர்பை துண்டித்தான். காதை விட்டுபோனை எடுக்காமலே பதற்றமாய் பேசினான்.

''ஐயோ! பயப்படாதீங்க. நான் இப்பவே பாகியை அனுப்பி வைக்கிறேன். கடைசி பஸ்ஸை பிடிச்சாவது அனுப்பிடுறேன். தைரியமா இருங்க'' கணவனின் பதற்றமான குரலில் பயந்துபோனாள் பாகீரதி.

''என்னங்க! என்னாச்சு? போன்ல யாரு?''

''பாகீ! பாட்டிம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். ஹாஸ்பிடல்ல சேர்ந்திருக்காங்களாம்''

''ஐயோ! என்னாச்சாம்?''

''ரொம்ப முடியாம இருக்காங்களாம். உன்னைப்பார்க்கணும் சொல்றாங்களாம்''

''வாங்க! உடனே கிளம்புவோம். பத்மினி.. அவளைக் கூட்டிட்டு வர்றேன்''

''பாகீ! முதல்ல நீ மட்டும் போ. போய் பார்த்திட்டு நிலைமை ரொம்ப மோசமா இருந்தா உடனே எனக்கு போன் பண்ணு. நான் பத்மினியை கூட்டிட்டு வர்றேன்''

''ஏங்க? சேர்ந்தே போகலாமே?''

''நாளைக்கு சம்பளநாள் பாகீ! லீவு போட்டா செலவுக்கு என்ன பண்றது? குடும்பத்தோட கிளம்பினா கூடுதலா எவ்வளவு செலவாகும்? அதுக்கு பணம் வேண்டாமா? முதல்ல நீ கிளம்பு. போய் போன் பண்ணு. நாங்க அப்புறமா வர்றேன்''

''நீங்க வேணா இருங்க. நான் பத்மினிய கூட்டிட்டு போறேன்''

''அறிவிருக்கா உனக்கு? இப்ப அவளைக் கூட்டிட்டு போனா பத்மினி பாட்டிய பார்த்த சந்தோஷத்தில கல்யாணம் நிச்சயமாயிருக்குன்னு சொல்லமாட்டாளா? நாமதான் இந்த சம்பந்தம் வேண்டாம்னு முடிவு பண்ணிட்டோமே''

''ஆமா''

''ஏற்கனவே அந்த மாப்பிள்ளை ரொம்ப கோபமாபேசுறான்''

''என்ன? என்ன சொல்றான்?''

''அவனே இதை நிறுத்தணும்னு தான் இருந்தானாம்.நாம அவனை ஏமாத்திட்டோம் என்கிறான். அவங்க கொடுத்த நகையை திருப்பிக் கொடுக்கணுமாம். அவங்க வீட்டு டிரைவரை அனுப்புறாராம்.''

''ஏன்? நாம ஏன் நகைகளைக் கொடுக்கணும்''

''அவனே வேண்டாம்ன்னு சொல்லிட்டோம். பிறகு அவங்க தந்த நகை எதுக்கு? தூக்கிக் கொடுத்திடலாம். டிரைவர் வரும் போது நம்ம வீடு பூட்டியிருந்தா நகையோட நம்ம தலைமறைவாகிட்டோம்ன்னு போலீசுக்கு போயிட்டான்னா?''

''ஐயோ வேண்டாம். வேண்டாம். கொடுத்திடலாம்.''

''அதுக்குத்தான் சொல்றேன்.நீ கிளம்பிப்போ. நான் நாளைக்கு சாலரி வாங்கிட்டு அந்த டிரைவர் வந்தா நகைகளைக் கொடுத்திட்டு சாயந்திரமா கிளம்பி வர்றேன். சும்மா பயப்பட வேண்டியது இல்லன்னா உடனே போன் பண்ணு. நாங்க கிளம்புறோம்''

''ஏங்க! ஒருவேளை நீங்க வேலைக்கு போன பிறகு அவனுங்க வீட்டுக்கு வந்தா பத்மினி தனியா இருப்பாளே''

''அதெல்லாம் நான் பேசிட்டேன். நீ கிளம்பு.லேட்டானா பஸ் கிடைக்காது. ரெண்டு டிரெஸ் எடுத்து வெச்சிட்டு கிளம்பு''

''ஏங்க! பேசாம நாளைக்கு எல்லாருமா சேர்ந்தே போகலாமா?''

''பாகி! பாட்டிம்மா உன்னைத் தேடுறாங்கன்னா என்ன அர்த்தம்?''

''என்ன அர்த்தம்?''

''ஏதாவது ஆகிறதுக்குள்ள அவங்க சேமிப்பையெல்லாம் உங்கிட்ட ஒப்படைக்கத்தான் தேடுறாங்க.''

''என்ன?'' பாகீரதியின் விழிகள் விரிந்தன.

''ஆமாபாகி! இத்தனை வருஷமா உழைச்சு சேர்த்த பொருளெல்லாம் உங்களுக்குத்தானே. அதான் உன்னைத் தேடுறாங்க. சீக்கிரம் கிளம்பு. விடியும் போது நீ அங்கே இருக்கணும்''

''சரிங்க. நான் கிளம்புறேன். என்னை பஸ் ஏத்திவிட்டுட்டு வந்து சாப்பிடுங்க. நான் ரெண்டே நிமிஷத்தில ரெடியாயிடுறேன்'' என சிட்டாய் பறந்து அவள் தயாராக தயாளன் நிம்மதியாய் மூச்சுவிட்டான்.

பாட்டியின் ரெட்டை பட்டை சங்கிலி கல்பதித்த தோடு எல்லாம் நமக்குத்தான் என்ற கனவோடு ரெண்டே நிமிடத்தில் புறப்பட்டவளை தாம்பரம் சென்று பஸ் ஏற்றிவிட்டுத் திரும்பிய போது வாசலில் அமர்ந்திருந்தாள் பத்மினி. அருகே குத்துவிளக்கு, கூடையில் பூஜைப்பொருட்கள்.

''மாமா! வீடு பூட்டியிருக்கு. எங்கே போயிட்டீங்க? அக்கா எங்கே?''

''உள்ளே வா பேசலாம்'' என்றவாறு பூட்டைத்திறந்து உள்ளே நுழைந்தான் தயாளன். மனம் வேகமாய் வார்த்தைகளைத்தேடியது. வசந்தன் சொல்லியதைப் போல பாகீரதியைப்பற்றி எதுவும் சொல்ல வேண்டாம் என்ற முடிவுடன் பத்மினியிடம் திரும்பினான்.

கொண்டு வந்த விளக்கை பூஜையறையில் வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

''அக்கா எங்கே மாமா?''

''அக்கா நம்ம சொந்தக்காரங்களையெல்லாம் நேர்ல போய் அழைக்கபோயிருக்கிறாள்''

''எதுக்கு மாமா?''

''எதுக்கா? அக்கா உங்கிட்ட ஒன்னுமே சொல்லவில்லையா?''

''இல்லையே. என்ன விஷயம் மாமா?''

''பத்மினி! நாளைக்கு குமரன்குன்றம் கோவில்ல வெச்சு உனக்கு கல்யாணம் அதுக்குத்தான் அக்கா எல்லாரையும் கூப்பிட போயிருக்கா''

''என்ன? க...கல்யாணமா?'' சன்னமாய் அதிர்ந்தாள் பத்மினி.

''ஆமாம்மா. நேத்து நிச்சயம் பண்ணிட்டு போன பிறகு மாப்பிள்ளை வீட்ல ஜாதகம் பார்த்தாங்களாம். மாப்பிள்ளையோட ராசிக்கு நாளைக்கே கல்யாணத்தை முடிச்சிடனுமாம். அப்புறம் ஏதோ கிரஹம் மாறுதாம். அதுக்குப்பிறகு மூணுவருஷம் கழிச்சுத்தான் பண்ண முடியுமாம். அதனால நாளைக்கே கல்யாணத்தை வெச்சிடலாமான்னு கேட்டு எனக்கு போன் பண்ணினாங்க.

ஒரு நாளைக்குள்ள பந்தல்கூட போட முடியாதேன்னு சொன்னேன். அதுக்கு அவங்க ஏதாவது ஒரு கோவில்ல வெச்சு எளிமையா கல்யாணம் பண்ணிடலாம். அப்புறம் வரவேற்பை சிறப்பா ஊரையே கூட்டி செய்திடலாம்னு சொல்லிட்டாங்க. எனக்கும் அது சரின்னு பட்டது''

''அக்கா கிட்ட ஒரு வார்த்தை கேட்டீங்களா மாமா?''

''ம். கேட்டேன். அவளுக்கும் சம்மதம். அதான் ரொம்ப நெருங்கினவங்களை மட்டும் நேர்லபோய் கூட்டிட்டு காலையில வந்திடுறேன். நீங்க பத்மினி வந்ததும் சொல்லிடுங்கன்னு கிளம்பிப்போனாள்.''

''மாமா''

''என்னம்மா''

''இது.. இதுல ஒன்னும் தப்பா இருக்காதே'' குரல் லேசாய் நடுங்கிற்று.

''எதும்மா?''

''இல்ல. பார்த்த ரெண்டே நாள்ல கல்யாணம்னா. கொஞ்சம் சந்தேகமா இருக்கு மாமா''

''சேச்சே! அப்படியெல்லாம் நினைக்காதேம்மா. நல்லநேரம் கூடிட்டா எல்லாமே கடகடன்னு நடந்திடும்னு எங்க அம்மா சொல்வாங்க. பெரியவங்க வார்த்தை உண்மைதான் போலிருக்கு. உனக்கு நல்லநேரம் தொடங்கிடுச்சி பத்மினி.''

''எனக்கு என்னவோ கொஞ்சம் பயமாவே இருக்கு மாமா''

''பொதுவா எல்லா கல்யாணப் பொண்ணுக்கும் இந்த பயம் வர்
ந்து சகஜம் தாம்மா. மாப்பிள்ளை இப்போ தாம்பரத்தில தான் ஸ்டே
பண்ணியிருக்கார். போன் பண்ணித்தர்றேன். பேசுறியா?''

''ஐயோ வேண்டாம் மாமா'' அவசரமாய் மறுத்தாள்.

''ஏம்மா''

''அக்கா அப்படியெல்லாம் பேசக்கூடாதுன்னு சொல்லியிருக்கா''

''சரியான அக்கா கோண்டு நீ. இனிமே அக்கா அக்கான்னு அவ
முந்தானையைப் பிடிச்சிட்டு அலையமுடியாது. உன் முந்தானையை
பிடிச்சிட்டு அலைய ஒருத்தர் வந்தாச்சு''

''ச்சீ! என்ன மாமா நீங்க?''

வெட்கமாய் சிணுங்கினாள்.

''ம் இப்பவே கல்யாணக்களை வந்திடுச்சி. இந்தா! வரும் போது
மருதாணிகோன் வாங்கிட்டு வந்தேன். சோறு சாப்பிட்டுட்டு பக்
கத்து வீட்டு தேவிகிட்ட போய் வெச்சுவிடச் சொல்லு'' என்றவாறு
இரண்டு மெகந்தி கேன்களை நீட்டினான்.

''மாமா! உங்களுக்கு எப்படி மாமா இதெல்லாம் வாங்கணும்னு
தோணிச்சு''-சந்தோஷமாய் வாங்கிக் கொண்டாள்.

''எத்தனை கல்யாண வீட்டுக்கு போயிருக்கேன். எல்லா மணப்
பெண் கையிலயும் இந்த கோலம் இருக்குதே''

''மாமா! அது கோலம் இல்ல. மெகந்தி''

''ஏதோ ஒன்னு. நீயும் போட்டுக்கம்மா. அழகா இருக்கும்''

''ரொம்ப தேங்க்ஸ் மாமா. மாமா பாட்டிக்கிட்ட இன்னும் சொல்
லலையே''

''அதெல்லாம் எப்பவோ சொல்லிட்டேன். பாட்டி புறப்பட்டு வந்
திட்டே இருக்காங்க''

''ஹய்யோ! எனக்கு தெரியாம என்னவெல்லாம் நடக்குது இந்த
வீட்ல?''

''எல்லாம் நல்லதாவே நடக்கும்மா. வா சாப்பிட்லாம். சீக்கிரமா
போய் மெகந்தி வெச்சுக்க.. அப்பத்தானே நல்லா சிவக்கும்?''

''மாமா!தேவி கேட்பாளே. எதுக்கு மெஹந்தி வெக்கிறேன்னு''

''கல்யாணும்னு தைரியமா சொல்லும்மா. ஆனா எப்போன்னு செ
ால்ல வேண்டாம்''

''ஏன் மாமா?''

''இல்லம்மா. இது பெரிய இடம். யாராவது பொறாமையில இதை
கலைக்க முயற்சி செய்யலாம். ஏற்கனவே நாம அனுபவப்பட்டிருக்
கோமே. இந்த முறை யார்கிட்டயும் முதல்லயே சொல்ல வேண்
டாம். ரிஸப்ஷனுக்கு சொல்லிக்கலாம். சரியா?''

''சரி மாமா''

''வா சாப்பிடலாம்.'' என்றதும் சாப்பாட்டை எடுத்து அவனுக்கு
பரிமாறினாள்.

''நீயும் சாப்பிடும்மா''

''இல்ல மாமா. கோவில்ல பிரசாதம் சாப்பிட்டதே போதும்
பசியில்ல''

அப்பச்சரி. நான் சாப்பிட்டுக்கிறேன். நீ போய் மெகந்தி இட்
டுக்கோ. போ என அவளை அனுப்பி வைத்தான். ஒரு நிம்மதி பெரு
மூச்சோடு கண்களை மூடி கடவுளை வேண்டிக்கொண்டான். ''ஆண்
டவா! எந்த தடங்கலும் இல்லாமல் இந்தத்திருமணம் நல்லபடியாய்
நடக்க வேண்டும்.'' அதே நேரம் கண்கள் நிறைய கனவோடு கும்ப
கோணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தாள் பாகிரதி- கணவன்
செய்த காரியங்கள் எதுவும் அறியாமல்

10

கோவிலில் கூட்டம் நிரம்பி வழிந்தது. வெள்ளிக்
கிழமையும் சுபமுகூர்த்த நாளும் ஒன்றாய் அமைந்த
தில் பக்தர்களின் கூட்டம் அலைமோதியது. ஏற்கனவே
நான்கைந்து மணமக்கள் கோவிலில் திருமண கோலத்
தில் காத்திருக்க, மேளதாளங்களின் ஓசை காதைப்
பிளந்தது.

புரோகிதர்களின் மந்திர உச்சாடனங்களும் அதற்கு இணையாய்
ஒலிக்க, பட்டுப்புடவை சரசரக்க நின்றிருந்த உமா அருகே நின்ற
தாயிடம் சிடுசிடுத்தாள்.

''இந்த அண்ணனுக்கு ஏம்மா இந்த வேலை? கல்யாணம் பண்
ணிக்க வேற இடமே கிடைக்கலையா? கசகசன்னு ஒரே கூட்டம்
ச்சே''

''உமா! கோவில்ல வெச்சு இப்படியெல்லாம் பேசக்கூடாது'' மக
ளைக் கண்டித்தாள் அமராவதி.

''பின்னே என்னம்மா? சென்னையில எத்தனை மஹால் இருக்கு?
அதையெல்லாம் விட்டுட்டு இப்படி கோவில் வெச்சு ஏன் பண்
ணனும்? இலவச கல்யாணம் மாதிரி. நாம என்ன ஒன்னும் இல்லா
தவங்களா?''

கையில் அடர்த்தியான மல்லிகைப்பூ மாலையோடு வந்த அமுதா
தன் நாத்தனாரின் முகச்சுளிப்பைப் பார்த்து புன்னகைத்தாள்.

''அப்படிச் சொல்லாதே உமா. எவ்வளவோ பெரிய கோடீஸ்வரன்
கூட 'வேண்டுதல்ன்னு கோவில்ல வெச்சு அவங்க பிள்ளைகளோட
கல்யாணத்தை முடிக்கிறதில்லையா?''

''உங்க மச்சினனுக்கு அப்படியென்ன வேண்டுதல்?''

''இதோ வர்றார் உன் அண்ணன். நீயே கேளேன்'' - என கை நீ
ட்ட, அனைவரும் திரும்பிப் பார்த்து பூரித்துபோயினர். பட்டுவேட்டி
சட்டையில் கழுத்தில் மாலையோடு கம்பீரமாய் வந்து கொண்டிருந்
தான் வசந்தன். அவனது கையைப்பற்றி அழைத்து வந்தான் ஆனந்
தன். கூடவே சில நண்பர்கள்.

Optimized using trial version www.balesio.com

ராஜசேகரும், அமராவதியும் கண்கள் கசிய மகனைத் திருமணக் கோலத்தில் கண்டுகளித்தனர். இந்தக்கோலத்தில் மீண்டும் பார்க்க மாட்டோமா என்று எத்தனை ஆண்டுகளாய் ஏங்கிக் கொண்டிருந் தோம். உன் அண்ணன் இதுவரை சம்மதிச்சே பெரிய விஷயம் உமா. அதனால தான் அவன் விருப்பம்போல விட்டுட்டோம்'' என்றாள் அமராவதி.

''நல்லா விட்டீங்க? உங்க மருமகனுக்கு இதில கொஞ்சமும் விருப்பமில்ல''

''உமா!தெய்வ சந்நிதியில திருமணம் நடக்கிறது பெரிய பாக்கியம். அந்த தெய்வமே முன்னே நின்னு திருமணத்தை ஆசீர்வதிக்கிறதா செ ால்வாங்க. இது எவ்வளவு பெரிய புண்ணியம்?''

''அண்ணி! நான் கல்யாணம் நடக்கிற இடத்தைச் சொல்லல. பெண் எடுத்த இடத்தைச் சொன்னேன்.''

''ஏன்? பெண்ணிற்கு என்ன குறைச்சல்? மகாலஷ்மியாட்டம் இருப்பா'' ராஜசேகர் பெருமையாய்ச் சொல்ல, தந்தையை முறைத் தாள் உமா.

''அப்பா! பொண்ணு அழகா இருந்தா மட்டும் போதுமா? நம்ம வச திக்கு இல்லாட்டியும் கொஞ்சமாவது ரிச்சா இருக்க வேண்டாமா?''

''பணம் வரும் போகும்மா. ஆனா நல்ல பண்புள்ள பொண்ணு சுலபமா எல்லாருக்கும் அமைஞ்சுடாது. எம்புள்ளைய கட்டிகிட்டா எம்மருமகளும் கோடீஸ்வரி தானே''

''அப்படியென்ன பெரியரம்பையா அவ? ஆளாளுக்கு தலையில தூக்கி வெச்சு கொண்டாடுறீங்க?''

''உமா! நீ இன்னும் பெண்ணை பார்க்கலையே. பார்த்தா இப்படி யெல்லாம் பேசமாட்டே''

''பார்க்கலாம். அந்த ரம்பைக்காகத்தானே அரைமணிநேரமா வெயிட் பண்றோம். வரட்டும் பார்க்கலாம்.'' அலட்சியமாய் சொல் லிக் கொண்டிருந்த போதே தயாளன் வேகமாய் அவர்களை நெருங் கினான்.

''அம்மா! பொண்ணை அழைச்சிட்டு வந்திட்டேன். நீங்க பெரிய வங்க வந்து மணமேடைக்கு கூட்டிட்டு வர்றீங்களா? பாட்டி தயங்கு றாங்க''

''இதோ வர்றோம்ப்பா. அதுக்காகத்தானே வெயிட் பண்றோம். உமா அமுதா வாங்க என்கூட. ஆனந்தா! நீ தம்பி கூட நில்லுப்பா''

''சரிம்மா''

''என்னங்க! நீங்களும் வாங்க'' அனைவரையும் அழைத்துக் கொண்டு அமராவதி முன்னே செல்ல, படிக்கட்டின் ஓரமாய் தூணோடு ஒடுங்கி நின்ற மணப்பெண்ணை கண்டதும் உமாவின் முகம் புன்னகைத்தது. அருகே வந்த அமுதாவிடம் கிசுகிசுத்தாள். ''அண்ணி! அதோ அந்தப்பொண்ணு சூப்பரா இல்ல? இதே மாதிரி

அண்ணனுக்கு கிடைச்சிருந்தாக்கூட நீங்கள்லாம் கொண்டாடுறதுல ஒரு நியாயம் இருக்கு''

''உமா! கைகொடு. சொல்லாமலேயே உன் அண்ணியை கண்டுபி டிச்சிட்டியே வெரிகுட்''-கைகளில் தங்கவளையல்கள் கலகலக்க நாத் தனாரின் கையைப் பற்றிக் குலுக்கினாள் அமுதா. உமா வாயடைத் துப்போனாள்.

''என்ன? இதுவா பொண்ணு?''

''ஆமா! அதுதான் உன் சின்ன அண்ணி''

''வாவ். ரியலி சூப்பர் அண்ணி. அப்படியே பால்கோவா மாதிரி இருக்கு''

''ஏய்! இந்த பால்கோவாவை மறக்கவே மாட்டியா? முகூர்த்தத் திற்கு நேரமாச்சு. வாங்க பெண்ணை அழைச்சிட்டு போகலாம்'' என் றவாறே பத்மினியை நெருங்க. அவள் படபடப்பாய் சுற்றிலும் தன் தமக்கையைத் தேடி கொண்டிருந்தாள்.

''பாட்டி! அக்கா கோவில்ல இருக்கிறதா மாமா சொன்னாரே. அக் காவைக்காணோமே'' பதற்றமாய்க் கேட்ட பேத்தியைப் பார்க்கை யில் மனம் கசிந்தது பர்வதத்திற்கு. இந்தக்குழந்தைக்கு தீங்கிழைக்க அந்தப்பெண்ணிற்கு எப்படி மனம் வந்தது! தயாளன் சொன்னவை எல்லாம் தொண்டைக்குள் சிக்கிய முள்ளாய் குத்திக் கொண்டிருந் தது.

''பத்மினி! வாம்மா. முகூர்த்தத்துக்கு நேரமாச்சு''என அமராவதி புன்னகையோடு அழைக்க, படபடப்பாய் அவர்களுடன் நடந்தாள். கண்கள் பாகி, தலை சுற்றிலும் தேடிக்கொண்டே இருந்தது.''

''பெரியம்மா! நீங்கதான் இவங்க பாட்டியா?''

''ஆமாம்மா''

''நீங்க ஏன் ஒதுங்கி நிற்கிறீங்க. கூட வாங்க உங்கபேத்தி கல்யா ணத்தை பக்கத்தில நின்னு பார்க்க வேண்டாமா?''

''பார்க்கணும் தான். ஆனா.. நான் எப்படி?''

''அட! எந்த காலத்தில இருக்கீங்க? வாங்க. அட வாங்கம்மா''-என் றவாறே பர்வதத்தையும் அழைத்துச் செல்ல, உமா தாயின் காதில் கிசு கிசுத்தாள்.

''அம்மா! பெண்ணோட ரிலேஷன் ரெண்டே பேர்தானா?''

''இல்லடி! மத்தவங்களையெல்லாம் ரிஸப்ஷனுக்கு கூப்பிடு வாங்க போலிருக்கு''

''எனக்கென்னவோ இது திருட்டுக்கல்யாணம் மாதிரிதோணுது''

''வாயைமூடுடி. எப்பவும் இந்த மாதிரியே பேசினா வாய்மேலயே போடுவேன். போ. உன் புருஷன்கூடப்போய் நில்லு'' என அன்னை விரட்டியதும் முகத்தை திருப்பிக் கொண்டு போனாள் உமா. ராஜசே கர் மனைவியைக் கடிந்தார்.

''இப்ப ஏன் அவமேல கோவிச்சுக்கிற?''

"பின்ன என்னங்க? நம்ம வீட்டுக்கு வரப்போற பொண்ணை நாமளே மட்டமா பேசலாமா? இது நம்ம மருமக. நம்ம வீட்டுப் பொண்ணு" அமராவதியின் பேச்சு காதில் விழ, பார்வதத்தின் உச்சி குளிர்ந்தது.

"நல்ல இடத்தில் தான் வாழப்போகிறாய் பத்து. உம்மனசுக்கு எல்லாமே நல்லதாவே நடக்கும். நீ அமோகமாய் வாழ்வாய்"

"பாட்டி! அக்கா தெரிகிறாளான்னு பாருங்களேன்"

"நீ மணவறைக்குப் போ. நான் போய் பாகீய அழைச்சிட்டு வர்றேன்" என பர்வதம் நகர்ந்து விட, கூட்டத்தை விலக்கிக் கொண்டு, மணவறையை நெருங்கி மணமகனின் அருகே அமரவைத்தனர். புரோகிதர் மந்திரங்களைச் சொல்லியவாறே பெண்ணின் கழுத்தில் மாலையைப் போடச் சொன்னார்.

மனம் நிறைந்த புன்னகையுடன் வசந்தன் மாலையை அணிவிக்க, குப்பென்ற நறுமணம் நாசியைத் தீண்டியது. இதுவரை நாலாபக்கமும் சுழன்று கொண்டிருந்த பார்வையை தழைத்துக் கொண்டு தன் முன் எரிந்து கொண்டிருந்த ஹோமப்புகையை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அக்னியின் ஜுவாலையில் பத்மினியின் முகம் தங்கமாய் ஜொலிக்க, அதை ரசனையோடு ஓரக்கண்ணால் பார்த்து ரசித்தான் வசந்தன். ஆனால் அந்த முகத்தில் மணப்பெண்ணிற்கே உரிய நாணமோ பூரிப்போ தென்படாமல் இருக்க லேசாய் புருவம் சுருக்கினான்.

சட்டென அவளது முகமாற்றத்திற்கான காரணம் நினைவு வர முகம் மீண்டும் இயல்பாய் புன்னகைக்க அவளை நெருங்கி அமர்ந்தான்.

அதுவரை பாகீரதியைப் பற்றியே உழன்று கொண்டிருந்த பத்மினி. தன்மீது பட்ட, மணமகனின் கரத்தால் நிகழ்காலத்திற்கு வந்தாள். தன்னை உரசிக்கொண்டிருந்த அவனது தோளும் கைகளும் புதுவிதமான உணர்வைத்தூண்ட குப்பென முகம் சிவந்தாள்.

முகூர்த்த நேரம் நெருங்கிவிட, புரோகிதர் தாலியை எடுத்து வசந்தனின் கையில் கொடுத்தவாறே, "கெட்டிமேளம் கெட்டிமேளம்" என குரல் கொடுக்க, மேளதாளம் உச்சஸ்தாயில் முழங்க, பத்மினி கழுத்தில் மங்கலநாண் பூட்டினான் வசந்தன்.

அனைவரும் பூக்களை வாரித்தூவ அட்சதை மழை பொழிய, உற்சாகக்கூக்குரல் இட, அந்த நொடியில் பாகீரதியை சுத்தமாய் மறந்து போனாள் பத்மினி. பின்னால் நின்ற அமுதாவும், உமாவும் தாலியை சரி செய்து கழுத்தில் போட, அதில் குங்குமம் இட்டான் வசந்தன்.

நெற்றியில் அவனது கரம் திலகமிட உலகையே மறந்தாள். கணவனின் கைப்பற்றி அக்னியை வலம் வந்து பெற்றவர்களின் காலில் விழுந்து ஆசிபெற்று, ஓரமாய் நின்ற பாட்டியின் காலில் விழுந்து, கடைசியாய் தயாளனை நெருங்கிய போது மீண்டும் துணுக்குற்றாள்

பத்மினி.

"என்ன மாமா தனியா நிற்கிறீங்க? அக்கா எங்கே?"

"இவ்வளவு நேரம் இங்க தாம்மா இருந்தாள். இப்பத்தான் வீட்டுக்கு அனுப்பினேன்"

"ஏன் மாமா?"

"சடங்கெல்லாம் முடிஞ்சு நேரா நம்ம வீட்டுக்குத்தான் போகணும். ஆரத்தி கரைச்சு ரெடியா வைக்கணும்னு போயிருக்கா"

"என்ன மாமா நீங்க? நான் ஒருமுறைகூட அக்காவைப் பார்க்கல்ல. இப்ப ஆசீர்வாதம் வாங்கலாம்னு வந்தா அதுக்குள்ள போயிட்டாளே"

"அதுக்கென்னம்மா! வீட்ல போய் ஆசீர்வாதம் வாங்கிக்கலாம். கோவில்ல பூஜைக்கு சொல்லியிருக்கு. வாங்க போலாம். எல்லாம் வாங்க"

"பூஜைக்கு இன்னும் நேரமிருக்கு. அதுக்குள்ள கொஞ்சம் போட்டோஸ் எடுத்துக்கலாம்."

"சரி. எடுங்க" என்றதும் உமாதன் குழந்தை கணவனோடு வந்து அண்ணனுக்கும், அண்ணிக்கும் மோதிரம் அணிவித்தாள். அமராவதி தன் கணவனோடு வந்து மருமகளுக்கு பத்து சவரனில் நீளமான செயினை அணிவித்தாள். ஓவல் நிற டாலரில் வசந்தின் புகைப்படம் சிரித்தது.

ஆனந்தனும், அமுதாவும் வந்து இருவருக்கும் கைச்செயினை மாட்டிவிட்டனர்.

பர்வதம் நெருங்கிவந்து தன் இடுப்பில் செருகியிருந்த சுருக்கப்பையைத்திறந்து ஒரு சிறிய பொட்டலத்தை பிரித்தாள். இரட்டை வடச்சங்கிலியையும் வெள்ளைக்கற்கள் பதித்ததோடும் இருந்தது.

"அம்மாடி! இது உன் அம்மாவோட நகை. உன் கல்யாணத்திற்காக பாதுகாத்து வெச்சிருந்தேன். வாங்கிக்கம்மா" என நீட்டியதை கண்களில் நீர்மின்ன, இருகரங்களால் வாங்கிக் கொண்டாள் பத்மினி.

"இது தான் என் தாய் வீட்டு சீதனமா?" பார்க்கையில் நெஞ்சை அடைத்தது. கண்கள் நிறைந்தது.

கோவிலில் முருகனுக்கு கற்பூர ஆராதனை நடக்க, இருவரும் கண்களை மூடி மனமுருகி வேண்டிக் கொண்டனர். பத்மினி கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டாள்.

"முருகா! எம்புருஷன் தெய்வம். அந்தத் தெய்வத்தோடு கடைசி
வரை நான் மன நிறைவோட வாழணும்" என வேண்டிக்கொண்டு
விபூதி குங்குமம் வாங்கிக் கொண்டு வெளியே வந்தனர்.
அனைவருக்கும் பசிக்கத் துவங்க." எல்லாரும் வண்டியில ஏறுங்க.
நேரா ஸ்டார் ஹோட்டலுக்கு போகலாம்." என்றான் ஆனந்தன்.
தயாளன் ராஜசேகரை நெருங்கினான். "ஸார்! பொண்ணையும்
மாப்பிள்ளையையும் வீட்டுக்கு அழைச்சிட்டு போகட்டுமா?"

‘‘போலாம் தம்பி. சாப்பிட்டுட்டு போலாமே’’

‘‘இல்ல ஸார். பத்மினியோட அம்மா போட்டோ எங்க வீட்ல இருக்கு. இவங்க ரெண்டு பேரும் மாலையோட வந்து ஆசிர்வாதம் வாங்கிக்கட்டுமே. சாப்பிடும்போது மாலையக்கழட்டணுமே? கழற்றின மாலைய திரும்பவும் போடமாட்டாங்க.’’

‘‘அப்படியா? அப்போ வீட்டுக்கு போயிட்டு ஹோட்டலுக்குப் போலாமா?’’

வசந்தன் தந்தையிடம் திரும்பினான்.

‘‘அப்பா! நீங்க எல்லாரையும் அழைச்சிட்டு ஹோட்டலுக்கு போங்க நாங்க இவங்க கூட போயிட்டு நேரே சாப்பிட வந்திடுறோம். ஒரு பத்து நிமிஷ வேலைதான்’’

‘‘சரிப்பா! அப்ப கிளம்புங்க.’’

‘‘வசந்த்! நான் வேணம்னா கூட வரட்டுமா?’’

‘‘இல்ல அண்ணி. குழந்தைக்கு பசிக்கும். நீங்க போய் சாப்பிட வையுங்க. நாங்க போயிட்டு வந்திடுறோம். அண்ணா! போலாமா?’’

‘‘ம். வாங்க தம்பி’’ என தயாளன் முன்னே நடக்க, பர்வதம் மணமக்களோடு இணைந்து வந்தாள். பூக்களால் அலங்கரிக்கப்பட்ட காரை நெருங்கித்திறந்தான் வசந்தன். ‘‘வாங்கண்ணா! எல்லாரும் ஒரே கார்ல போயிடலாம்’’

‘‘இல்ல தம்பி! நீங்க கார்ல வாங்க. ஆட்டோவெயிட்டிங்ல நிக்குது. நானும் பாட்டியும் ஆட்டோவில போறோம். நீங்க ஆட்டோவை பாலோ பண்ணுங்க.

முன்னே ஆட்டோ நிதானமாய்ச் செல்ல, கார் பின் தொடந்தது. கழுத்தில் தொங்கிய தாலியும் மாலையும் கனக்க, பூரிப்போடு அமர்ந்திருந்த மனைவியின் தோள் மீது கைவைத்து தன்னோடு சேர்த்துக் கொண்டான் வசந்தன்.

‘‘ஐயோ! டிரைவர்’’ என அவள் பதறிவிலக, இன்னும் நெருக்கமாய்ச் சேர்த்துக் கொண்டான்.

வெட்கமாய் தலைகுனிந்தவளது முகத்தை நிமிர்த்தினான்’’ ‘‘இன்னும் என்னால நம்ப முடியல்ல.’’

‘‘எதை?’’

‘‘நமக்கு கல்யாணமானது’’

‘‘ஏன்?’’

‘‘ஏதோ கனவு உலகத்துல பறக்கிற மாதிரி இருக்கு. நீ தேவதை மாதிரி தெரியுற’’

‘‘காதோரமாய் அவன் கிசுகிசுக்க, பத்மினி உடல் லேசாய் அதிர்ந்து நடுங்கியது.

‘‘என்ன பயமா இருக்கா?’’ என்றவாறே அவன் தோளோடு அணைத்துக் கொள்ள, கணவனின் அண்மையும் ஸ்பரிஸமும் பத்

மினியை மயக்கின. இவன் தன் கணவன் தனக்குச் சொந்தமானவன் என்ற உரிமை எழுந்தது.

மனதிலிருந்த தயக்கமும் பயமும் மெல்ல விலகிவிட, கணவனின் தோளில் லேசாய் சரிந்தாள. இதைவிட பாதுகாப்பான நிம்மதியான இடம் வேறு எதுவுமேயில்லை என மனம் அடித்துக் கூற, இதமாய்ச் சாய்ந்து கண்களை மூடினாள். மனம் முழுக்க இன்ப அலை பரவியது.

தனது மொத்த சந்தோஷத்தையும் கனவுகளையும் இன்னும் பத்தே நிமிடத்தில் தன் அக்கா குழிதோண்டி புதைக்கப்போகிறாள் என்பதை துளியும் அறியாதவளாய் கணவனின் கைச்சிறையில் முழுமனதோடு அடங்கிக்கொள்ள, கார் அவர்களது வீட்டை நெருங்கியது.

பூட்டிய வீட்டின் வாசலில் கலைந்த தலையோடு அமர்ந்திருந்தாள் பாகீரதி

11

ஆட்டோவை விட்டு இறங்கிய தயாளனின் முகம் பீதியில் வெளுத்தது. வாசலில் அமர்ந்திருந்தவளைக் கண்டதும் வெலவெலத்துப்போனான் பின்னால் இறங்கிய பர்வதமும் உறைந்து போய் நிற்க, பாகீரதி எழுந்து வந்தாள்.

‘‘என்னங்க! வீட்டைப் பூட்டிட்டு எங்கே போயிட்டீங்க’’ நான் எவ்வளவு நேரமா வாசல்லயே..’’ எனத் தொடங்கியவளின் பார்வை கணவனின் பின்னே நின்றிருந்த பர்வதத்தைக் கண்டதும் நிலைத்தது.

காரில் வந்து இறங்கி கழுத்தில் மாலையோடு வந்தவளைக் கண்டதும் காலடியில் பூமி நழுவியது. இடியை நேரிடையாய் தலையில் வாங்கியதைப் போல் உறைந்து நின்றவளை கைபற்றி அழைத்து வந்து அவசரமாய் வீட்டைத் திறந்தான் தயாளன்.

புதுமணத் தம்பதிகளிடம் திரும்பி. ‘‘ஸாரி! சாவியக் கொடுத்தனுப்ப மறந்திட்டேன். இப்ப ஆரத்தி ரெடியாகும் வசந்த்! ஒரு= பைவ் மினிட்ஸ் கார்ல உட்காருங்களேன். பிளீஸ் தப்பா எடுத்துக்காதீங்க.’’ என்றான்.

‘‘பரவாயில்லண்ணா! நாங்க வெயிட் பண்றோம்’’ என அவர்கள் காரில் ஏறிக் கொள்ள, மனைவியை இழுத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான். பர்வதமும் உடல் உதற, வீட்டினுள் நுழைந்தாள்.

‘‘இதோ பார். பாகீ! நான் எல்லாம் பொறுமையா சொல்றேன். முதல்ல ஆரத்தி ரெடிபண்ணு’’ கணவனின் குரலில் சிலையாய் நின்றவள் உயிர் பெற்றாள். ‘‘என்ன நடக்குது இங்கே? உங்ககிட்ட தான் கேட்கிறேன்’’ கணவனின் சட்டையைப் பிடித்துக் கேட்டாள்.

‘‘கல்யாணம் பண்ணிக்கப்போகிற ரெண்டு பேரும் சம்மதிச்சாங்க. அதனால நான்தான் கல்யாணம் பண்ணி வெச்சேன்.’’

''ஓஹோ! எல்லாம் உங்க ஏற்பாடா? அதான் கிரிமினல் வேலை செய்து என்னை வெளியே அனுப்பினீங்களா?''

''என்ன? கிரிமினல் வேலையா? யார் செய்தது கிரிமினல் வேலை. நீயா? நானா? கண்களை உருட்டிக் கேட்டதும் மிரண்டு பின்வாங்கினான்.

''எ... என்ன உளர்றீங்க?''

''வாயை மூடுடி. நீ செய்த எல்லா காரியமும் எனக்கு தெரிஞ்சுப் போச்சு. தெரிஞ்சும் உன்னை சும்மா விட்டிருக்கேன்னா அதுக்குக் காரணம் பத்மினி அவகல்யாணம் நல்லபடியா முடியணும்னுதான் பேசாம இருந்தேன். எனக்குத் தெரிஞ்ச விஷயம் எல்லாருக்கும் தெரிய வேண்டாம்னு நீ நினைச்சா கம்முன்னு போய் ஆரத்திகரைச்சி எடுத்திட்டுவா.

எதுவா இருந்தாலும் அவங்க போன பிறகு பேசிக்கலாம். ம் போ'' கணவனின் கோபம் அவள் இதுவரை கண்டறியாதது. எனவே விக்கித்துப்போய் பதிலின்றி சமையலறைக்குள் நுழைந்தாள்.

தாம்பாளத் தட்டை எடுத்து மஞ்சள் தூளை கரைத்து இயந்திரதனமாய் வெளியே வந்தாள். முகம் பேயறைந்தது போல் இருக்க, வெற்றிலை மீது கற்பூரம் வைத்து அதை ஏற்றினாள் பார்வதம். ''போம்மா! போய் ஆரத்தி எடுத்து அவங்களை உள்ளே அழைச்சிட்டுவா.'' காது கேளாதவள் போல் பதிலின்றி அதே வெறித்த பார்வையோடு வெளியே வந்தாள். அவளுக்கு முன்பாய் காரை நெருங்கி, பெண்ணையும் மாப்பிள்ளையையும் வாசலுக்கு அழைத்து வந்தான் தயாளன். முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் ஆரத்தி சுற்றிய போதும் பாகீரதியின் கண்கள் தங்கையை முழுமையாய் அளவெடுத்தது. கழுத்தில் கனமான தங்கத் தாலியோடு புதிய நகைகளும் மின்னியது. காதிலும் கையிலும் அனைத்தும் புத்தம் புதிய நகைகள்.

நீலமும், பசுமையும் கலந்தாற்போல் கெட்டியான ஜரிகையுடன் கூடிய பட்டுப்புடவை உடல் முழுக்க கற்களோடு மின்னியது. நெற்றிச்சுட்டி ஒட்டியாணம் ஜடை அலங்காரம் கைகளில் மெஹந்தி சிகை அலங்காரம் என வெகு கவனமாய் அலங்கரித்து பேரழகாய் மாறியிருந்தாள் பத்மினி.

இவை எல்லாவற்றையும் விட முகத்தில் தெரிந்த அந்த பூரிப்பு நெபருப்பை மூட்டியது. பட்டு வேஷ்டி சட்டையில் ராஜகம்பீரமாய் நின்றவனின் தோளோடு சேர்ந்து நின்ற நெருக்கம், அந்த பூரிப்பு, புன்னகை வெட்கம் அனைத்தும் நெருப்பை ஊதி எரியவிட்டது.

''என் வார்த்தையை மீறி எனக்குத் தெரியாமல் என் தங்கையை மணந்து கொண்டாயா? எல்லாருமாய்ச் சேர்ந்து என்னை ஏமாற்றினீர்களா? தாலி மட்டும் தான் உன்னால் கட்ட முடியும். அவளுடன் சேர்ந்து உல்லாச வாழ்க்கை வாழ முடியாது. வாழவும் விட மாட்டேன்.

இந்த பாகீரதி யார் என்று காட்டுகிறேன். உங்கள் எல்லோரையும் கதறடிக்கிறேன். காலம் முழுவதும் நீங்கள் தனியாகத்தான் வாழ வேண்டும். என்னை ஏமாற்றி நீ செய்த திருட்டுத் தனத்திற்கு இது தான் தண்டனை.

''என்ன அண்ணி? வழக்கமா மூணு சுற்றுதானே சுற்றுவார்கள். நீங்க என்ன கணக்கில்லாமல் சுற்றிக் கொண்டே இருக்கிறீர்கள்''? கேலியாய்க் கேட்டான் வசந்தன். வெறுப்பை மறைத்து பெரிதாய் புன்னகைத்தாள்.

பூஜையறையில் இருந்த பெற்றவர்களின் புகைப்படத்தின் முன்விழுந்து வணங்கினர். முகம் கறுக்க, அவர்களைப் பார்த்தவாறு நின்றாள்.

''உட்காருங்க. நான் போய் குடிக்க ஏதாவது வாங்கிட்டு வர்றேன்.''

''வேண்டாண்ணா. லஞ்ச டைம் ஆச்சே. எல்லாரும் ஹோட்டல்ல வெயிட் பண்ணிட்டு இருப்பாங்க. கிளம்புறோம்.''

''சரி தம்பி! பத்மினிய பத்திரமா பார்த்துக்கங்க. சின்னப்பொண்ணு. விபரம் பத்தாது. நீங்கதான் பார்த்துக்கணும்.''

''அது என் பொறுப்பு. அண்ணே! நீங்க கவலைப்படாதீங்க''

''என்னிக்கு ரிஸப்ஷன் வெச்சிருக்கீங்க.?''

''அநேகமா நெக்ஸ்ட் ஸன்டேல இருக்கும். நான் போன் பண்றேன். இன்னிக்கு நீங்களும் எங்ககூட வர்றீங்கல்ல?''

''இல்ல தம்பி! இங்கே நிறைய வேலை இருக்கு. ரிஸப்ஷனுக்கு வர்றோம்.''

''சரி! அப்பநாங்க கிளம்பட்டுமா?''

''என்னங்க! இன்னிக்கே நாம ஊருக்குப் போறோமா?'' தயக்கமாய் கணவனை ஏறிட்டாள் பத்மினி. கண்கள் கலங்கின.

''ஆமாம்மா! நம்ம வீட்டுக்கு போகணுமில்ல?''

தயாளன் பார்வதத்திடம் கண்ணைக் காட்ட, பார்வதம் பேத்தியை நெருங்கி தன்புறமாய் அணைத்துக்கொண்டாள்.

''ராஜாத்தி! புருஷன் வீட்டுக்குப் போகும்போது கண்கள் கலங்க கூடாதும்மா''

''பாட்டி! அக்கா இல்லாம நான் ஒருநாள்கூட இருந்ததில்லையே. அவகூட பேசாம அவளைப் பார்க்காம என்னால இருக்க முடியாதே''

''பத்து! இந்த உறவுகள் எல்லாம் நிரந்தரமானது இல்லம்மா. புருஷன் உறவு தான் கடைசிவரைக்கும் நிரந்தரம். முதல்ல அதைப் புரிஞ்சுக்கணும் நீ''

''அதுக்காக கூடவே பொறந்து வளர்ந்தவளை மறந்திடணுமா?''

''நான் அப்படிச் சொல்லலடா கண்ணு. நினைச்சநேரம் வந்திட்டு ரெண்டு நாள் இருந்துட்டு போகலாம். ஆனா புகுந்தவீடுதான் நமக்கு நிரந்தரமான இடம். இனிமே அதுதான் உன்வீடு. சரியா? உன் வீட்டுக்கு முதன் முறையா போகும்போது மனம் நிறைஞ்ச சந்தோஷத்தோட போகணும்.

அப்பத்தான் அந்த சந்தோஷம் வாழ்க்கை முழுசும் நிலைச்சிருக்கும். முதல்ல கண்ணீரைத்துடை. சிரிச்சமுகமா மாப்பிள்ளை கூடக் கிளம்பு. மாப்பிள்ளை பசியோட இருக்கார் பார்''

''பத்மினி டயமாகுதும்மா. நமக்காக எல்லாரும் வெயிட் பண்ணு வாங்க. போலாமா?''

''ஒரே நிமிஷங்க. என்னோட திங்கஸ் எல்லாம் எடுத்திட்டு வர்றேன்!''

என்றவாறு தன் அறைக்குள் நுழைய, அவளுக்கு உதவி செய்வதைப் போல் பாகீரதியும் சென்றார்.

சட்டென சுதாரித்த தயாளன், வசந்தனை அமரவைத்து விட்டு அவர்கள் இருந்த அறைக்குள் நுழைந்தான்.

''என்ன? அக்காவும் தங்கையும் பேசி நேரத்தை கடத்தாதீங்க. பத்மினி! சீக்கிரம் கிள்ளம்பும்மா''

''மாமா! எப்படியும் போகப்போறேன். அதுக்கு முன்ன அக்கா கிட்ட கொஞ்ச நேரம் பேசிட்டு போறேனே. காலையில இருந்து அவ என் கண்லயேபடல்ல. இப்பவும் நானவ் போகப்போறேன்னு வருத்தப்பட்டு எதுவுமே பேசமாட்டேங்கிறா. பிளீஸ் மாமா. எங்களைக் கொஞ்சநேரம் தனியாவிடுங்க''

''ரெண்டு பெண்ணுங்க பேச ஆரம்பிச்சா நேரம் போறது தெரியாம பேசிட்டு நிப்பீங்களே''

''இப்ப நீங்கதான் பேசிட்டு நிற்கிறீங்க. போற இடத்தில எப்படி நடந்துக்கணும்னு சொல்லி அனுப்பணும். மத்தபடி நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் நடக்காது. போங்க. நானும் மனுஷிதான். அவ என் தங்கை. விரோதி இல்லை' பாகீரதி சிடுசிடுத்தாள்.

''அந்த நினைப்பு உனக்க இருந்தா போதும்'' என்றவாறு தோளைக் குலுக்கிவிட்டு வெளியேறினான் தயாளன்.

''எனக்காக! மாமா ஏன் ஒருமாதிரி பேசுறாங்க.''

''குட்டு உடைஞ்சிட கூடா தேங்கிற பயம் தான்!அதெல்லாம் உனக்குத் தெரிய வேண்டாம் பத்து. தெரிஞ்சு இனி ஒரு பிரயோஜனமில்ல. நீ துணியெல்லாம் எடுத்து பெட்டியில வை'' என்றவாறு பீரோவைத் திறந்து தங்கையின் புடவைகளை எடுத்துக் கட்டிலில் போட்டாள்.

பத்மினியின் முகம் மாறியது. ''என்னக்கா சொல்ற? எனக்கு புரியல''

''ஒரு சில விஷயங்கள் புரியாம இருக்கிறதுதான் நல்லது. இந்த

Optimized using trial version www.balesio.com

கண்ணாடி வளையல் எல்லாம் வேண்டாமில்ல? அதான் கைநிறைய தங்க வளையல் இருக்கே''

''அக்கா! பேச்சை மாத்தாதே. நீயும் ஏங்க்கா ஒருமாதிரி பேசுற?''

''என்னை எதுவும் கேட்காதடி. ஏற்கனவே நான் துடிச்சிட்டு இருக்கேன். நீ திருப்பித்திருப்பிக் கேட்டா நான் எல்லாத்தையும் கொட்டிடுவேன். அப்புறம் உன் வாழ்க்கை என்னாகும்?'' பாகிரதி கண்ணீரோடு கேட்க, பத்மனியின் வயிற்றுக்குள் எதுவோ பிசைந்தது.

''அக்கா! என்னக்கா. என்னனென்னவோ சொல்ற?''

''உன் வாழ்க்கையில என்னனென்னவோ நடந்துபோச்சே. நான் என்ன பண்ணுவேன்? எனக்குத் தெரியாம சதிபண்ணி தாலியும் கட்டிட்டானே படுபாவி! அவன் இவ்வளவு மோசமானவன்னு தெரியமப்போச்சே. உம் மாமாவும் கூட்டுக்கள்ளனா இருந்திருக்காரே. பாட்டிக்கு உடம்பு சரியில்லன்னு பொய் சொல்லி என்னை பஸ் ஏத்திவிட்டுட்டு யாருக்கும் தெரியாம திருட்டுக்கல்யாணம் மாதிரி உன்னைத் தனியே கூட்டுட்டு போய் கல்யாணம் பண்ணிவெச்சுட்டாரே. அதுவும் ஒரு கேடுகெட்ட பயலுக்கு ரெண்டாந்தாரமா கட்டி வெச்சுட்டாரே'' சத்தமில்லாமல் தலையிலடித்தக் கொண்டு பாகிரதி அழ, உடல் முழுக்க அதிர, கட்டிலில் 'பொத்'தென அமர்ந்தாள் பத்மினி.

உடல் முழுவதும் நடுங்கியது. இதயம் தன் துடிப்பை நிறுத்திவிட்டதைப் போல் உணர்ந்தாள். கண்கள் நிலைத்து போயிருக்க, அசைவின்றி அமர்ந்திருந்தவளை கட்டிக் கொண்டு விசும்பினாள் பாகிரதி.

''என்னை மன்னிச்சிடும்மா. நான் முழுசா இருந்தும் உன்னைக் காப்பாத்த முடியாமப் போச்சே. எல்லாமே போச்சே. என்னை மன்னிச்சிடு பத்து. எனக்காக என் தாலிக்காக உன்மாமாவை மன்னிச்சிடு பத்து'' தாரைதாரையாய் நீலிக் கண்ணீர் விட்டாள் பாகிரதி.

நீ ஏங்க்கா மன்னிப்பு கேட்கிற? நீ என்ன தப்பு பண்ணின?''

''தப்பு தான். எம்புருஷனை நம்பி உன்னை தனியா விட்டுட்டு பாட்டிய பார்க்க போனேனே. அது தப்புதான். நான் போகாம இருந்திருந்தா உன்னை ஏமாறவிட்டிருப்பேனா. உனக்கு எப்படியெல்லாம் மாப்பிள்ளை தேடினேன். இப்படி ரெண்டாந்தாரமா கொடுக்கவா உன்னை பொத்தி பொத்தி பாதுகாத்தேன்?''

பத்மினியின் முகம் இறுகியது. கண்களில் நீரில்லை. முகம் கல்லாய் மாறியிருந்தது.

''அக்கா! உனக்கு நல்லாத் தெரியுமா? அ... அவர்... ஏற்கனவே கல்யாணமானவரா?''

''ஆமாமமா! அது தெரிஞ்சுதான் இந்த இடம் வேண்டாம்னு உம் மாமாகிட்ட சண்டைபோட்டேன். ஆனா அவருக்கு இதைவிட மனசில்லை. அதான் என்னை அனுப்பிட்டு உன்னை பலிகொடுத்திட்

டாரு.''

''நீ எங்கிட்ட சொல்லியிருக்கலாமே''

''எங்கே சொல்றது? நீ நைட் கோவிலுக்கு போயிருந்தியே. அப்பத்தான் எனக்கு இது தெரிஞ்சது. நீ வர்றதுக்குள்ள நாம கும்பகோணம் கிளம்பிட்டேனே''

''அப்போ நீ பாட்டியக் கூப்பிட போகலையா? மாமா அப்படித்தானே சொன்னார்?''

''நீ குழந்தைம்மா அதான் ஈஸியா ஏமாத்திட்டார். என்னையே ஏமாத் திட்டாரே. உன்னை ஏமாத்துறது கஷ்டமா?''

''மாமாவா இப்படியெல்லாம் பண்ணினார்? என்னால இதையெல்லாம் நம்ப முடியலக்கா வெளுத்ததெல்லாம் பால்ன்னு நினைக்காதே பத்மினி. உம்புருஷன் கூட உங்கிட்ட ரொம்ப பிரியமா நல்லவன் மாதிரி நடந்திருப்பானே?''

''ம்.''

''நம்பாதே. எல்லாம் நடிப்பு. அவன் மட்டுமில்ல. மொத்தக் குடும்பமும் பிராடுதான். உனக்கு அவங்க மேல சந்தேகம் வந்திடக்கூடாதுன்னுதான் இவ்வளவு நகைய போட்டுவிட்டிருக்காங்க. நாய்க்கு எலும்புத் துண்டை போடுற மாதிரி.'' பத்மினியின் கழுத்தைப் பார்த்தவாறே பாகீரதி சொல்ல, பத்மினி உடல் கூசிப்போனது.

கழுத்தில் பாம்புகள் நெளிவது போல் அருவெறுப்பாய் இருந்தது. எல்லாத்தையும் கழற்றி வீசிவிடலாமா? அவசரமாய் கழுத்தில் கை வைத்தவளுக்கு அது நெருடியது. கனமான தாலி. வசந்தன் கட்டிய தாலி. மற்றவற்றை கழற்றி வீசிவிடலாம். இதை?

கையில் தாலியை பிடித்துக் கொண்டு இடிந்துபோயிருந்த தங்கையை உற்றுப் பார்த்தாள் பாகீரதி. கைகள் தானாய் தன் கழுத்தைத் தடவிப்பார்த்தது. நூல்போல் கிடந்த தாலிச் செயின் அவளது கோபத் தீயை இன்னும் அதிகமாக்கியது.

''ஹூம்! நடந்தது நடந்துபோச்சு. இனி எதைப்பத்தியும் பேசி பயனில்லை நீ கிளம்பு''

''எ. எங்கே?''

''இதென்னடி கேள்வி? உன் புருஷன் வீட்டுக்குத்தான்''

''அக்கா! நான் உங்கூடவே இங்கேயே இருந்திடுறேன் அக்கா''

''சொன்னாக் கேளும்மா. கல்யாணமான அன்னிக்கே வாழாவெட்டியா இங்கேயே இருந்திட்டா ஊர் என்ன சொல்லும். அதோட உம் மாமா மேல எனக்கு நம்பிக்கை இல்ல''

மீண்டும் பலமாய் அதிர்ந்தாள் பத்மினி'' அ.க்.கா''

''ஆமாம்மா. அவருக்க எப்பவுமே உம்மேல ஒரு கண்ணு. அவர் கிட்ட இருந்து உன்னைக் காப்பாற்றத்தான் இந்தக் கல்யாண ஏற்பாடையே பண்ணினேன். நம்ம கெட்டநேரம் அதுவும் இப்படி ஆகிப் போச்சு. இப்ப நீ இங்கேயே உம்மாமா உன்னைச் சும்மாவிடுவாரா?

வேலியில்லாத் தோட்டம்னு மேய்ந்திடமாட்டாரா?''

பாகீரதி சரளமாய் பொய்களை வாரியிறைக்க, பத்மினிக்கு மூச்சு முட்டியது. தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது? நல்லவர்கள் என்று தான் நினைப்பவர்கள் எல்லாருமே நயவஞ்சகர்களாய் இருக்கிறார்களே. நான்தான் ஏமாளியாய் இருந்துவிட்டேனா? இல்ல. இது உண்மையாய் இருக்காது. வசந்தனை தனக்கு முன்னபின்ன தெரியாது. அவன் குடும்பத்தைப் பற்றியும் தெரியாது. ஆனால் மாமா... நிச்சயம் அவர் மோசமானவராய் இருக்க முடியாது. எத்தனை நாட்கள் இந்த வீட்டில் தனியாய் இருந்திக்கிறேன். ஒரு நாள் கூட அவர் நிழல் என் மேல் பட்டதில்லை.

தவறான பார்வையோ பேச்சோ பார்த்ததில்லை. அக்கா மாமாவைப்பற்றி சரியாக புரிந்து கொள்ளாமல் பேசுகிறாள். அவர் நல்லவர். மாமா நல்லவர்.

'என் புருஷன் நல்லவர்னு நம்பி ஏமாந்தேன். நீயும் ஏமாந்திடாதே பத்மினி. பேசாம உம்புருஷன் வீட்டுக்கு போயிடு. அவன் உன்னை ஏமாத்தினதுக்கு அவன் கூடவே இருந்து தண்டிச்சிடு. அதுதான் பெரிய தண்டனை.

''பத்மினி ரெடியா! டயமாச்சு..'' குரல் கொடுத்துக் கொண்டே இருவரும் வர. அவசரமாய் தங்கையின் கண்களைத் துடைத்துவிட்டாள். ''எல்லாம் உன்கையிலதான் இருக்கு. தைரியமாப்போ எதுவும் தேவைன்னா போன் பண்ணு. கிளம்பு.'' என பெட்டியை மூடினாள்.

''பத்துரெடி! கிளம்புங்க. நல்ல நேரம் முடிஞ்சிடப்போகுது'' உற்சாகமாய் சொன்னவாறு தானே பெட்டியை கொண்டு போய் காரில் வைத்தாள். காரின் கதவை திறந்து கொண்டு தங்கையை அழைத்தாள்.

''வா பத்து. வாங்க மாப்பிள்ளை'' மனைவியின் முகத்தை குழப்பமாய் பார்த்துக் கொண்டிருந்தான் தயாளன். பத்மினியின் முகமும் சரியில் லை. யாரையும் நிமிர்ந்து பாராமல் ஒருவார்த்தை சொல்லிக் கொள்ளாமல் காரை நோக்கி வந்தாள். இயல்பாய் கையைப்பற்றிய கணவனின் கரங்களை உதறி தள்ளிவிட்டு காரில் ஏறி ஜன்னலோரமாய் ஒதுங்கி அமர்ந்து கொண்டாள்.

கூச்சப்படுகிறாள் என சாதாரணமாய் நினைத்துக் கொண்ட வசந்தன் விலகியே அமர்ந்து கொள்ள, காரின் கதவைச் சாத்திய பாகீரதியின் விழிகள் திருப்தியாய் மலர்ந்தன. இருவருக்கும் இடையில் உள்ள இடைவெளியை ஆசைதீர கண்டுகளித்தது.

'காரில் மட்டுமில்ல வசந்த். உங்க வாழ்க்கை முழுக்க இந்த இடைவெளி தொடரும்.'' குரூரமாய் புன்னகைத்து கையசைத்து வழியனுப்பினாள். காரில் ஏறிய நிமிடம் முதல் திருச்சி சென்று சேரும் வரை கணவனின் பக்கம் திரும்பிக் கூட பார்க்கவில்லை பத்மினி.

12

இரவு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் வசந்தன் வெகுநேரமாய்க் காத்துக்கொண்டிருக்க, பூஜையறையில் அசையாமல் அமர்ந்திருந்தாள் பத்மினி. சினிமாக்களில் வருவதுபோல் நான்கைந்து .பெண்கள் சேர்ந்து கேலியும் கிண்டலும் அலங்கரித்து அறைக்குள் கொண்டுவந்து விடவில்லை.

உமா மாலையே கணவனோடு புறப்பட்டுவிட, மற்ற உறவினர்களும் நாசூக்காய் கிளம்பிவிட்டனர். எட்டுமணிக்கே இரவு டிபனை முடித்து விட்டு பெரியவர்கள் மாத்திரையின் தயவில் உறங்கிவிட, தனித்து நின்றவளை அமுதாதான் அழைத்து வந்து தலைவாரி பூச்சூடினாள். அதுவரை மாடியில் கலகலத்துக் கொண்டிருந்த நண்பர்களும் வெளியேறினர்.

மெல்லிய ஜரிகையோடு கூடிய பட்டுப்புடவையை அணிவித்து, வெள்ளிச் செம்பில் காய்ச்சிய பாலை ஊற்றிகையில் கொடுத்தாள். ஸ்வேதா தூக்கத்திற்காக சிணுங்கிக் கொண்டே இருக்க, அவளை தோளில் போட்டுக்கொண்டே சொன்னாள்.

''பத்மினி மாடியில செகண்ட் ரூம்தான் உங்களது. பாலை எடுத்துட்டுபோ. நான் குழந்தைய தூங்க வெக்கிறேன்.''

''ம்''

''ஹால்ல பூஜையறை இருக்கு. சாமிகும்பிட்டுட்டு போ. சரியா?''

''ம்'' மௌனமாய் தலையாட்டினாள் பத்மினி. அமுதா தங்களது அறைக்குள் நுழைந்து கதவை சாத்திக்கொள்ள, தனித்தீவில் விடப்பட்டதுபோல் தவித்துப்போனாள். மாடிப்படியேற கால்கள் தயங்கின. தமக்கையின் வார்த்தைகள் ஒன்றறன்பின் ஒன்றாய் காதில் ஒலித்துக்கொண்ட இருக்க, கட்டியவனின் மீது மிதமிஞ்சிய வெறுப்பு எழுந்தது.

அதே வெறுப்போடு பூஜையறைக்குள் நுழைந்தவள் கதவைசாத்தி விட்டு அமர்ந்து விட்டாள். தனிமையும் எதிர்காலமும் மிரட்டியது. இதே வெறுப்போடு இன்னும் எத்தனை நாள் இந்தவீட்டில் இருக்க முடியும்?''

காரில் வந்த சிலமணி நேரங்களிலே பத்துமுறை கேட்டுவிட்டான் வசந்தன். ''என்னாச்சு பத்மினி. உடம்பு சரியில்லையா? தலைவலிக்குதா? காபி சாப்பிடுகிறாயா?'' எனதிரும்பதிரும்பக் கேட்டவனிடம் ஓட்டுநரின் காதில் விழாதவாறு சுள்ளென்று விழுந்தாள். '' கொஞ்சநேரம் என்னை அமைதியா விடுங்க'' என்று அதன்பிறகு அவன் எதுவும் கேட்கவில்லை. பேசவும் இல்லை. வீடு வந்து சேர்ந்தபிறகும் கூட இவ்வளவு நேரத்தை அவனருகே செல்லாமல் கடத்தியாகிவிட்டது. இனி எப்படி அவன் முன் செல்வது?

ஏற்கனவே திருமணமானவன்? மனைவியை விரட்டியடித்தவன் என்றதை இன்னும் ஜீரணிக்க முடியவில்லை. பெண்பார்க்க வந்த அன்றே நான் எதையும் மறைக்காமல் சொன்னேனே. அவன் இதைப் பற்றி ஒருவார்த்தை சொல்லவில்லையே. வேண்டுமென்றே மறைந்து அவசரமாய் திருமணமும் செய்துவிட்டான்.

தாலியைக் கட்டிவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது என்று தைரியம்தானே?. இவளால் என்ன செய்துவிட முடியும் என்கின்ற நிமிர் தானே? இவனுக்கு மனைவியாய் வாழ்வதா?''வேண்டாம். வேண்டவே வேண்டாம்.

எனக்காக காத்திருக்கிறாயா?'' இரு. நீ எவ்வளவு நேரம் காத்திருந்தாலும் நான் வரப்போவதில்லை. விடியும்வரை இந்த அறையை விட்டு வெளியே வரமாட்டேன்'' மனதில் தோன்றிய வைராக்கியத் தோடு சில்லென்ற தரையில் ஒருக்களித்துப் படுத்தாள்.

கையை தலையணையாக்கிக் கொண்டு கதவோரமாய் சுருண்டவள் உடல் அலுப்பில் படுத்ததும் உறங்க ஆரம்பித்தாள்.

நள்ளிரவை நெருங்க ஆரம்பித்ததும் வசந்தன் குழப்பமாய் எழுந்தான். இன்னும் என்ன செய்கிறாள்? அறையைவிட்டு எழுந்தவன் கீழே பார்க்க, வீடு முழுக்க நிசப்த விளக்குகள் உறுதிசெய்தது.

லேசான பதற்றம் தோன்றியது. பத்மினி எங்கே? பட்டுவேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டே வேகமாய் படிக்கட்டில் இறங்கினான். ஹாலின் ஓரத்தில் இருந்த பூஜையறையில் மட்டுமே வெளிச்சம் தெரிந்தது. பூஜையறையிலா இருக்கிறாள்?

குழப்பமாய் நடந்து பூஜையறையின் கதவைத் திறக்க, கதவோரமாய் படுத்திருந்தவளின் உடல்மீதுபட்டு உறக்கத்தை கலைத்துவிட, பதறியெழுந்தாள் பத்மினி. உடல் முழுக்க வெடவெடக்க, சுற்றிலும் திரும்பிப் பார்த்து தன்னிலை உணர்ந்து தடுமாறி எழுந்து நின்றாள்.

வசந்தன் அவளது தோள்பற்றி நிற்கவைத்தான் ''பத்மினி! இங்கே என்ன பண்ணிட்டு இருக்கே?'' வியப்பாய் மெல்லிய குரலில் கேட்டவனை நிமிர்ந்ததும் பாராமல் தன்தோளைப் பற்றியிருந்த அவனது கரங்களை விலக்கினாள்.

''பத்மினி! நான் உன்கிட்டதான் கேட்கிறேன்''

''நா. நான். தூங்கினேன்'' தரையைப் பார்த்தே சொன்னாள்.

''என்ன? தூங்.... இங்கேயா? இது பூஜையறைம்மா. வெறும்தரையிலா படுத்தே?''

''தரையில படுத்து எனக்கு பழக்கம்தான்''

''சரி. வா. நம்ம ரூமுக்கு போகலாம்.''

''இல்ல. நான் வரல்ல'' - இப்போதும் அவள் நிமிராமலே பதில் சொல்ல, வசந்தனின் முகம் மாறியது. ''ஏன்?''

''எனக்கு தூக்கம் வருது. தூங்கணும்.''

''தூங்கு. நான் இங்கேயே தூங்குறேன்'' குரலை உயர்த்தினாள்.

''ஷ! சத்தமா பேசாதே. யாராவது முழிச்சிட போறாங்க. இப்ப என்ன நீ தூங்கணும். அவ்வளவுதானே மாடியில போய் தூங்கு. நான் உன்னை டிஸ்டர்ப் பண்ண மாட்டேன் போ''

''நீங்க எங்கே படுப்பீங்க?'' வெடுக்கென கேட்டவளை விநோதமாய் பார்த்தான். ''எங்கே படுக்கணும்?''

''நான் தனியா படுக்கணும்.''

''சரி. நீ ரூம்ல படுத்துக்க. நான் பால்களியில படுத்துக்கிறேன். பிளீஸ் முதல்ல போ! போ யாராவது எழுந்து வந்தா தப்பா நினைச்சுக்கப் போறாங்க.'' அவன் மிக மெல்லியரலில் சொல்ல அதற்கு மேல் நில்லாமல் விடுவிடுவென படியேறினாள்.

அறைக்கதவு மூடப்பட்டிருந்தது. தயக்கமாய் கதவில் கைவைத்தான். கதவு சத்தமில்லாமல் உள்ளேபோயிற்று.

மாலையில் மலர்ந்து மணம் வீசிய மலர்கள் கட்டிலில் வாடிக்கிடக்க, கட்டில் வெறுமையாய் இருந்தது. பார்வையைத் திரும்பியவனின் கண்களில் சுவரோரமாய் உடல் முழுக்க போர்த்திக் கொண்டு படுத்திருந்த பத்மினி தெரிந்தாள். கட்டிலில் படுக்கச் சொல்லலாமெனத் தோன்றிய எண்ணத்தைக் கைவிட்டு, தலையணையைமட்டும் எடுத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றான்.

தரையில் கால் நீட்டிப்படுத்தான். உடம்பின் அசதி அப்போதுதான் புரிந்தது. அதைவிட குழப்பம் அதிகமாய் இம்சித்தது. என்ன ஆயிற்று இவளுக்கு? தாலிகட்டும் போதும் சரி காரில் தன்னுடன் வந்தபோதும் சரி அவள் ரொம்ப சந்தோஷமாகத்தான் இருந்தாள். தன்னை முழுமனதோடு தான் ஏற்றுக் கொண்டாள் என்பதை அவள் முகமும் கண்களும் தெளிவாய்ச் சொன்னதே.

பிறகேன் இந்தப் பாராமுகம்? என்னை பார்க்கவோ பேசவோ விரும்பாதது போல் அவளது முகத்தில் எத்தனை வெறுப்பு? ஏன் எதற்காக? அவள் வீட்டில் இருந்த கொஞ்ச நேரத்தில் என்ன நடந்தது? சட்டென மூளைக்குள் மின்னல் வெட்டியது.

புறப்படுவதற்கு முன்பாக அக்காவும் தங்கையும் பேசினார்கள். என்ன பேசினார்கள்? என்னைப் பற்றி ஏதேனும் தவறாக சொல்லியிருப்பார்களா? எதுவாய் இருந்தாலும் நேரில் கேட்டுவிட வேண்டியது தானே.

இப்படி மருகுவதால் யாருக்கு என்ன லாபம்? நிச்சயமாய் தன்னைப் பற்றிய பேச்சு நடந்திருக்க வேண்டும். அதனால்தான் பத்மினியின் முகமும் செயலும் மாறியிருக்கிறது. இதைப் பேசி தெளிவுபடுத்த வேண்டும்.

எந்தப் பிரச்சனையையும் முதலிலேயே சரிசெய்துவிடவேண்டும். வளரவிட்டால் அது நம்மையே விழுங்கிவிடும். விடியட்டும். பேசிப்பார்க்கலாம். இன்னும் சிறுகுழந்தையாகவே இருக்கிறாளோ. யார் என்ன சொன்னாலும் நம்பிவிடுகிறாளே. இவளை மாற்ற

வேண்டும்.

நல்லது கெட்டதை புரிந்து கொள்ளும் பக்குவத்தை கொண்டு வர வேண்டும். முதலில் அவளது கோபத்தை வருத்தத்தை மாற்ற வேண்டும். விடியட்டும். முடிவோடு கண்களை மூடினான். குளிர் காற்று வீசியது. உடல் குளிரில் நடுங்கியது. தரை பனிக்கட்டியாய் குளிர, எழுந்து அமர்ந்தான்.

வெயில் சமயங்களில் இதமான குளிரோடு தாலாட்டும் பால்கனி இன்று டிசம்பர் குளிரில் வாட்டியெடுத்தது. உடல் மெலிதாய் நடுங்க, அறைக்குள் சென்று போர்வையை எடுத்து வரலாமா?

வேண்டாம். இப்போது போனால் அதற்கும் கோபப்படுவாள். எதற்கு வம்பு? இன்னும் கொஞ்சநேரத்தில் விடிந்துவிடும். பேசாமல் படுத்துவிடலாம் என்ற நினைப்போடு தலையணையை வாகாய் வைத்துக்கொண்டு படுத்தான். மற்ற நினைவுகளை ஒதுக்கி வைத்து விட்டு கண்களை மூடி உறங்க ஆரம்பித்தான்.

விடிந்து வெகுநேரமான பின்பே கண்விழித்த பத்மினி முதலில் தேடியது கணவனைத்தான். கட்டில் வெறுமையாய்க் கிடக்க, இன்னும் வெளியில்தான் படுத்திருக்கிறாரா? யாராவது மேலே வந்து பார்த்தால் என்னாவது? பதட்டமாய் ஆடையை சரிசெய்துவிட்டு கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

வராந்தா காலியாய் தெரிய, கண்களைச் சுழற்றித் தேடினாள். பால்கனி வேப்பமர நிழலோடு தெரிய, வெற்றுத்தரையில் படுத்திருந்தவனின் உருவம் தெரிந்தது. வேகமாய் நெருங்கினாள். நெருங்கும் போதே வித்தியாசமாய் தோன்ற பதட்டமானாள்.

வசந்தனின் உடல் உதறிக் கொண்டிருந்தது. கண்களைத்திறக்க முடியாமல் முனகிக் கொண்டிருந்தான். பத்மினி ஆடிப்போனாள். சட்டெனக் குனிந்து அவனைத் தொட்டாள் தொட் கரம் சூடுதாளாமல் எடுத்தது.

''ஐயோ! என்னங்க! என்னங்க... என்ன பண்ணுது உங்களுக்கு?'' பதட்டமாய் கணவனை தொட்டு அசைத்தாள். மெல்லிய முனகல் மட்டுமே பதிலாய் வர. கண்களைத் திறக்க முடியாமல் தவித்தவனைப் பார்க்கையில் நெஞ்சில் பாரம் ஏறியது.

அந்த நிமிடம் தமக்கையின் வார்த்தைகள் புகைபோல் மறைய, தரையில் அமர்ந்து கணவனின் தலையை தன் மடிமீது வைத்து கன்னத்தைத் தட்டினாள்.

''என்னங்க. கண்ணைத் திறந்து பாருங்களேன். ஐயோ! ஜுரம் வேற நெருப்பா கொதிக்குதே. ஏங்க! எனக்கு பயமாய் இருக்கு. கண்ணைத் திறங்க'' பத்மினி அழுகுரலில் கூற, வசந்தன் சிரமமாய் கண்களைத் திறந்தான்.

''பத்மினி.... என்னை.... என்னால...''

''என்னங்க பண்ணுது?'' எழுந்துக்க முடியலையா? மாமாவைக்

கூப்பிடவா?''

''வே. வேண்டாம். முதல்ல என்னை ரூமுக்கு அழைச்சிட்டு போறியா பிளீஸ்.'' அவன் எதற்காக கூறுகிறான் என்று புரிந்து உடைந்துபோனாள். வெளியே படுத்ததை யாரும் அறியக்கூடாது என்று இந்த நிலையிலும் கவனமாய் இருக்கிறானே.

''பத்மினி! இந்த தலையணையையாவது ரூம்ல கொண்டு போய் வெச்சிடு. நான்... மெதுவா எழுந்து வர்றேன்.'' சிரமமாய் அவன் எழ முயற்சிக்க, கண்களில் குபுக்கென நீர் சுரந்தது. வேகமாய் எழுந்து அவன் எழுந்து நிற்க உதவிசெய்தாள்.

நிற்க முடியாமல் அவன் தள்ளாட அவனது தோளைப்பற்றிக் கொண்டு மெதுவாய் தன்னோடு அணைத்தவாறே அறைக்குள் அழைத்தச் சென்றாள். கட்டிலில் படுக்க வைத்து பெட்ஷீட்டால் கழுத்துவரை மூடினாள்.

''படுத்திருங்க. நான் போய் அத்தைகிட்ட சொல்லிட்டு...''

''தலையணை? வெளியே கிடக்குதே''

''இதோ எடுத்துவர்றேன்.'' வேகமாய்ச் சென்று தலையணையை எடுத்த வந்து கட்டிலில் வைத்தாள். அவனது உடல் இன்னமும் உதறிக் கொண்டிருக்க, கண்ணீரும் பதட்டமுமாய் கீழே இறங்கி ஓடினாள்.

எதிரே காபியோடு வந்த அமராவதி மருமகளைக் கண்டதும் புன்னகைத்தாள்.

''எழுந்திட்டியாம்மா? குளிச்சிட்டு வந்திடேன். காபிரெடியா இருக்கு''

''அத்தே! திணறலாய் பத்மினி அழைக்க, கண்ணீரோடு நின்ற கோலம் கண்டு துணுக்குற்றாள்.

''பத்மினி! என்னாச்சும்மா? ஏன் அழறே?''

''அத்தே! அவருக்கு... அவருக்கு..''

''என் பிள்ளைக்கு என்ன ஆச்சு?'' அமராவதியின் குரலில் ஆனந்தனும் ராஜசேகரும் எழுந்துவர, பத்மினி பொலபொலவென கண்ணீர்விட்டாள்.

''அத்தே! அவருக்கு ரொம்ப ஜுரம் அடிக்குது. உடம்பெல்லாம் தூக்கி தூக்கிப் போடுது. எனக்கு ரொம்ப பயமா இருக்கு''

''ஐயோ! என் பிள்ளை..'' அமராவதி பதட்டமாய் மாடிப்படியேற ராஜசேகர் மூத்தமகனிடம் திரும்பினார்.

''ஆனந்தா! டாக்டருக்கு போன் பண்ணு. சீக்கிரம்.''

''சரிப்பா'' ஆனந்தன் போனை நோக்கி ஓட, ராஜசேகர் மாடி ஏறினார். தலைகுளித்துவிட்டு வெளியே வந்த அமுதாவும் காரணம் புரியாமல், பத்மினியின் பின்னே ஓடினாள்.

அறைக்குள் நுழைந்து உதறிக் கொண்டிருந்த மகனை வாரியெடுத்து தன் மடியில் போட்டுக் கொண்டாள் அமராவதி, பெற்ற உடல்

பதறித்துடித்தது.
''ராஜா! கண்ணா! அம்மா வந்திருக்கேன். கண்ணைத் திறந்து
பாருய்யா. கண்ணா! என்னய்யா ஆச்சு உனக்கு? நேத்துநைட்கூட
நல்லாத்தானே இருந்தான்.''
''நைட் பத்துமணி வரைக்கும் பிரெண்ட்ஸ் கூட அரட்டை அடிச்சி
ட்டு இருந்தானே அம்மா பத்மினி. எப்ப இருந்தும்மா இப்படி இருக்
கான்'' ராஜசேகர் பதட்டமாய்க் கேட்க, பத்மினி தடுமாறினாள்.
உடலும் மனமும் பொய்சொல்ல முடியாமல் கூசியது.
''நைட்...எ..எல்லாம் நல்லாத்தான் மாமா இருந்தார். விடிய
காலையில தான் நான் தூங்கின பிறகு இப்படி....'' மேல பேசமுடியா
மல் அவள் தடுமாற அத்தனை களேபரத்திலும் பெற்றவளின் முகத்
தில் துளி நிம்மதி பரவியதை உணர்ந்து இன்னமும் கூசிப் போனாள்.
டாக்டரோடு வந்த ஆனந்தன் பரிதவிப்போடு தம்பியின் உள்ளங்கை
உள்ளங்கால் என சூடுபறக்க தேய்த்துவிட்டான். மருத்துவர் பரிசோ
தித்து விட்டு இரண்டு ஊசிகளைப் போட்டார்.
''ஐயோ! என்ன டாக்டர் சொல்றீங்க?''
''ரொம்ப நேரம் பனியில நின்னிருக்காரும்மா. அதான் இவ்வளவு
ஹெவியாத்தாக்கியிருக்கு''
''பயப்படாதீங்கம்மா.ஜுரம்தான். வேறொண்ணுமில்ல. கார்ல
கூட்டிட்டு வந்திடுறீங்களா?''
''நீங்க கிளம்புக்கு டாக்டர். நாங்க உடனே வர்றோம்''
''சரி''-என்றவாறு டாக்டர் தன் உபகரணங்களை எடுத்துக் கொண்டு
கீழே இறங்க, ஆனந்தன் தம்பியை தூக்கி தோளில் சாய்த்துக் கொண்டு
அவரைப் பின் தொடர்ந்தான்.
''பார்த்துப்பா.மெதுவாப்போ''-என்றவாறு ராஜசேகர் செல்ல.
அவர் பின்னே செல்லத் துவங்கிய அமராவதியின் கையைப் பற்றிக்
கொண்டாள் பத்மினி. ''அத்தே! நானும் வர்றேன். என்னையும் கூட்
டிட்டுபோங்க''-கண்ணீரோடு கேட்ட மருமகளை பரிதாபமாய்ப்
பார்த்தாள் அமராவதி. கசங்கிய பட்டுப்புடவையோடும் உதிர்ந்த
பூச்சரத்தோடும் அழுது சிவந்த முகத்தோடு நின்றவளைக் கண்டு கண்
ணீர் பொங்கியது.
''வேண்டாம்மா. இந்தக் கோலத்தோட நீ ஹாஸ்பிடல் வரவேண்
டாம். குளிச்சிட்டு வீட்ல இரு. நான் போனதும் எப்படி இருக்கான்னு
பார்த்திட்டு போன்பண்றேன்.
''அத்தே! என்னால இங்கே இருக்கமுடியாது அத்தே. நான்..நான்..அ
வர் கூடவே இருக்கணும். பிளீஸ் அத்தே. என்னையும் கூட்டிட்டு
போங்க. எனக்கு பயம்மாஇருக்கு''-உடல் பதற கண்ணீர் விட்டவ
ளைக் கண்டதும் மனம் கசிந்தது.
''சரி. நீ குளிச்சிட்டு ரெடியாகு. அமுதா! நீயும் பத்மினியும் சின்ன
வன் கார்ல வந்திடுங்க. நாங்க முன்னால போறேன்''.

''சரிங்கத்தே''-அமுதா தலையசைக்க, மாமியாரின் கைகளைப்
பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டாள் பத்மினி.
மாடியறையில் பத்மினி மாற்றுடைகளை எடுத்துக் கொண்டு குளி
யலறைக் கதவைத் திறக்க, கட்டிலில் கிடந்த வசந்தனின் செல்போன்
இனியகீதம் இசைத்தது. அவசரமாய் ஒடி வந்து போனை எடுத்தாள்.
''ஹலோ! சென்னையில இருந்து பாகீரதி பேசுறேன். பத்மினியோட
அக்கா''-தமக்கையின் குரல் கேட்டதும் பெருங்குரலெடுத்து அழ
ஆரம்பித்தாள் பத்மினி.
''அக்கா! நான்தான்க்கா பேசுறேன்''
''பத்து! என்னாச்சும்மா? ஏன் அழறே?
''அக்கா! வந்து...அவருக்கு உடம்பு முடியாம ஹாஸ்பிடலுக்கு
தூக்கிட்டு போயிருக்காங்க''
''என்ன? தூக்கிட்டு போறாங்களா? ஏய்! என்னடி சொல்றே?
''ஏதாவது ஏடாகூடமா நடந்து போச்சா? நைட் சண்டைபோட்
டியா?''
''அக்கா?''-பேசமுடியாமல் தேம்பினாள்.
''எதுவா இருந்தாலும் சொல்லுடி. நீ ஏதாவது கோபமா பேசிஅது
தாங்காம உன் புருஷன் எதுவும் தற்கொலை முயற்சி பண்ணிட்
டானா?
''அக்கா! என்ன பேசுற நீ? அப்படியெல்லாம் எதுவும் நடக்
கல்ல''
''பின்னே? நீ ஏன் இப்படி அழறே? சொல்லித்தொலை''-அக்
காவிடம் பதட்டத்தையும் பரிதவிப்பையும் எதிர்பார்த்த பத்மினி,
அவளது கோபத்தால் லேசாய் திடுக்கிட்டாள். நான் அழுவதற்காக
கோபப்படுகிறாளோ? அவசரமாய்க் கண்ணீரைத் துடைத்தாள்.
''அக்கா! அவருக்கு ரொம்ப ஜுரம் அடிக்குது. உடம்பெல்லாம் உத
றுது''
''ப்பூ! இவ்வளவு தானா? இதுக்கா இத்தனை ஆர்ப்பாட்டம்
பண்ணிட்டே.
நான்கூட என்னவோ ஏதோன்னு பயந்திட்டேன். சரி! நைட்
நடக்க வேண்டியதெல்லாம் நடந்திச்சா?''-பாகீரதியின் கேள்வியில்
இன்னும் அதிர்ந்தாள்.
என்ன கேட்கிறாள்? எதற்காக கேட்கிறாள் என திணறிக்கொண்டி
ருக்கும் போதே பாகீரதியின் குரல் ஏளனமாய் ஒலித்தது.
''ஹும்! உன் மவுனமே சொல்லுதே நேத்து ராத்திரி என்ன நடந்தி
ருக்கும்னு. ஏன்டி! அவ்வளவு தூரம் படிச்சு படிச்சு சொல்லி அனுப்
பினேனே. எம் பேச்சு எதையாவது காதுல வாங்கினியா? பட்டுமெத்
தையும் கண்ணுக்கு லட்சணமான புருஷனையும் பார்த்ததுல உன்
புத்தி மயங்கிப் போச்சா?''

கத்தினாள் பத்மினி.
''அக்கா''-ஆத்திரமாய்க் கத்தினாள் பத்மினி.
''எங்கிட்ட ஏன்டி கத்துற? உன் புருஷன் கிட்ட நாலு வார்த்தை
நாக்கைப் புடுங்கிற மாதிரி கேட்பேன்னு பார்த்தா நைட்டெல்லாம்
கும்மாளம் போட்டீங்களா? அந்த அலுப்புலதான் உம்புருஷனுக்கு
ஜுரம் வந்திடுச்சு போலிருக்கு''-பாகீரதியின் குரலில் உடல் கூசிப்
போனது.
கூடவே பிறந்து வளர்ந்த இத்தனை வருடங்களில் முதன்முறை
யாய் லேசான வெறுப்பு தோன்றியது. அக்கா இப்படியெல்லாம் கூட
பேசுவாளா? இந்த பேச்சிற்கு என்ன அர்த்தம்? என் கணவனுடன்
நான் சண்டைபோட வேண்டுமா? அவரை நெருங்கக் கூடாதா?
பகீரென்று பத்மினிக்கு. நேற்று இரவு இதைத்தானே செய்தோம்.
பரிவாய் அழைத்தவனை முகத்தை கூட பாரா்மல் தூக்கியெறிந்து
பேசி நெருங்க விடாமல் செய்தேனே. என் உதாசீனத்தால் தானே
அவர் கொட்டும் பனியில் கிடந்து இப்போது மருத்துவமனையில்
இருக்கிறார். ஒருவேளை! இதையெல்லாம் சொன்னால் அக்கா
சந்தோஷப்படுவாளோ? வேண்டாம். சொல்லக்கூடாது. என்னதான்
உடன் பிறந்தவள் என்றாலும் கண்வன்-மனைவிக்குள் உள்ள அந்த
ரங்கத்தை வெளிக்காட்டக் கூடாது. அது அசிங்கம். அவள் மனதில்
எதை நினைத்து அப்படிச் சொன்னாளோ? ஆனால் நான் வாயைத்
திறக்கக்கூடாது.
''என்னடி ஒண்ணுமே பேசமாட்டேங்கிற? எனக்கு பில் ஏறுது''
'' போனை வெச்சிடுக்கா. நான் ஹாஸ்பிடல் போகணும்''-என்
றான் அமைதியாய்.
''ம்.போ. போய் அவனுக்கு சேவகம் பண்ணு. உன்னைமாதிரி
பொம்பளைங்க கிடைக்கிறதாலதான் அவன் நினைச்சநேரம் பெண்
டாட்டியை விரட்டிட்டு இன்னொருத்தியைத் தேடிக்கிறான். உனக்கும்
அந்த நிலை வர ரொம்பநாள் ஆகாது.
புத்திசாலியா பொழைச்சுக்குவேன்னு பார்த்தேன். நீ தான் ஒரே
நாள்லயே அவன்கிட்ட விழுந்திட்டியே. மோகம் தீர்ந்துபோனதும்
உன்னையும் விரட்டிட்டு புதுசா ஒருத்திய தேர்ந்தெடுப்பான். அப்போ
தெரியும் உனக்கு'' பாகீரதி எரிச்சலோடு சொல்ல, பத்மினியின்
தொண்டை அடைத்தது. நம்ப முடியாமல் கேட்டாள்.
''அக்கா! இது...சாபமா அக்கா? நீ எனக்கு சாபம் விடுகிறாயா?''
''சாபம் இல்லடி. நடக்கப் போற உண்மை. அவன் நல்லவன் கிடை
யாது. உன் வாழ்க்கை எப்படியோ மாறிப்போயிடுச்சு. நாளைக்கே
ஒரு கஷ்டம்னா நீ என்கிட்ட வந்து நிற்கணும். அதுக்காகத் தான் செ
ால்றேன். அவன் நல்லவனா மாறி உன்கிட்ட மன்னிப்பு கேட்கிற
வரைக்கும் தள்ளியே நில்லு.
நாளைக்கே வயித்தில வாங்கிட்டு அதுக்கு பிறகு விரட்டினான்னு
வைவி. என்ன பண்ணுவ? புள்ளையோட தெருவில நிற்பியா? அக்கா

உன் நல்லதுக்குத் தான் சொல்றேன். உன் இரக்க குணத்தையெல்லாம்
மூட்டைகட்டிவை. ஹாஸ்பிடல் போனவனுக்கு வரத்தெரியாதா?
வருவான். நீ ஒண்ணும் ரொம்ப பதறாதே.
நீ ஸ்டெடியா நின்னாத்தான் அவன் இறங்கி வருவான். உன்னை
ஏமாத்திக் கல்யாணம் பண்ணியிருக்கான். அதுக்கான தண்டனையை
அவன் அனுபவிக்க வேண்டாம்? பார்த்து நடந்துக்க. சரிசரி. போனை
வெச்சிடு. மாமா குளிச்சிட்டு வந்துட்டாரு-''என்றவாறு பாகீரதி
போனை வைத்துவிட, காதிலிருந்த போனை எடுக்கவும் தோன்றா
மல் சிலையாய் அமர்ந்திருந்தாள் பத்மினி.
உடைமாற்றி தலையை பின்னலிட்டுக் கொண்டு வந்த அமுதா
இன்னும் குளித்து உடைமாற்றாமல் கட்டிலில் அமர்ந்திருந்த பத்மி
னியைப் பார்த்து முகம்மாறினாள். காலையில் பூஜையறையில் பார்த்த
பால்செம்பு நினைவு வர. அமுதாவின் மனம் குழம்பித் தவித்தது.

13

கார் சீரான வேகத்தில் போய்க் கொண்டிருக்க. இறு
கிப்போன முகத்துடன் அமர்ந்திருந்த பத்மினியின் கை
களை பரிவோடு தொட்டாள் அமுதா. திரும்பிப் பார்த்த
வனின் கண்களில் நீரைக் கண்டதும் அவளது குழப்பம்
அதிகரித்தது. காரில் வைத்து பேசுவது சரியல்ல என்று
தோன்றியதும் டிரைவரை அழைத்தாள்.
''அண்ணே!போற வழியில ஏதாவது கோவில் இருந்தா நிறுத்துங்க
இறங்கி வசந்துக்காக வேண்டிட்டு போகலாம்''
''அடுத்த திருப்பத்துல ஒரு விநாயகர் கோவில் இருக்கும்மா.
அங்கே நிறுத்தட்டுமா?
'' சரிண்ணா.பத்மினி! வசந்துக்கு பிள்ளையார்ணா ரொம்ப
இஷ்டம். கோவிலுக்கு போயிட்டு ஹாஸ்பிடலுக்கு போலாமா?
''ம்''-வடிவேலன் காரின் வேகத்தைக் குறைத்து அந்த சிறிய
பிள்ளையார் கோவிலின் முன் நிறுத்த, இருவரும் இறங்கினர்.
''அம்மா! நீங்க சாமிகும்பிட்டு வாங்க.நான் அந்த மரத்தடியில
காரை நிறுத்துறேன்''
''சரிண்ணா! வா.பத்மினி.''-என்றவாறு அமுதா முன்னே நடக்க,எ
துவும் பேசாமல் அவளைத் தொடர்ந்தாள் பத்மினி. செம்பருத்தி
மாலைக்கு நடுவே சந்தன அலங்காரத்தில் அமர்க்களமாய் அமர்ந்
திருந்த ராஜகணபதியை வணங்கி, கன்னத்தில் போட்டுக் கொண்டு
அர்ச்சர் தந்த பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு, பரந்து விரிந்து
நிழலைப்பரப்பிக் கொண்டிருந்த அரசமரத்தின் நிழலில் அமர்ந்தாள்
அமுதா.
தயங்கி நின்றாள் பத்மினி. ''ஏன் நிற்கிற பத்மினி? உட்காரு''
''வந்து...டயமாகுதே. ஹாஸ்பிடலுக்கு போகணுமே''
''போகலாம். உட்கார். எப்பவுமே கோவிலுக்கு வந்தா ரெண்டு

நிமிஷமாவது உட்கார்ந்திட்டுதான் போகணும். உட்காரு''-என்றதும்
அமைதியாய் அமர்ந்தாள். ஓரக்கண்ணால் அமுதாவைப் பார்த்தாள்.
ஆனந்தனின் அழகுக்கும் கம்பீரத்திற்கும் ஏற்ற அழகுப்பதுமை.
எளிமையான அலங்காரத்திலும் பேரழகாய்த் தெரிந்தாள். பளவென்
றிருந்த முகம் தீவிரமாய் எதையோ யோசித்துக் கொண்டிருந்தது.
அவளிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் தயங்கிக் கொண்
டிருந்த போது அமுதாவே வாய்திறந்தாள். அவள் கேட்ட முதல்
கேள்வியிலேயே ஆடிப்போனாள் பத்மினி.

''உங்களுக்குள்ள என்ன பிரச்சனை பத்மினி?''-முகத்தை
பாராமலே நிதானமாய் அவள் கேட்ட கேள்வியில் உடல் முழுக்க
அதிர்ந்தாள் பத்மினி.

''ஏ..என்ன கேட்டீங்க?''

''கல்யாணமாகி முழுசா ஒரு நாள் கூட ஆகல. அதுக்குள்ள உங்க
ளுக்கிடையிலேயே என்ன பிரச்சனை?''

''அ..அப்படியெல்லாம்...ஒண்ணுமில்லையே..''-தடுமாறினாள்.

''பொய். காலையில் பூஜையறையில விளக்கேத்தும் போது பார்த்
தேன்''

''எ..என்ன பார்த்தீங்க?''- பத்மினி அவசரமாய் யோசித்தாள். தரை
யில் படுத்திருந்த இடத்தில் பூக்கள் உதிர்ந்திருக்குமோ?

''நேத்து நான் உங்கிட்ட கொடுத்து விட்ட பால் சொம்பு. ஒரு துளி
கூட குறையாமல் சாமி முன்னால இருந்தது''-அமுதாவின் வார்த்தை
யில் சுத்தமாய் வெலவெலத்து போனாள் பத்மினி.

கடவுளே! இதை எப்படி மறந்தேன். இதற்கு என்ன பதில் சொல்
வது என்று யோசிக்கும் முன் அமுதாவே பேசினாள்.

''நடுசாமம் வரைக்கும் நீ மாடிக்குப் போகல. வசந்தன் கீழே
இறங்கி வந்தபிறகுதான் பூஜையறையைவிட்டே வெளியே வந்தே!
இல்லையா?

அரசமரத்தின் குளிர்தென்றலையும் மீறி உடல் வியர்த்துப்போனள்
பத்மினி.

''அது...வந்து..அசதியில..தூங்கிட்டேன் போலிருக்கு''-என்ற
வளை நம்பிக்கை இல்லாமல் பார்த்தாள் அமுதா.

''இதோ பாரும்மா.நீ எனக்கு தங்கைமுறையாகணும். அந்த உரி
மையிலதான் இதைப்பத்தி கேட்கிறேன். நேற்று காலையில இருந்த
முகம் நீ வீடுபோய் திரும்பின பிறகு இல்லையே. பொறந்த வீட்டை
விட்டு பிரிஞ்சவருத்தம்னு தான் நேற்று நாங்க யாருமே உன்னை டிஸ்
டர்ப் பண்ணல.

ஆனா வாழ்க்கையின் முக்கியமான ஒரு இரவை நீ என்ன காரணத்
திற்கு அவாய்ட் பண்ணினன்னு எனக்கு புரியல்ல.பெரியவங்க செ
ால்ற சாஸ்திர சம்பிராதாங்கள்ல ஆயிரம் அர்த்தம் இருக்கும். அதை
நாம அலட்சியப்படுத்தக் கூடாது.

''மன்னிக்கணும் இதுகோவில்ல வெச்சு பேசவேண்டிய விஷ
யமா?''

''நான் அந்த விஷயத்தை மட்டும் பேசல. வசந்த் மேல உனக்கு
என்ன வருத்தம் அல்லது குழப்பம்னு கேட்டுத் தெரிஞ்சகலாம்னு
தான்....

''அப்படியெல்லாம் எதுவும் இல்ல''

''பத்மினி! இது உன்னோட இயல்பு இல்ல. நீ உன்னையே முகமூ
டிபோட்டு மறைச்சிட்டு இருக்க.

''இதோ பாருங்க. நான் ஒண்ணும் எதையும் மறைக்கல்ல. நீங்களா
எதையாவது கற்பனை பண்ணிகிட்டு பேசாதீங்க? ஹாஸ்பிட்டலுக்கு
போகணுமா? இல்ல வீட்டுக்கு போகட்டுமா?-என்றவாறே எழுந்
தாள் பத்மினி. அவ்வாறு முகம் கடுகடு வென்றிருக்க. அமுதா இத
மாய் புன்னகைத்தாள்.

தானும் எழுந்துகொண்டாள். ''பத்மினி!நேற்று உன் முகத்தில்
இருந்த பூரிப்பும் வெட்கமும் உண்மை. இப்போ கொஞ்சநேரம்
முன்னால வசந்த் துடிச்சதைப் பார்த்து தவித்தாயே அது உண்மை.
அதுதான் உன்னோட நிஜமான இயல்பு.

இப்ப நீ என்கிட்ட பேசுறது பொய்யான பேச்சு. எதையோ மறைக்க
உன்னை நீயே கோபக்காரியா மாத்திக்கிற. லைப்ல எப்பவுமே
நிஜமான இயல்போட இருக்கணும் பத்மினி. அதுதான் நமக்கும்
நம்மைச் சுத்தி இருக்கிறவற்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும்.

நீ குழம்பிப் போயிருக்கிறேன்னு எனக்கும் புரியுது. அந்தக் குழப்
பத்தை நீ எங்கிட்ட சொல்லாட்டியும் பரவாயில்லை. உன் புருஷன்
கிட்டயாவது பேசி தெளிவுபடுத்திக்க. எந்த குழப்பமும் நேரடியா
பேசித்தெளிவுப்படுத்தினா தீர்ந்திடும். அதை மனசுக்குள்ளயே வெச்சு
புழுங்கிட்டு இருந்தா நம்ம லைப்ல நிம்மதி இருக்காது.

நீ சின்னப்பொண்ணு. பார்த்தா குழந்தைமாதிரிதான் இருக்கிற.
உன் முகத்துல வருத்தத்தை பார்த்ததும் மனசு தாங்காம பேசிட்டேன்.
உன் பர்ஸனல் விஷயத்தில தலையிட்டது உனக்கு பிடிக்கலன்னா ஐ
'ம்' ஸாரி. போலாமா?''- அமுதாவின் நிதானமான கனிவான பேச்சு,
பத்மினியின் கோபப்புகை மீது நீரூற்றி அணைத்தது.

''ஸாரி''

'' இட்ஸ் ஓ.கே.வாம்மா போகலாம்''- என்றதோடு சரி. அதன்பி
றகு மருத்துவமனையை அடையும்வரை அவள் வாயைத்திறக்கவே
இல்லை. பத்மினிக்குத்தான் சங்கடமாகிப் போனது. எப்போதும்
யாரையும் எதிர்த்தோ அலட்சியமாகவோ பேசியதில்லையே. இன்று
ஏன் இப்படி நடந்து கொண்டேன். எத்தனை அக்கறையாய் பேசினார்.
அம்மா இருந்தால் இப்படித்தான் அறிவுரை கூறியிருப்பாள்.

அக்காவுமே இப்படியல்லவா பேசியிருக்க வேண்டும்?

அவள் ஏன் தன்னிடம் அப்படிக் கூறினாள்? ஆயிரம் இருந்தாலும்,

தன் கழுத்தில் தாலி கட்டியவனாயிற்றே. அவனிடம் ஏன் வெறுப்பைக் காட்ட வேண்டும். இன்று ஹாஸ்பிடலில் படுத்திருப்பது தன் கணவன். அதுவும் தன்னால் ஏற்பட்ட வேதனை அவனிடம் பிரிவு காட்டக் கூடாது என்றால்?

''சின்னம்மா! ஆஸ்பத்திரி வந்தாச்சு''- வடிவேலன் சொன்ன பிறகே கலைந்து நிமிர்ந்தாள். அமுதா காரைவிட்டு இறங்கி நின்று கணவனின் செல் பேசியில் தொடர்பு கொண்டு எந்த ப்ளோர் என்று விசாரித்துக் கொண்டிருக்க. தானும் இறங்கினாள்.

''செகண்ட் பிளோராம்.வா''- என அவள் நடக்க, பத்மினி அவளைத் தொடர்ந்தாள். அமுதா எதுவும் பேசாமலேவர, தயக்கமாய் அழைத்தாள்.

''அ..அக்கா!'' -முன்னே சென்று கொண்டிருந்த அமுதா சட்டென நின்று திரும்பினாள்.

''என்னையா கூப்பிட்டே?

''ம்.ஸாரிக்கா''.

''எதுக்கு?''

''இல்ல.நான் அப்படி சட்டுன்னு பேசியிருக்கக் கூடாது. ஏதோ டென்ஷன்ல..''

''பரவாயில்ல. எல்லாரும் எப்பவும் ஓரேமாதிரியா இருப்போம்? சரி லிப்ட்ல போலாமா? ஸ்டெப்ல ஏறலாமா?''

''படிக்கட்டுலயே போலாம்க்கா''.

''சரி''.-என்றவாறு படிக்கட்டில் ஏறத்துவங்கினாள். ''வசந்துக்கு உடம்பு முடியலன்னு உங்கவீட்ல சொல்லிட்டியா?''

''ம். அக்காகிட்ட சொன்னேன்''

''அடடா! பதறிப்போயிருப்பாங்களே. ஏன் சொன்னே? ரொம்ப பயந்திட்டு இருப்பாங்க''- அமுதா சொல்ல, பத்மினிக்கு உறுத்தியது. அக்கா பதறவும் இல்லை பயந்து விடவும் இல்லை. மாறாக என்னையே பதறாதே உருகாதே என்கிறாள்.

''பத்மினி! உங்க மாமா ரொம்ப நைஸ்மேன் தெரியுமா? உன் கழுத்தில தாலி ஏறும்போது அவர் முகத்தைப் பார்க்கணுமே. அப்படியே கண்ல தண்ணி வந்திடுச்சு. தன்னோட மகளுக்கு கல்யாணம் பண்ணிப்பார்க்கும் ஒரு தந்தையின் நெகிழ்வு. நாங்களே அசந்திட்டோம்.

மீண்டும் சுரீரென்றது. 'உன் மாமவுக்கு உம்மேல ஒரு கண்ணு. அவர் கிட்ட இருந்து உன்னைக் காப்பாத்தத்தான் இந்த ஏற்பாட்டையே பண்ணினேன்'- அக்காவின் குரல் செவியில் அறைந்தது. அதன் முழு அர்த்தமும் புரிய கொதித்துப் போனாள் பத்மினி.

இல்லை. இது சத்தியமாய் உண்மை இல்லை. மாமா எப்பேர்ப்பட்ட உத்தமர். அவரைக் குறை சொல்ல இவளுக்கு எப்படி மனம் வந்தது? அதை நான் எப்படி நம்பினேன்? திருமணத்திற்கு முந்தைய

நாள் இரவு கூட இருவரும் தனித்து தானே இருந்தோம்.

அக்கா சொல்வது போல் மோசமானவராய் இருந்தால் அந்த தனிமையை பயன்படுத்தி இருப்பாரே? சாப்பாட்டைக் கூட அருகே இருந்து பரிமாற விடாமல் மெஹந்தி போட்டுக் கொள்ளச் சொல்லி அனுப்பினாரே! அக்காவின் பேச்சில் உண்மை இல்லை. ஏதோ தப்பு இருக்கிறது என்பதை உணரதுவங்கிய நேரம் அமுதா பத்மினியின் கையைப் பற்றி நிறுத்தினாள்.

''பத்மினி. இது தான் செகண்ட் புளோர். எங்கே போற?''

''ஸாரிக்கா! ஏதோ ஞாபகம்...''

''ம்ஹூம். இனிமே உன் புருஷன் ஞாபகம் மட்டும் தான் உனக்கு இருக்கணும். வா''- என நீண்ட வராந்தாவில் நடக்க, ஆனந்தன் எதிரே வந்தான்.

''என்ன அமுதா? இவ்வளவு நேரம்?''

''இல்லங்க. வரும்போது கோவிலுக்கு போயிட்டு வந்தோம்''

''சரி வாங்க''

''ஏங்க! வசந்துக்கு எப்படி இருக்கு? ஒண்ணும் பயப்படுற மாதிரி இல்லையே''.

''நோ. இப்ப பரவாயில்ல. ஜுரம் குறைஞ்சிடுச்சு. பட்ரெண்டு நாள் கம்ப்ளீட்டா பெட்ரெஸ்ட் எடுக்கணும்னு டாக்டர் சொல்லிட்டார். டிரிப்ஸ் ஏறிட்டு இருக்கு. இப்பத்தான் தூங்குறான்''- என்றவாறே அறையை அடைந்து கதவைத் திறந்தான்.

தவிக்கும் மனதோடு முதல் ஆளாய் உள்ளே நுழைந்தாள் பத்மினி. களைத்து சோர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் வசந்தன். நேற்று வரை கம்பீரமாய் பார்த்தவனை இப்படி படுக்கையில் பார்த்ததும் கண்கள் தளும்பின. யாரையும் பாராமல் நேராய் தன் கணவனின் அருகே சென்று கண்ணீரோடு அவன் முகத்தை வருடினாள்.

வசந்தனிடம் லேசாய் அசைவு தெரிய, சட்டென கைகளை இழுத்துக் கொண்டாள். புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டே அமராவதியை ஏறிட்டாள்.

''அத்தே! டாக்டர் என்ன சொன்னார்?''

''ஒண்ணும் பயப்பட வேண்டாம்ன்னு சொன்னாரம்மா. ரெண்டு நாள் பெட்ல வெக்கணும். ரெஸ்ட் எடுத்தா சரியாகிடும்னு சொல்றார்''

''வேற ஒண்ணும் இல்லையே! கண் விழிச்சு உங்களையெல்லாம் பார்த்தாரா? ஏதாவது பேசினாரா?''

''பார்த்தான்மா. பேசினான். பத்மினி இங்க வரவேண்டாம். பயந்திடுவா. வீட்லயே இருக்கட்டும்னு சொன்னான்''

பொங்கிய கண்ணீரை அடக்க முடியாமல் விம்மினாள் பத்மினி.

''அழாதேம்மா. அவனுக்கு ஒண்ணும் ஆகாது. மாத்திரை சாப்பிட்டதால தூங்குறான். ஜுரம் நல்லாக்குறைஞ்சிடுச்சு. பயப்படாதேம்மா''

''அத்தே! சாப்பாடு எதுவும் கொடுக்கலாம்னு சொன்னாங்களா?''- அமுதா கேட்க, மறுப்பாய் தலையசைத்தாள்.

''இல்லம்மா! இன்னிக்கு முழுதும் எதுவும் கொடுக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கார். நீயும், பத்மினியும் ஆனந்தனோட வீட்டுக்கு கிளம்புங்க. நானும், அப்பாவும் பார்த்துக்கிறோம்''

அவசரமாய் மறுத்தாள் பத்மினி. ''இல்ல. நான் எங்கேயும் போகல்ல. நான் இவர் கூடவே இருக்கேன் அத்தே! நீங்க வீட்டுக்குப் போங்க''

''இல்லம்மா. இது புது இடம். நீ சின்னப்பொண்ணு. தனியா இருக்க வேண்டாம். அமுதா கூட வீட்டுக்குப் போம்மா''

''இல்ல நான் இங்கேயே இருக்கேன்''

''அவன் கண் விழிச்சதும் என்னைத்தான் திட்டுவான்''

''அதெல்லாம் திட்டமாட்டார். நான் பேசிக்கிறேன்''

''சொன்னாக் கேளும்மா. நீ...''

''அமரா! பத்மினி சொல்றது தான் சரி. அவ இருக்கட்டும். நீ வீட்டுக்குக் கிளம்பு'' என்றார் ராஜசேகர்.

''என்னங்க நீங்களும் இப்படிச் சொல்றீங்க?''

''அவனை இங்கே விட்டுட்டு இவளால எப்படி வீட்ல நிம்மதியா இருக்க முடியும்? பேசாம அவன் கூடவே இருக்கட்டும். வசந்துக்கும் கொஞ்சம் தெம்பா இருக்கும். நீ கிளம்பு. நான் இங்கே இருக்கேன். ஆனந்தா! நீ சாப்பிட்டுட்டு ஆபீஸ் கிளம்பு. எதுவும் அவசரம்னா போன் பண்றேன்''

''சரிப்பா! நான் போயிட்டு டிபன் எடுத்திட்டு வர்றேன்''

''இப்ப எதுவும் வேணாம்ப்பா. பசிக்கல்ல''

''எவ்வளவு நேரம் சாப்பிடாம இருப்பீங்க? பாவம் பத்மினி ஒரு காபி கூட சாப்பிட்டிருக்க மாட்டா. நான் டிபன் எடுத்திட்டு வர்றேன். ரெண்டு பேரும் சாப்பிடுங்க. அம்மா போலாமா?''

''ம். பத்மினி! தைரியமா இரும்மா. மாமா கூட இருக்காங்க''

''சரி அத்தே!''

''என்னங்க புள்ளைங்களை பார்த்துக்கங்க. நான் சாயந்திரம் வர்றேன்''

''சரி. நீ வீட்டுக்கு போனதும் சாப்பிட்டுட்டு மறக்காம மாத்திரை போடு. அமுதா! அத்தைய கவனிச்சுக்கம்மா''

''நான் பார்த்துக்கிறேன் மாமா. போயிட்டு வர்றேன். பத்மினி! பார்த்துக்கோ. நான் ஈவ்னிங் வந்து பார்க்கிறேன்''- என்றவாறு வசந்தை நெருங்கி அவனது கலைந்து கேசத்தை ஒதுக்கு. நெற்றியில் கை வைத்துப் பார்த்து விட்டு கிளம்பினாள் அமுதா.

பத்மினி அமைதியாய் அனைவரையும் பார்த்துக் கொண்டிருந்தாள். இது தான் குடும்பம்! எத்தனை தங்கமான மனிதர்கள் இவர்கள்? இந்த வயதிலும் மனைவியின் மீது வெகு அக்கறையான மாம

னார். நேற்று வந்த என் மீது எத்தனை அக்கறை இவர்களுக்கு?

மாமியாராகட்டும், மருமகளாகட்டும், கணவனின் சகோதரனாகட்டும் ஒருவர் மீது ஒருவருக்கு எத்தனை அக்கறை? இவர்களையா ஏமாற்றுகாரர்கள் என்கிறாள் அக்கா? இந்தக் குடும்பத்தில் பிறந்த தன் கணவனும் நிச்சயம் நல்லவனாகத் தான் இருப்பான்.

அது அவனது ஒவ்வொரு செயலிலும் தெரிகிறதே. ஆனால் எதற்காக அத்தனை அவசரமாய் அக்காவிற்கு தெரியாமல் திருமணத்தை நடத்தினார்கள்? அதற்கான காரணம் மட்டும் புரியாமல் குழம்பித்தவித்தாள். நிச்சயமாய் அக்கா சொன்ன காரணமாய் இருக்காது.

வேறு என்ன காரணம்? தனது முதல் திருமணம் தெரிந்து விடக்கூடாது என்று நினைத்தானா? ஆனால் முதல் திருமணம் பற்றி எந்த பேச்சும் இல்லையே இந்த வீட்டில். என்னிடம் அனைவரும் ஒன்றாய் சேர்த்து மறைக்கிறார்கள்? யாரிடம் கேட்பது?

இவர் எப்படி என்னிடம் மறைக்கலாம்? இந்த ஒன்று தானே அவரிடம் என்னை நெருங்க விடாமல் தடுத்தது? இரண்டாம்தாரமாய் கொடுக்க மாமாவிற்கு எப்படி மனம் வந்தது? மாமா, அக்கா சொல்வது போல் தவறானவர் அல்ல. பணம் காசிற்கு ஆசைப்படுபவரும் அல்ல. பிறகேன் இந்தக் கல்யாணத்தை ரகசியமாய் முடித்து வைத்தார்''

பேசாமல் மாமாவிடமே கேட்டு விட்டால் என்ன? வேண்டாம். தன் கணவன் கண் விழிக்கட்டும். உடல் நிலை தேறி வீடு திரும்பட்டும். இவரிடமே கேட்டு விடலாம். ஏன் என்னிடம் உண்மையை மறைத்தாய் என்று கேட்டு விடலாம். அமுதா சொன்னது போல எதையும் நேரிடையாய் பேசித் தீர்த்து விடுவது தான் நல்லது.

ஆனால்... பத்மினி இதயம் நடுங்கியது. ஒருவேளை... ''ஆமாம் நான் திருமணமானவன் தான். மனைவியை பிரிந்தவன் தான். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்கிறாய்'' என்று அவன் கேட்டு விட்டால்?

ஒரே வாரத்தில் சுத்தமாய் அடையாளம் மாறியிருந்தான் கணேசன். எப்போதும் பளிச்சென்ற புன்னகையோடு தேனீயின் சுறுசுறுப்போடு வளையவருபவன் சாப்பிடாமல் வீட்டை விட்டு வெளியே வராமல், முகச்சவரம் செய்யாமல் நோயாளியாய் மாறியிருந்தான்.

இன்று சம்பள நாள். வேலையாட்களுக்கு சம்பளம் கொடுத்தாக வேண்டுமே என்று பணத்தோடு வீட்டை விட்டு வெளியே வந்தான். வழக்கம்போல் பைக்கை எடுக்க, அது பெட்ரோல் இல்லாமல் திணறியது. சலிப்பாய் பைக்கை பூட்டி சாவியை எடுத்து கைப்பையில் போட்டுக் கொண்டு கிளம்பினான்.

கம்பெனியை நெருங்கியதும் கடலை உருண்டை செய்யும் மணம் தெருவரை மணத்தது. தான் இல்லாவிட்டாலும் வேலை குறைவில்

லாமல் நடக்கின்றது என்ற எண்ணத்தோடு வாசலை மிதித்தவனின்
காதில் அந்த பேச்சு கேட்டது. எங்கேயோ கேட்டகுரல். கிசு கிசுப்
பாய் ஒலித்தது.

மனம் படபடத்தது. இது... இந்தக்குரல்... அன்று போனில் பேசிய
குரலாயிற்றே. இங்கே எப்படி? கணேசனின் ரத்தம் சூடேறி தாறுமா
றாய் கொதித்தது. உள்ளே செல்லாமல், செருப்பைக் கழற்றி விட்டு
சத்தம் வராமல் குரல் வந்த திசையில் இருந்த பக்கவாட்டு அறையை
நோக்கி மெல்ல நடந்தான்.

காதுகளை கூர்மையாக்கினான். இப்போது அறைக்குள்ளிருந்து
கேட்ட சம்பாஷனை தெளிவாய் கேட்டது. ஒன்று பரிச்சயமான
குரல். அட! இது கனகத்தில் குரல். கூடப்பேசுவது யார்? கதவு ச
ாத்தப்பட்டிருக்கு, அதன் இடைவெளியில் பார்வையை பதித்தவன்
உள்ளே இருந்தவளைக் கண்டதும் தீயை மிதித்தாற்போல் துடித்துப்
போனான்.

அன்று போனில் கேட்ட குரலுக்குச் சொந்தக்காரி பத்மினியின் அக்
காவா? ஐயோ! இவளா பத்மினியின் மீது சேற்றை வாரிப்பூசினாள்
ஏன்? எதற்காக அப்படிச் செய்தாள்? எதற்காக என் வாழ்வை சீர்கு
லைத்தாள்? கண்கள் சிவக்க, ஆத்திரமாய் கதவில் கை வைக்க முயன்
றவனை 'பத்மினி' என்ற பேச்சு தடுத்து நிறுத்தியது.

பத்மினியைப் பற்றித்தான் பேசுகிறாள். அதை ஏன் இத்தனை
ரகசியமாய் பேச வேண்டும்? சட்டென நகர்ந்து பின்புற ஜன்னலை
நெருங்கி காதை தீட்டிக் கொண்டான்.

''இப்ப அவ புருஷன் ஆஸ்பத்திரியிலயா இருக்கானாம்?''- தேன்
மிட்டாய்களை எண்ணி பாக்கெட்டுகளில் அடைத்துக் கொண்டே
கனகம் கேட்க, அலட்சியமாய் உதட்டைச் சுளித்தாள் பாகீரதி.

''அப்படித்தான் சொன்னா அவ? நல்லா திட்டினேன் நான்''

''ஏன் பாகீ?''

''பின்னே? நான் அவ்வளவு தூரம் சொல்லி அனுப்பியிருக்கேன்.
இவன் எப்படி என் வார்த்தையை மதிக்காம அவன் கூட குடும்பம்
நடத்தலாம்? அதான் உறைக்கிற மாதிரி நாலு வார்த்தை சொல்லியி
ருக்கேன். இனிமே அவன் பக்கத்தில கூட போகமாட்டா''- பாகீரதி
உறுதியாய் சொல்ல, கணேசன் துல்லியமாய் அதிர்ந்தான். என்ன செ
ால்கிறாள் இவள்?

''ஏன் பாகீ? உன் திட்டத்தையெல்லாம் மீறி எப்படியோ அவ கல்
யாணம் முடிஞ்சு போச்சு. இனிமே அவ தலைவிதி போல வாழட்
டும்ன்னு விட்டுற வேண்டியதுதானே''

''அதெப்படி விடுவேன் கனகம்? நான் இங்கே வாடகை வீட்ல
உட்கார்ந்து கஷ்டப்பட்டுட்டு இருக்கேன். அவளுக்கு பங்களா வாசம்
கேட்குதா? இந்த மிட்டாய் கடைக்காரனையே வெட்டி விட்டதுக்
குக் காரணம் இவன் வீடு வண்டின்னு சுகபோகமா இருக்கானேன்னு

தான்.

நான் இங்க கஷ்டப்பட்டு இருப்பேன். இவ அடுத்த தெருவில்
இருந்துகிட்டு இவன் கூட ஜாலியா கையை காட்டிட்டே வண்டியில
போவான்னு வயித்தெரிச்சல்ல தான் போன் பண்ணிப் பேசினேன்.
அந்த முட்டாப்பயலும் நம்பிட்டான். ஆனா... இப்பப் போயிருக்
காளே அது இதை விட பத்து மடங்கு பெரிய இடமாம்.

வந்து நின்ன காரைப் பார்க்கணுமே. பளபளன்னு புத்தம் புதுசா
மூணு கார். மூணுமே சொந்தக்கார்தானாம். நீயே சொல்லு கனகம்.
எனக்கு எப்படி இருந்திருக்கும்? அதான் அவனைப் பத்தி ஒண்ணு
க்கு நாலாச் சொல்லி அனுப்பியிருக்கேன்''- காழ்ப்புணர்ச்சியோடு செ
ான்னவளை கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டும் என்று எழுந்த
வேகத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் கணேசன்.

''உன் தங்கச்சி யோகக்காரி போலிருக்கு. அதான் அவளுக்கு வந்த
வரன் எல்லாமே நல்ல இடமா வந்திருக்கு. எல்லாம் தலையில எழு
தின மாதிரி தானே நடக்கும்? அவ நல்லா வாழணும்னு கடவுள் எழு
தியிருக்கான்''

''கடவுள் எழுதினதையே அழிச்சி எழுதினவ இந்த பாகீரதி.
இன்னும் கொஞ்ச நாள்லயே சுவத்தில அடிச்ச பந்து மாதிரி எங்கா
லடியில வந்து கிடப்பா பாரு.''

கனகம் அதிர்ந்தாள். ''என்ன சொல்ற பாகீ?''

''நான் சொன்னதெல்லாம் உண்மைன்னு நினைச்சிகிட்டு நிச்சயமா
அவனை நெருங்க விடமாட்டா. அவன் ஆம்பிளைதானே. எத்தனை
நாள் பொறுப்பான்? போடி உன் வீட்டுக்குன்னு அனுப்பி வெச்சிட
மாட்டான்? இவ தான் போக்கத்தவளாச்சே எங்கே போவாள்? எங்
கிட்டதானே வந்தாகணும்? இப்பக்கூட அவளுக்கு போன் பண்ணத்
தான் வந்தேன்.

எனக்கு கல்யாணமாகி நாலஞ்சு வருஷமாகுது. இன்னும் என்
வயித்தில ஒண்ணும் உண்டாகல்ல. இவமட்டும் புள்ளைகுட்டின்னு
சந்தோஷமா வாழலாமா? நான் விடுவேனா?''- பாகீரதி ஆத்திரமும்
ஆவேசமுமாய்க் கேட்க, கணேசனின் உடல் சில்லிட்டுப் போனது.

14

''கணேசா! நீ என்ன சொல்றே?''- தீப்பொறி
பறக்கும் கண்களோடு கேட்டான் தயாளன்.

''ஆமாண்ணா! உங்க மனைவி கனகத்திடம்
பேசியதை என் காதால கேட்டேன். எங்கிட்ட போன்ல
பேசினதும் அவங்க தானாம். இப்பக்கூட கல்யாண
மாகிப் போனாலும் அவ வாழமாட்டா. திரும்பி வந்தி
டுவாள்னு சொல்றாங்க. அண்ணா! உங்களுக்குத் தெரியாம பத்மினி
கிட்ட ஏதேதோ பேசி குழப்பியிருப்பாங்க போலிருக்கு''

''என்ன?''

''பத்மினி சந்தோஷமா வாழ மாட்டாள்னு உறுதியாச் சொல்றாங்க. எதுக்கும் நீங்க பத்மினி வீட்டுக்கு போன் பண்ணிப் பாருங்களேன். ஏதாவது பிரச்சனையாகிடப் போகுது'' பதட்டமாய் சொன்னவனைக் காணும்போது நெஞ்சம் வலித்தது.

தான் நேசித்த பெண்ணை இழப்பது எவ்வளவு கொடுமை என்பது அவனது முகத்தில் தெரிந்தது. அந்த இழப்பு தன் மனைவி செய்த சதியால் நிகழ்ந்தது என்று தெரிந்த பிறகும் அவள் மீது கோபப்படாமல் தான் விரும்பிய பெண்ணைக் காப்பதற்கு என்னிடம் ஓடி வந்திருக்கிறானே?

இவன் எத்தனை உத்தமனாய் இருக்க வேண்டும்? இந்த உத்தமன் தன் தங்கையின் கணவனாக வந்து விடக் கூடாது என்றா சதி செய்தாள்? உடன் பிறந்த ஒரு சகோதரியால் இப்படியெல்லாம் கூட நடக்க முடியுமா? என்ன காரணத்திற்காக அவள் இத்தனை கீழ்த்தரமான செயல்களை செய்து கொண்டிருக்கிறாள்? இன்றே இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்.

''அண்ணே! அதற்கு முன்னால பத்மினிக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொல்லுங்க. அவங்க அக்கா பேச்சைக் கேட்டுட்டு புருஷனோட சண்டை எதுவும் போட்டுடாம?''

''நேத்துல இருந்தே போன் பண்றேன். பெல் அடிக்குது. மாப்பிள்ளை போனை எடுக்க மாட்டேங்கிறார். ஏன்னு தெரியலை''

''அண்ணா! மாப்பிள்ளை நம்பர் மட்டும் தான் இருக்கா? அவங்க வீட்டு நம்பர் எதுவும் இல்லையா?''

''வீட்டு நம்பர் இல்ல... ஆனா அவங்க அப்பா நம்பர் இருக்கு''

''பிறகென்ன அண்ணே! அந்த நம்பருக்கு உடனே போன் பண்ணுங்க''

''போன் பண்ணி என்ன பேசுறது? எப்படிக் கேட்கிறது?''

''இது என்ன அண்ணே கேள்வி? மாப்பிள்ளைக்கு போன் பண்ணினேன். கிடைக்கலன்னு ஆரம்பியுங்க. பத்மினிகிட்ட பேசணும்னு சொல்லுங்க. பத்மினி லைன்ல வந்தா கொஞ்சம் எச்சரிக்கையா இருக்கச் சொல்லுங்க.

''ச... சரிப்பா''- என்றவாறே தன் போனை எடுத்து ராஜசேகரின் நம்பரில் தொடர்பு கொண்டான். வெகு நேரத்திற்கு பின்னே போனை எடுத்தார் ராஜசேகர்.

''ஹலோ! ராஜசேகர் ஹியர்''

''ஸார்! நான் தயாளன் பேசுறேன். சென்னையில இருந்து...''

''அடடே! நீங்களா தம்பி? எப்படியிருக்கீங்க? உங்க மனைவிக்கு இப்போ எப்படி இருக்கு? ஸாரி தம்பி! எங்களால உடனே கிளம்பி வர முடியல. அதனால மருமகளை மட்டும் அனுப்பி வெச்சிருக்கோம்''

''என்ன?''- பலமாய் அதிர்ந்தான் தயாளன். 'ய... யாரை? பத்மினியையா?

''ஆமா தம்பி. போன் வந்ததுல இருந்து அக்காவைப் பார்க்கணும்னு ஒரே அழுகை. வசந்த் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் கேட்கல்ல. அதான் எம் பெரிய பையன் கூட அனுப்பி வெச்சிருக்கேன். தப்பா எடுத்துக்காதீங்க தம்பி. வசந்த்தை இன்னிக்குத் தான் டிஸ்சார்ஜ் பண்றாங்க. அதனால நானும் அவன் அம்மாவும் ஹாஸ்பிடல்ல இருந்தாகணும். அவனுக்கும் உடம்பு தெம்பா இல்ல. அதனால தான் அவனை அனுப்ப முடியல்ல. தனியாப் போறேன்னு சொன்னா பத்மினி. சின்னப்பொண்ணை அப்படி அனுப்ப முடியாது இல்லையா? அதான் எம் மகனோட கார்ல அனுப்பி வெச்சிருக்கேன். அநேகமா இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவாங்கன்னு நினைக்கிறேன்''- ராஜசேகர் சொல்ல, தயாளனுக்கு தலைசுற்றியது.

பாகீரதி ஏதோ வேலை செய்திருக்கிறாள் என்று புரிந்தது. 'ஸார்! நான் வசந்த்கிட்ட பேசலாமா? அவருக்கு உடம்புக்கு?''

''ம்... இப்ப பரவாயில்லப்பா. எழுந்து உட்கார்ந்திருக்கான். பேசுங்க''- என வசந்திடம் கொடுத்தார்.

''அண்ணா! அண்ணிக்கு எப்படி இருக்கு?''

''வசந்த்! நான் உன்கிட்ட தனியா பேசணும். நிறைய பேசணும்''- தயாளனின் குரலில் தெரிந்த பதற்றமும் அவசரமும் வசந்திற்கு உடனே புரிந்தது.

''ஒன் மினிட் அண்ணா''- என்றவன் தந்தையிடம் நிமிர்ந்தான்.

''அப்பா! நான் தான் நல்லா இருக்கேனே. நீங்க அம்மாவை அழைச்சிட்டு போய் பி.பி. செக் பண்ணிட்டு அப்படியே பில் செட்டில் பண்ணிட்டு வாங்க. வீட்டுக்கு போகலாம்''

''சரிப்பா. பத்திரம். ரூம்லயே இரு''

''சரிப்பா''

''அமரா! வா. உனக்கு செக்- அப் முடிச்சிட்டு போயிடலாம்''- என மனைவியோடு ராஜசேகர் வெளியேற குரல் கொடுத்தான் வசந்தன்.

''சொல்லுங்கண்ணா! என்ன விஷயம்?''

''வசந்த்! என்ன நடக்குது அங்கே? முதல்ல உங்களுக்கு என்னாச்சு? ஏன் ஹாஸ்பிடல்ல இருக்கீங்க?''

''அண்ணா! எனக்கு லைட்டா பீவர். டாக்டர் உடனே ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணச் சொல்லிட்டார்''

''ஐயோ! இப்ப எப்படி இருக்கு?''

''பைன். சும்மா அலுப்புக்காய்ச்சல் தான் வேறொண்ணுமில்ல''

''வசந்த்! பத்மினி... உங்ககிட்ட நல்லபடியா நடந்துகிட்டாளா?''- தயக்கமாய் கேட்டான் தயாளன்.

''என்ன கேட்கிறீங்க?''

'' அவ ஏன் இங்கே வரணும்னு அழுது அடம்பிடிச்சு கிளம்பினா?''

''ஓ! அதுவா? உங்க வொய்ப்கிட்ட இருந்து போன் வந்ததாம். மாடிப்படியில இருந்து கிழே விழுந்திட்டாங்களாம். ஹாஸ்பிடல்ல இருக்கிறதாச் சொன்னாங்க. உடனே அழத் தொடங்கிட்டா. நான் டிஸ்சார்ஜ் ஆனதும் நாளைக்கு போகலாம்னு சொன்னேன். கேட்கல்ல. ஒரே அழுகை. அதான் அண்ணாவை அழைச்சிட்டு போகச் சொன்னேன்''

''என்ன வசந்த் நீங்க? என்கிட்ட ஒரு போன் பண்ணி கேட்டிருக்கலாமில்ல?''- தயாளனின் கேள்வியில் முகம் மாறினான் வசந்த்.

''அண்ணா?''

''வசந்த்! இங்கே அப்படி எதுவும் நடக்கல்ல. வேற எதுவெல்லாமோ நடந்திட்டு இருக்கு''- எனத் தொடங்கி கணேசன் மூலம் அறிந்த தகவலை சொல்ல, வசந்தன் அதிர்ந்து போனான்.

''அண்ணா! எ... என்ன சொல்றீங்க?''

''ஆமா வசந்த். இப்பத்தான் கணேசன் வந்து சொன்னான். அங்கே எதுவும் பிரச்சனை நடந்திடக் கூடாதுன்னு தான் போன் பண்ணினேன்''- தயாளன் பதற்றமாய் சொல்ல, சில கணநேர யோசிப்பிற்குப் பின் வசந்தன் நிதானமாய் சொன்னான்.

''அண்ணா! நடப்பது போல் நடக்கட்டும். இதுவும் நல்லதிற்குத் தான்''

''என்னப்பா சொல்ற?''

''ஆமா! நாம எத்தனை நாள் தான் அவ அக்கா பத்தின ரகசியத்தை ஒளிச்சு வைக்க முடியும்? கல்யாணம் நல்லபடியா நடக்கணும். பத்மினியோட மனசு நொந்திடக் கூடாதுன்னுதானே சொல்லாம விட்டோம். இப்போ கல்யாணமும் முடிஞ்சாச்சு. அதுக்குப் பிறகாவது அவங்களால பிரச்சனை இருக்காதுன்னு நாம நினைச்சோம். ஆனா அவங்க எப்போ எம் மனைவியை எங்கிட்ட இருந்து பிரிக்கணும்னு நினைச்சாங்களோ இனியும் நாம ஏன் அவங்களோட சதித் திட்டங்களை மறைக்கணும்?''

'இதுக்கு மேலயும் நாம மூடி மூடி வெச்சா அந்த வன்மமே அண்ணிய கொலைகாரியா மாத்திடும். அதனால எல்லாத்தையும் வெளிப்படையா பேசிடுங்க. நானும் இப்பவே கிளம்பி வர்றேன்''

''வசந்த்! உன் உடம்பு முடியாம இருக்கும்போது இவ்வளவு தூரம் அலைய வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்''

''இல்லண்ணா! அவங்க அக்கா பண்ணிய துரோகத்தை நிச்சயமா பத்மினியால தாங்கிக்க முடியாது. துடிச்சுப் போயிடுவா. அவ கண் கலங்கக் கூடாது. நான் வர்றேன். நீங்க போனை வெச்சிடுங்க''- வசந்தன் போனை வைத்து விட, கலக்கமாய் தனது போனை கட் பண்ணினான் தயாளன்.

''என்ன அண்ணா சொன்னார்?''

''எல்லாத்தையும் பத்மினிகிட்ட சொல்லச் சொல்றார்''

''அது தான் சரி அண்ணா. நீங்க உடனே வீட்டுக்குப் போங்க. பத்மினிகிட்ட பேசுங்க. என்னோட வாழ்க்கை மாதிரி அவ வாழ்க்கையும் பலியாகிடப் போகுது. வாங்கண்ணா. என் பைக்லேயே போயிடலாம்.

அரைமணி நேரத்தில் வீட்டை நெருங்கி விட, தெருமுனையிலே இறக்கி விட்டான் கணேசன்.

''அண்ணா! பார்த்து பொறுமையா பேசுங்க. நான் கம்பெனிக்கு போறேன்''

''சரிப்பா''- என்றவாறு இறுகிய முகத்தோடு நடந்து வீட்டை அடைந்தபோது வாசலில் நின்று யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் பாகீரதி. கணவனைக் கண்டதும் அவளது பதற்றம் அதிகரித்தது.

''எ... என்னங்க இப்பவே வந்திட்டீங்க? ராத்திரி நேரமாகும்னு சொன்னீங்க?''

''ஏன் வரக்கூடாதா?''

''அ... அப்...படியில்ல. என்னங்க நடந்து வர்றீங்க?''- என்றவாறே தெருவை ஒருமுறை தவிப்பாய் எட்டிப்பார்த்தாள்.

''யாரையாவது எதிர்பார்க்கிறியா?''

''இ... இல்லையே... சும்மா தான் நிக்கிறேன்''

''உள்ளே வா!''- என உள்ளே சென்றவனின் பின்னால் லேசான கலக்கத்தோடு சென்றாள் பாகீரதி. கணவனின் முகமும், பேச்சும் சரியில்லையே''- உள்ளே நுழைந்தவன் சாப்பாடு பையை தூக்கிப் போட்டான். அவள் கூந்தலை கொத்தாய் பற்றினான். வலியில் கத்தினாள்.

''கட்டினவளை கை நீட்டி அடிக்கிறதைப் பாவம்னு நினைக்கிறவன் நான். அதே பாவத்தை என்னை செய்ய வெச்சுடாதே. ஒழுங்கா உண்மையைச் சொல்லிடு''

''எ...என்...ன... சொல்லணும்?''

''கணேசனுக்கு போன் பண்ணினது. வசந்தனுக்கு போன் பண்ணினது நீ தானே? இப்ப பத்மினிகிட்ட என்ன சொல்லி வரவழைச்ச?''

''என்ன உளர்றீங்க? எனக்கு ஒண்ணுமே புரியல்ல''

''இப்பப் புரியும்டி''- என்றவாறு பளாரென அறைந்தான். பொறி கலங்கிப் போனாள் பாகீரதி. உழைத்து இறுகிப் போன கரத்தால் வாங்கிய முதல் அடி. காது செவிடாகிப் போனது போல் இருக்க, அவன் அடுத்த அறைக்கு கையை ஓங்கும் முன் அவனிடமிருந்து விலகினாள்.

''உங்களுக்கு என்ன பேயா பிடிச்சிருக்கு? இப்ப ஏன் என்னை அடிக்கிறீங்க?''

''உன்னை அடிச்சா போதாதுடி. கொல்லணும். கூடப் பொறந்தவளோட வாழ்க்கையையே அழிக்கணும்னு நினைக்கிறீயே. உன்னை விட்டு வைச்சா இன்னும் என்னவெல்லாம் செய்வே?''- என்றவாறு அவளது கழுத்தைப் பற்றி நெரிக்க, வாசலில் பத்மினியின் குரல் கிறீச்சிட்டது.

''மாமா! என்ன காரியம் பண்றீங்க?''- வேகமாய் வந்து அவனது கைகளை விலக்கி, தமக்கையை மீட்டாள். பாகீரதி கண்ணீர் விட்டாள்.

''பார்த்தியா பத்து? உம் மாமாவைப் பத்தி சொல்லும் போதெல்லாம் நம்பமாட்டியே? இப்ப பார்க்கிறியே. இதுதான் உன்மாமாவோட உண்மையான குணம். இதையெல்லாம் உனக்குத் தெரியாம நான் தான் இத்தனை நாளா மறைச்சேன்''

''என்னை அடைய முடியலன்ற ஆத்திரத்தில தானே என் அக்காவை இப்படி இம்சிக்கிறீங்க?''- பத்மினி ஆவேசமாய்க் கேட்க, காதுகளை பொத்திக் கொண்டான்.

''சிவசிவா என்ன கொடுமை இது? பத்மினி! நீயா பேசுற?''

''பேச வெச்சிட்டீங்களே! என் அக்கா எனக்கு அம்மா மாதிரி. அவளை என் கண்ணு முன்னால அடிக்கிறீங்க. கழுத்தை நெரிச்சு கொல்லப் போறீங்க. உங்களை எப்படி நம்புறது?''

''நான் சொன்னா நம்புவியா கண்ணு?''- பர்வதத்தின் குரல் கேட்டு, திடுக்கிட்டு திரும்பினர் மூவரும். தயாளனின் முகம் மலர, பாகீரதியின் முகம் இருண்டது.

''பாட்டி! நீங்க எங்க போனீங்க இவ்வளவு நேரம்? நீ இல்லாத நேரமா பார்த்து இந்த மாமா என்ன பண்ணினார் தெரியுமா?''

எம்பேரன் தங்கமானவன். அவன் எது செய்தாலும் அதுல ஒரு நியாயம் இருக்கும்''- பர்வதம் உறுதியாய்ச் சொல்ல, பாகீரதி அவளிடம் பாய்ந்தாள்.

''பாட்டி! உங்களை யார் இங்கே கூப்பிட்டது? உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போக வேண்டியது தானே. போங்க வெளியே''

பத்மினியின் முகம் மாறியது. ''அக்கா! என்ன நீ பாட்டியை மரியாதை இல்லாமல் பேசுகிறாய். அவங்க நம்மை வளர்த்தவங்க''

''ஹுக்கும். என்னத்தை பெரிசா வளர்த்திட்டாங்க. பழைய சோறும், ஊறுகாயும் போட்டு வளர்த்தா அது வளர்ப்பு ஆகிடுமா?''

''அந்த சாப்பாட்டுக்கே வழியில்லாம எத்தனையோ பேர் இருக்காங்க தெரியுமா? உங்களை ஒரு குறை தெரியாம வளர்த்தேனே. உன் புத்தியில மட்டும் எப்படி பாகீ நச்சு கலந்தது? இந்த புள்ள வாழ்க்கையை கெடுக்க உனக்கு எப்படி மனசு வந்தது?

தயக்கமாய் வாசலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தான் கணேசன்.

''தம்பி! உள்ளே வாய்யா! எங்கிட்ட சொன்னதையே இந்த குழந்தை

கிட்டேயும் சொல்லு. அப்படியாவது இதுக்கு புத்திதெளியட்டும்''

''பாட்டி! நீங்க... என்ன சொல்றீங்க?''

''பத்துக்கண்ணு. இதுவரைக்கும் உனக்கு வந்த நல்லவரனையெல்லாம் கெடுத்தது இவதாம்மா. நம்ம ஊர்ல தர்மகர்த்தா பையனுக்கு உன்னைக் கேட்டு வந்தாங்க. அதை இவகிட்ட சொன்னேன். அப்பவே ஏதேதோ சொல்லி உன்னை கூட்டிட்டு வந்திட்டா.

எனக்கு அப்ப புரியல்ல. ஆனா இப்பப் புரியுது. அவன் பெரிய பணக்காரன் நில புலன் கிடக்கு. அவனைக் கட்டிகிட்டா நீ ஊருக்கே எஜமானியம்மா ஆகிடுவேன்னு பொறாமையில கூட்டிட்டு வந்திருக்கா''

''அது மட்டுமில்ல பத்மினி... உன்னைப் பத்தி எங்கிட்ட தப்பு தப்பா போன்ல சொன்னது உன் அக்கா தான். அதை கனகத்துகிட்ட அவங்க சொன்னதை நானே கேட்டேன்''

''பத்மினி! நீ இப்ப வாழுற வாழ்க்கையையே கெடுக்கணும்னு ஏதேதோ சதி பண்றாம்மா. அதான் ஆத்திரம் தாங்காம கை நீட்டிட்டேன்''- மூவருமாய் மாறி மாறி பேச பத்மினி நம்ப முடியாத அதிர்ச்சியோடு பாகீரதியை ஏறிட்டாள்.

பாகீரதியின் முகம் கருங்கல்லாய் மாறியிருந்தது. அவளது கண்களில் ஒருவித வெறியைக் கண்டு திகைப்பாய் தயாளனை ஏறிட்டாள்.

''மாமா! ஏன் இப்படியெல்லாம் சொல்றீங்க? அக்கா அப்படியெல்லாம் செய்ய மாட்டா. எனக்குத் தெரியும்''

''பத்மினி! வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைக்கிறியே. உனக்கு ஒண்ணு தெரியுமா? வசந்த்கிட்ட கூட போன் பண்ணி நீ இந்த கணேசனைத் தான் நீ விரும்புறேன்னு சொல்லியிருக்கா! இந்தக் கல்யாணத்தை நிறுத்திடு. பத்மினிக்கு உன்னை பிடிக்கலைன்னு சொன்னாளாம்''

''எ..என்..ன..?''

''வசந்த் நல்ல பையனா இருந்ததால உடனே எனக்கு போன் பண்ணி கூட பேசாம நேர்லயே வந்துட்டான். எல்லா விபரமும் சொன்னான். அப்பத்தான் எனக்கு இவமேல சந்தேகம் வந்தது. இதுக்கு முன்னால வந்த சோடா கம்பெனி மாப்பிள்ளை, ஹோட்டல் மாப்பிள்ளை எல்லாத்தையும் இவ தான் விரட்டியிருக்கா.

அதுவும் எப்படி? ஒருத்தன் மாற்றி ஒருத்தனையா உன் கூட சம்பந்தப்படுத்தி... ச்சே! சொல்லவே கூசுது. இதுல என்னை உன் கூட வெச்சு சந்தேகப்பட்டா. அப்பத்தான் நானும் வசந்தும் சேர்ந்து ஒரு முடிவெடுத்தோம்.

இவளுக்குத் தெரியாம உன் கல்யாணத்தை முடிச்சாத்தான் உண்டுன்னு முடிவு பண்ணி நான் தான் இவளை கும்பகோணம் அனுப்பினேன். பாட்டிம்மாவையும் வரவழைச்சு எல்லா உண்மைகளையும் சொன்னேன். நாங்க நினைச்சபடி உன் கல்யாணம் நல்லபடியா நடந்

தது.

அதுக்கப்புறம் இவளால உனக்கு எந்த கஷ்டமும் வந்திடக்கூடா துன்னு தான் இவளை கூடவே இருந்து கண்காணித்தேன். அப்படியும் எனக்கே தெரியாம ஏதேதோ பேசி உன் மனசைக் கலைச்சிருக்கா. கணேசன் வந்து சொன்ன பிறகு தான் இவளோட முழு வேலையும் தெரிஞ்சிருக்கு''

பத்மினி உயிரற்ற உடலாய் உறைந்து நிற்க- பாகீரதியின் கண்களில் ஏமாற்றம் இயலாமை வெறுப்பு எல்லாம் தெரிந்தது. தன்னை மீறி தன் கணவன் இவ்வளவு காரியம் செய்து விட்டானே என்ற ஆத்திரம் அவளது ரத்தத்தைக் கொதிக்க வைத்தது.

''பத்மினி! ஒரு தகப்பன் ஸ்தானத்தில் இருந்து சொல்றேம்மா. வசந்தன் ரொம்ப நல்லவன். இவ பேச்சைக் கேட்டு அவனை தண்டிச் சிடாதே. உன் வாழ்க்கையை நீயே அழிச்சிடாதே. நீ உடனே திருச்சிக்கு கிளம்பு. நானே கொண்டு போய் விட்டுடுறேன்''- தயாளன் சொல்ல, ஒளியிழந்த கண்களோடு அவனை ஏறிட்டாள்.

15

''மாமா! என்னை மன்னிச்சிடுங்க மாமா. யார் என்ன சொல்லியிருந்தாலும் நான் உங்களை சந்தேகப் பட்டிருக்கக் கூடாது''

''விடும்மா. நான் வருத்தப்படலல''

''கணேஷ்! உங்களுக்கு ரொம்ப நன்றி கணேஷ். உங்களால தான் என் கண் திறந்திருக்கு. இத்தனை நாளா கண் இருந்தும் குருடாத்தான் வாழ்ந்திருக்கேன். தேங்க்யூ கணேஷ்''

''உன் லைப் சந்தோஷமா இருந்தா போதும் பத்மினி''

''மாமா! நான் எங்க வீட்டுக்கு போகணும் மாமா. என்னை பஸ் ஏத்தி விடுறீங்களா?''- பத்மினி கேட்டதும் தயாளன்-

''வசந்தோட அண்ணன் தானேம்மா உன்னைக் கூட்டிட்டு வந்தார். அவரை எங்கே? நடந்த களேபரத்தில நான் கேட்க மறந்திட்டேன்''

''இங்கே இதெல்லாம் நடக்கும்னு தெரியுமோ என்னவோ. என் கணவர் தெருமுனையிலயே இறக்கி விட்டுட்டு கிளம்பச் சொல்லி கார்ல வரும்போதே போன் பண்ணிட்டார்'' அதுவும் நல்லதாப் போச்சு''

பாகீரதி இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை.

''அக்கா! இனி நமக்குள்ள பழைய ஒட்டுதல் வராது. விட்டுடலாம். இனியாவது உம்புருஷனை நம்பு. அவரோட வருமானத்தில் நிறைவா குடும்பம் நடத்து. மாமா ஒரு தெய்வம். அவரை பூஜிக்காட்டாலும் பரவாயில்ல. தூற்றாதே.

நீ என்னைப் பத்தி அசிங்கமா என்ன சொல்லியிருந்தாலும்

எம் புருஷன் என்கிட்ட ஒரு வார்த்தை கூட கேட்கல. இனி அவர் தான் எனக்கு எல்லாம். நான் போறேன்''- வேகமாய் வெளியேறியவள் வாசலை விட்டு இறங்கவும் வசந்தின் கார் வேகமாய் வந்து நின்றது.

பதற்றமாய் இறங்கி வந்தவனைக் கண்டதும் உறைந்திருந்த கண்ணீர் உடைப்பெடுத்துக் கொள்ள வீதி என்றும் பாராமல் கணவனைக் கட்டிக் கொண்டாள்.

''உங்களுக்கு எம்மேல கோபமே வரலையா?''

''எதுக்கு?''

''அன்னிக்கு முதல்நாளிலே என்னால தான் வெளியே போய் படுத்து உடம்பு முடியாமப் போச்சு. அதுக்கப்புறம் கூட ஹாஸ்பிடல்ல அப்படியே விட்டுட்டு ஊருக்கு வந்துட்டேன். உங்களை நான் ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன். எடுத்தெறிஞ்சு பேசிட்டேன். என்னை நீங்க கோவிச்சுக்கவே இல்லையே''

''என்னால உன்மேல கோபப்பட முடியாது பத்மினி''

''ஏன்?''

''ஏன்னா நான் உன்னை நேசிக்கிறேன். உன்னைப் பார்த்த நிமிஷத்தில இருந்தே''- கண்களில் நேசம் மின்ன சொன்ன கணவனை மனம் நிறைந்த நேசத்தோடு இன்னும் இறுக்கமாய் அணைத்துக் கொண்டாள் பத்மினி.

முற்றும்

பட்டுச்சேலை
பரிசு பெற்றவர்கள்

நவம்பர்-01, 2012 **பதில்: இளங்கோஅடிகள்**

1. எஸ். கோகிலா, சூரம்பட்டி, ஈரோடு - 638 009.
2. எஸ். ஷாலினி, தர்மபுரி - 636 704.
3. து. உமாதேவி, கோவை - 641 012.